சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே!

(கிறிஸ்தவத்தின் நிழலே சைவமும் வைணவமும்.
மறுக்க முடியாத உண்மைகள்...)

எஸ். தாயப்பன்

"சத்தியத்தையும் அறிவீர்கள்,
சத்தியம் உங்களை விடுதலையாக்கும்"
(யோவான் 8:32)

சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே !

எஸ். தாயப்பன்

(கிறிஸ்தவத்தின் நிழலே சைவமும் வைணமும்.
மறுக்க முடியாத உண்மைகள்)

நன்கொடை ரூ.10/-

சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே

முதற் பதிப்பு – அக்டோபர் 2010 – 10,000 பிரதிகள்

ஆசிரியரின் பிற நூல்கள் :

என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (தமிழ்)– 2,20,000 பிரதிகள்

My Cry & Joyful New life (English)- 35,000 பிரதிகள்

என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (கன்னடம்)– 20,000 பிரதிகள்

என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (மலையாளம்)– 17,000 பிரதிகள்

என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (தெலுங்கு)– 5,000 பிரதிகள்

சித்தர்கள் கண்ட மெய்ப் பொருள் (தமிழ்) – 75,000 பிரதிகள்

பாவத்தின் சம்பளம் நரகம் – 70,000 பிரதிகள்

VCD– எனது சாட்சியும் செய்தியும் – 1,65,000 சீடிக்கள்

VCD– எழுந்து கட்டுவோம் – 5,000 சீடிக்கள்

இயேசு கிறிஸ்து உன்னோடு பேசுகிறார் – 20,000 பிரதிகள்

இந்தியாவுக்கு இயேசு கிறிஸ்து தேவை ஏன்? – 20,000 பிரதிகள்

கிறிஸ்தவர்களின் 100 சந்தேகங்களுக்குப் பதில் – 10,000 பிரதிகள்

இந்த நூல்கள், மற்றும் VCD கிடைக்கும் முகவரி :

எஸ். தாயப்பன்
12, ஜி.டி.நாயுடு தெரு,
பாலாஜி அவென்யூ – 1
சேலையூர் PO, சென்னை – 600 073
தொலைபேசி : 044–22234526 e-mail : sakthiprabha@yahoo.com

நூலை அனுப்ப சில விதிகள்:

ஒவ்வொரு நூலுக்கும் **VCD**க்கும் நன்கொடை ரூ.10 + தபால் செலவு ரூ.1/–. **MO, DD** அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்கள் முகவரியை **MO** பாரத்தின் அடியில் உள்ள தகவல் பகுதியில் தெளிவாக, பின்கோடு நம்பருடன் எழுதி

அனுப்புங்கள்.உங்கள் டெலிபோன், செல்போன் எண்களை கண்டிப்பாக எழுதவும். **செக் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது.** MO, DD பெற்றுக் கொண்ட பிறகே நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

VCD அனுப்ப தபால் செலவு மட்டும் : –

1 முதல் 15 VCD அனுப்ப ரூ.20/–
16 முதல் 25 வரை VCD அனுப்ப ரூ.35/–
100 VCD க்கு மேல் மற்றும் அதிக புத்தகம் வேண்டுமானால், அவைகள் **KPN Parcel Service** மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

நேரில் வர:

நேரில் நூல்களை பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் கிழக்கு தாம்பரம் கிறிஸ்டியன் காலேஜ் பஸ் ஸ்டாப்பிலிருந்து வேளச்சேரி மார்க்கமாக கிளம்பும் அனைத்து M.சீரிஸ் மற்றும் வெள்ளைபோர்டு பஸ்களில் ஏறி கேம்ப் ரோடுக்கு அடுத்த பஸ் ஸ்டாப்பான மஹாலட்சுமி நகரில் இறங்கவும். இடது புறம் உள்ள சிட்லபாக்கம் மெயின் ரோட்டில் 1/2 கிலோ மீட்டர் உள்ளே வரவும். வலது புறம் K.K. மெடிக்கல் ஷாப்பை அடுத்துள்ள வலது புற ஜி.டி.நாயுடு தெருவில், இடது புறத்தில் இரண்டாவது வீடு.

பொருளடக்கம்

நான் பிறந்த ஊர் 11
ஆற்றுக் கரையெல்லாம் தோப்பு 11
அரசமரத்துப் பிள்ளையார் 12
என் குழந்தை உள்ளத்தை குழப்பிய கேள்விகள் 13
மரத்தை ஏன் மூணு தடவை சுத்தணும்? 13
சந்தனம், குங்குமப் பொட்டின் அர்த்தம் என்ன? 14
சத்தியத்தைத் தேடினேன் 15
இயேசு என்னைத் தொட்டார் 15
விளக்கம் தந்த வேதாகமம் 16
திருக்குறள் கிறிஸ்தவ உபதேசங்களின் முதல் தமிழ்நூல் 17
சைவமும் வைணமும் கிறிஸ்தவமே 17
உலக நாகரீகம் 19
திராவிடர்கள் 20
சிறப்பான சிந்துவெளி நாகரீகமும் அதன் அழிவும் 20
ஆதி இந்திய கிறிஸ்தவத்தால் தோன்றிய சைவமும், வைணமும் 21
சிவஞான போதம் 21
சிவஞான போதத்தின் 12 சூத்திரங்களில் இருப்பவை 21
மனிதரை மீட்க கடவுள் மனிதனானார் 25
சித்தர்களின் சித்திரவதை 26
கடவுள் மனிதனாகும் திட்டம் 27
கடவுளின் திட்ட செயலாக்கம் 27
கடவுள் மனிதனாக அவதரித்தல் 28
கடவுள் அவதார நற்செய்தி 29
இந்தியாவிற்கு நற்செய்தி 29
அப்போது இந்தியாவின் நிலை 30
அந்நியர்களின் ஆக்கிரமிப்பு 30
புத்த மதத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் 31
சமண மதத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் 31
திருக்குறளில் தோமாவின் உபதேசங்கள் 32
சைவம் 33
வைணவம் 33
ஆலய வழிபாடு; சைவ வைணவக் கோயில்கள் 34
நானே பலியாயிருக்கிறேன் 58

இந்த உலகத்திற்கு ஒளியாக 58
சத்தியப் பிரம்மன் இயேசு 58
உள்ளத்தில் உறையும் உன்னத தேவன் 59
இறைவன் வாசம் செய்யும் இடம் 59
நம்மில் வாசம் செய்யும் தூய ஆவியானவர் 59
மறுமையில் மகிமையின் சரீரம் 60
அனைவருக்கும் ஆன்மீக விடுதலை 61
நாம் அனைவருமே கடவுளின் பிள்ளைகள் தான் 62
இதுவரை நாம் பார்த்தது என்ன? 63
இந்துக்களின் பக்தி வைராக்கியத்துக்கு ஈடு இணை ஏது? 66
இத்தனை செய்தும் ஏன் ஆசீர்வாதம் இல்லை? 67
நிழல் நிஜமாகாதே. 68
கில்ட் கில்ட்டுத் தான் 68
பக்தியில் வளரணும் 68
சத்தியம் எது? 69
இரத்தம் சிந்தாமல் பாவ மன்னிப்பு இல்லை 69
பாவப் பரிகாரி யார்? 70
ஆவியான தேவனுக்கு உருவமில்லையே 70
விக்கிரஹத்தினால் ஆசீர்வாதமா? சாபமா? 70
சத்யமேவ ஜெயதே 72
பக்தி நம்மை பண்படுத்தணும் 72
நம்மை மாற்ற வல்ல தேவன் யார்? 73
செய்ய வேண்டியது எல்லாம் என்ன? 73
செய்த பாவங்களை அறிக்கை இடு 74
கிறிஸ்துவில், அவரின் கிருபையில் வளருங்கள் 74
ஆன்மீக அறிவை விரிவாக்கும் அருமையான சூஜடுகூ 75
உங்களால பரலோகமே களி கூறும் 75
ஒருவனை மரணத்திலிருந்து இரட்சிக்கிறீர்கள் 76
பரலோக பிரஜைகள் ஆவோம் வாருங்கள் 76

உலகத் தமிழர் ஆன்மவியல் இயக்கம்

278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை - 600 023. ☏ + 9144 - 26740457, 26743842, 9444817394, 9840003842
Email: tamilarsamayam2010@gmail.com

பேராசிரியர் முனைவர் **மு. தெய்வநாயகம்** M.A.,Ph.D., நிறுவனர்

முனைவர் **தெ.தேவகலா** M.A., M.Phil,Ph.D., உலக அமைப்பாளர்

தேதி

2	7	1	0	2	0	1	0

முன்னுரை - வரலாற்றுரை

இந்தக் காலத்தில் இப்படியொரு தலைப்பா?

தலைப்பைப் பார்த்தால் இந்த ஆராய்ச்சி நூல் பல்கலைக் கழக ஆராய்ச்சி யாளர் ஒருவரால் எழுதப்பட்டுள்ளதோ என்று எண்ணத் தோன்றும். 'அந்நிய தெய்வங்களின் பெயரை உச்சரிக்கவும் கூடாது' என்பதை உறுதியாய் நம்புவோர் கிறிஸ்தவர்கள். ஆனால், இந்தக் காலத்தில் **'சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே'** என இப்படியொரு தலைப்பில் நற்செய்திப் பணியாளர் சகோ. தாயப்பன் அவர்கள் எழுதக் காரணமென்ன? ஒரு நற்செய்திப் பணியாளர் தனது நேரத்தையும் திறனையும் செலவழித்து இப்படி யொரு தலைப்பில் எழுதுவதின் பின்னணி என்ன என்பதைப் பார்க்கும் முன் ஆசிரியரின் உள் நோக்கத்தை அறிவது மிகவும் இன்றியமையாதது.

> *"என்னை ஒரு கலக்கு கலக்குன இந்த விஷயத்தையும் உங்க எல்லார்கிட்டேயும் சொல்லிஉங்களையும் ஒரு கலக்கு கலக்கணு மேங்கிறதுக்காகத்தான் இதை எடுத்து எழுதுகிறேன்.,..... இந்த வாழ்க்கைக்குப் பிறகு இருக்கிற நித்திய வாழ்க்கையிலே.. இறைவனோட இருக்கணும். அந்தப் பேராசையிலதான் இதைச் செய்யறேன். 68 வயசுலேயும் ஓடிக்கிட்டு இருக்கேன். இது மதமாற்றம் அல்ல. மனமாற்றம்" (பக்.18,19)*

என்று அவர் எழுதியிருப்பது, தன் சொந்த இனம் இரட்சிக்கப்பட வேண்டுமே என்று மிகவும் பாரத்தோடு திருப்பணி புரிந்த பரிசுத்த பவுலடிகளை நினைவுபடுத்துகின்றது.

> *'சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது'* (ரோமர் 10:1)

என்று பரிசுத்த பவுலடிகள் மிகுந்த மனப் பாரத்தோடு கூறியதைப் போன்று, தம் இன மக்கள் இரட்சிக்கப்பட்டு, இறையனுபவத்திற்குள் வர வேண்டுமே யென்ற மிகுந்த ஆதங்கத்தோடும் உருக்கமான அன்போடும் ஆசிரியர் இந்நூலை எழுதியிருப்பதை இதைப் படிப்போர் நன்கு உணர முடியும்.

எளிமையும் தாழ்மையும்:

இவ்வளவு எளிமையாகக் கூற முடியுமா என வியக்குமளவிற்கு அரிய ஆய்வுக் கருத்துகளை மிக எளிமையாக மிகுந்த மனப் பாரத்தோடு அவர் எழுதியுள்ள முறை மிகவும் வரவேற்கத்தக்கது. இந் நூல் மூலம் ஏராளமான ஆன்மாக்கள்

இறையனுபவத்தைப் பெறப்போவதை நினைக்கும்போதே மிகவும் மகிழ்வாக உள்ளது.

> *"இது எல்லாமே நானே ஆராய்ச்சி பண்ணி நோண்டி, துருவி எடுத்த சமாச்சாரங்கள்னு நினைச்சுடாதீங்க. சில புண்ணிய வான்கள் கஷ்டப்பட்டு இராத்திரி பகலா அலசி ஆராய்ந்து எடுத்து எழுதினதிலே கொஞ்சுண்டு அப்படியே சாம்பிளுக்கு என்னுடைய மசாலாவையும் சேர்த்து உங்க முன்னாடி படைக்கிறேன்' (ப.19)*

என்று அவர் எழுதியிருப்பது, அவருடைய தாழ்மையான, நேர்மையான உயரிய பண்பையும் இந்த ஆராய்ச்சிக் கருத்துகளுக்கான வரலாற்றுப் பின்னணியையும் நாம் புரிந்து கொள்ளத் துணை புரிகின்றன.

சைவம், வைணவம் கிறிஸ்தவமே - விவாதமும் வீடியோ ஆதாரமும்

இந்த ஆராய்ச்சி பல்கலைக் கழக ஆராய்ச்சி அறிஞர் வழி தக்க வரலாற்றுச் சான்றுகளுடன் வெளிவந்துள்ள வரலாற்று உண்மையாகும். இதற்கு ஒரு வரலாறு இருக்கிறது.

முதல் முதல் இந்திய வரலாற்றிலேயே,

- **திருக்குறள் ஒரு கிறிஸ்தவ நூலே என்பதையும்**
- **சைவ, வைணவ சமயங்கள் தோமா வழிக் கிறிஸ்தவக் கிளைகளே**

என்பதையும் கண்டுபிடித்து 1968 முதல் நிறுவி வருபவர் பேராசிரியர் முனைவர் மு. தெய்வநாயகம் ஆவார்.

இறை பணியாளர்களுக்குக் கடவுளால் கொடுக்கப்படும் கட்டளைகளும் பணிகளும் வெவ்வேறு கோணங்களில் அமைவது இயல்பே. அவ்வகையில் முனைவர் மு. தெய்வநாயகம் அவர்களுக்குக் கடவுள் கொடுத்த கட்டளை, இன விடுதலையோடு கூடிய ஆன்மீக விடுதலைப் பணி ஆகும். 1968 இல் இத்தகைய ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட இவர், 1979இல் பின்வரும் வெளிப்பாட்டைப் பெற்றார்.

> *"தமிழ் இனம் அல்லது திராவிட இனத்திற்குப் புத்துயிர் கொடுக்கப்போகின்றேன், இதைக் கூறி அறிவிக்கும் கருவியாக நீ பயன்படுவாய். உடனே இதை எழுதி வைத்துக்கொள்"*

என்று ஐயா தெய்வநாயகத்திடம் கடவுள் தெளிவாகவே தம் திட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார். கடவுளின் வெளிப்பாட்டையும் தரிசனத்தையும் அப்படியே அவர் எழுதி வைத்துள்ளதால் இன்றைக்கும் அவற்றை எழுத் துருவில் காணலாம். ஆராய்ச்சி ஊழியத்தில் கடவுள் அவரைப் பயன்படுத்தி வருகின்றார்.

திருக்குறள் கிறிஸ்தவ நூலே - விவாதமும் வெற்றியும் :

முனைவர் தெய்வநாயகம் கூறுவதைப் போல் திருவள்ளுவரின் கோட்பாடுகள் கிறித்தவக் கோட்பாடுகள்தாமா? என்பதைக் கண்டறிய கிறித்தவக் கலைத் தொடர்பு நிலைய இயக்குநர் அருள்மிகு சா. சுவிசேஷமுத்து அவர்கள், 'திருக்குறள் ஆய்வு மாநாடு' ஒன்று 1972-ஆம் ஆண்டு மே மாதம் 3, 4 தேதிகளில் சென்னையில் நடத்தினார். ஐயா தெய்வநாயகம் எழுதிய ஒரு புத்தகத்தை மறுக்க 6 அறிஞர்கள் வீதம் 6 புத்தகங்களுக்கு 36 அறிஞர்கள், மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் தலைமையில் ஒன்று கூட்டப்பட்டனர்.

அப்போது தமிழகத்தில் இருந்த

1. சென்னைப் பல்கலைக்கழகம்
2. மதுரைப் பல்கலைக்கழகம்
3. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
4. திருப்பதி வெங்கடேஸ்வரன் பல்கலைக்கழகம்

ஆகிய நான்கு பல்கலைக்கழகங்களையும் சார்ந்த முப்பத்தேழு அறிஞர்கள் ஒன்று சேர்க்கப்பட்டார்கள்.

தமிழக வரலாற்றிலேயே ஒரு தனி மனிதர் கருத்தை ஆய்வெதற்கெனத் தமிழக அறிஞர்களை ஒன்று சேர்த்து ஆய்வு மாநாடு நாள் கணக்கில் நடத்தப்பட்டது இதுவே முதன் முறையாகும்.

தேனாம்பேட்டையில் இருக்கும் கிறித்தவக் கலைத்தொடர்பு நிலையத்தில் தமிழ் அறிஞர்கள் ஒன்று கூடி ஆய்வதற்கெனத் காரணமாயிருந்தவை ஐயா தெய்வநாயகம் அவர்கள் எழுதிய பின்வரும் ஆறு நூல்கள். அவை,

1. திருவள்ளுவர் கிறிஸ்தவரா? (மு.ப. ஏப்ரல் 1969)
2. ஐந்தவித்தான் யார்? (மு.ப. 1970)
3. வான் எது? (மு.ப. அக்டோபர் 1971)
4. நீத்தார் யார்? (மு.ப. அக்டோபர் 1971)
5. எழுபிறப்பு? (மு.ப. அக்டோபர் 1972)
6. சான்றோர் யார்? (மு.ப. ஏப்ரல் 1972)

மாநாட்டில் எதிர்ப்புகள், கொந்தளிப்புகள், அடுக்கடுக்கான கேள்விக் கணைகள் மத்தியில் "திருக்குறள் தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவ நூலே" என்பதை அவர் 1972லேயே ஆணித்தரமாக நிலைநாட்டினார். இந்த ஆறு நூல்கள் எழுதிய பின்பும் சற்றும் சளைக்காமல் தொடர்ந்து,

7. வள்ளுவர் வாழ்த்தும் இயல்புடைய மூவர் யார்? (மு.ப. ஏப்ரல் 1974)
8. அருட்செல்வம் யாது? (மு.ப. 1974)
9. பேரின்ப விளக்கம் (பொதுமறையும் பொருளிலக்கணமும்) (மு.ப. அக்டோபர் 1975)
10. திருக்குறளும் பைபிளும் (மு.ப.ஆகஸ்ட் 1980)

முதலிய நூல்களை எழுதி வெளியிட்டார். "திருக்குறள் தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவ நூலே" என்பதை மறுக்கவும் முடியவில்லை; ஏற்றுக் கொள்ளவும் மனமில்லை எனும் இக்கட்டான சூழ்நிலையில், இதை மறுப்பதற்காகவே, தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் சஞ்சீவி அவர்கள், சென்னைப் பல்கலைக் கழகத்தில், தி.சு. சத்தியம் அவர்களுக்குத் தனி ஓர் ஆய்வுத் தலைப்பு கொடுத்தார். 'இருபதாம் நூற்றாண்டில் திருக்குறள் ஆராய்ச்சியின் வளர்ச்சி' எனும் தலைப்பில், பிஎச்.டி., ஆய்வு செய்த தி.சு. சத்தியம், தம் ஆய்வேட்டின் முடிவில் பின்வருமாறு கூறுகிறார்.

> *"கிறித்தவ சமய ஆய்வில் மு, தெய்வநாயகம் மிகுதியான ஆய்வு நூல்களைப் படைத்தவராகக் காணப்படுகின்றார். இவர், தம் சமயமான கிறித்துவ சமயத்தின் விவிலியக் கோட்பாடுகளே திருக்குறளுக்கு உட்கிடக்கை என்னும் கருத்தை நிலை நிறுத்துவார் போன்று, தம் ஆய்வை அமைத்துக் கொண்டு உள்ளார். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் திருக்குறளின் உட்கிடக்கை சைவ சித்தாந்தமே என்று எழுந்த ஆய்வுப்*

போக்கு இன்றைய காலகட்டத்தில் கிறித்தவமே குறளின் உட்கிடக்கை என்ற கருத்துப் போக்கைப் பெற்று முடிந்துள்ளது".

(தி. சு. சத்தியம். இருபதாம் நூற்றாண்டில் திருக்குறள் ஆராய்ச்சியின் வளர்ச்சி, 1979, பக், 192-193)

இவ்வாறு, திருக்குறள் ஒரு கிறித்தவ நூலே என்ற முனைவர் தெய்வ நாயகத்தின் புதிய கண்டுபிடிப்பை, தி.சு. சத்தியம் தனது ஆய்வின் முடிவில் ஏற்றுக் கொண்டமைக்கு, சென்னைப் பல்கலைக் கழகம் அவருக்கு முனைவர் பட்டம் அளித்தது. இப்புதிய உண்மையை அறிஞர்கள் யாரும் மறுக்க முடியாத நிலை இருந்தமையால் சென்னைப் பல்கலைக் கழகத்திலேயே சொற்பொழிவாற்றுமாறு சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் சஞ்சீவி அவர்கள், முனைவர் தெய்வநாயகத்தை அழைக்க, அறிஞர்களின் பாராட்டுதலைப் பெற்று, சிறப்பாக நிறைவுற்றது அவரது சொற்பொழிவு.

சைவ, வைணவம் கிறிஸ்தவமே - விவாதமும் வீடியோ ஆதாரமும்:

சைவமும் வைணவமும் தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவமே என்ற புதிய ஆய்வுக் கண்டுபிடிப்பை இந்து மதத் தலைவர்கள் மற்றும் இந்து மத அறிஞர்களிடையே நிலை நாட்டியதைக் காட்டும் வீடியோ

திருக்குறளையும், விவிலியத்தையும், சைவ சித்தாந்தத்தையும் ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்த முனைவர் தெய்வநாயகம் அவர்களின் **'விவிலியம் திருக்குறள் சைவ சித்தாந்தம் ஒப்பாய்வு'** - (1983 இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டத்திற்காக அளிக்கப்பட்டது) எனும் முனைவர் பட்ட ஆராய்ச்சி நூல் பின்னர் நூலாக வெளியிடப் பட்டது. இது தமிழகத்தில் பெரும் பரபரப்பையும் சலசலப்பையும் ஏற்படுத்தியது.

அந்நூலில் அவர், தமிழர் வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட பைபிளை மையமாகக் கொண்டு எழுந்ததே திருக்குறள்; திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததே சைவம், வைணவம் என்னும் இந்து மதம். எனவே, சைவம், வைணவம் எனப்படும் 'இந்து மதம்' என்பது, தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவக் கிளைகளே என்பனவற்றை ஆதாரங்களுடன் எழுதியிருந்தார். இது நூலாக வெளிவந்தவுடன் தமிழகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. எனவே, காலஞ்சென்ற தவத்திரு. குன்றக்குடி அடிகளார் தலைமையில் இந்து சமய மடாதிபதிகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் சைவ சித்தாந்தத் துறை அறிஞர்கள், தருமையாதீன மடத்தில் ஒன்றுகூடி, முனைவர் தெய்வநாயகம் அவர்களை அழைத்து அவருடைய நூலின் மீது விவாதம் நடத்தினர்; 1985 டிசம்பர் 6, 7 தேதிகளில் நடத்தப்பட்ட பரபரப்பான, அனல் பறந்த விவாதத்தில் திருக்குறள் ஒரு தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவ நூல் என்பதுடன், சைவம், வைணவம் எனப்படும் இந்து மதமே தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவக் கிளைகளே என்று நிலை நாட்டினார்; இறுதியில், மதுரை காமராசர் பல்கலைக் கழக - சைவ சித்தாந்தத்துறைப் பேராசிரியர் முனைவர் சித்தலிங்கையா அவர்கள், தாங்கள் கேட்ட கேள்விகள் அனைத்திற்கும் முனைவர் தெய்வநாயகம் அவர்கள் நன்றாகப் பதில் சொன்னார்கள் என்று கூறியதோடு தருமை ஆதீன மடாதிபதி, ஐயாவிற்குப் பொன்னாடை போர்த்தி சிறப்பித்தார். தருமை ஆதீனத்தில் நடைபெற்ற ஆய்வரங்க நிகழ்ச்சிகள் வீடியோ செய்யப்பட்டுள்ளன; விரும்புகின்றவர்கள் இதனை வாங்கிப் பார்க்கலாம்.

பதில் கொடுக்கத் தயார்:

திருக்குறள் கிறிஸ்தவ நூல் என்பதையோ, சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே என்பதையோ ஆய்வு அடிப்படையில் மறுக்க யாராயினும் முன் வருவார்களானால் அவர்களுக்குப் பதில் கொடுக்க எப்போதும் ஆயத்தமாய் உள்ளோம் என்பதை இதன் வழியாக அன்புடன் தெரிவிக்கின்றோம். எனவே, மறுக்க நினைப்பவர்கள் எங்களோடு தொடர்பு கொள்ள அன்புடன் அழைக்கின்றோம். தாம் புதிதாகக் கண்டுபிடித்து நிலைநாட்டிய இந்த உண்மைகளைப் பயிற்சி வகுப்புகள் வழியாகவும் கருத்தரங்குகள், மாநாடுகள் வழியாகவும் வெளியுலகிற்கு விளக்கினார் முனைவர் தெய்வநாயகம். எனவே, அவரிடம் பயிற்சி பெற்ற அவருடைய மாணவர்கள்

- ஆராய்ச்சி நூல்கள் வழியாகவும்
- புத்தகங்கள் வழியாகவும்

இந்தப் புதிய ஆய்வு உண்மைகளைப் பல்வேறு கோணங்களில் விளக்கியும், எளிமைப்படுத்தியும் எழுதி வருகின்றனர். இவருடைய இந்தப் புதிய ஆய்வுக் கண்டுபிடிப்புகளைப் பலரும் பல கோணங்களில் மேலும் ஆய்ந்து அழகாக எழுதி வருகின்றனர்.

அவருடைய ஆராய்ச்சி மாணவர்களில் ஒருவராகிய எனக்கு, **'தமிழ் பக்தி இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (விவிலிய ஒளியில்)'** - *(1993 இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டத்திற்காக அளிக்கப் பட்டது)* எனும் தலைப்பை எனது முனைவர் பட்டத்திற்கு அளித்து, ஆய்வினை நிறைவு செய்ய வழி நடத்தினார்.

இவ்வாறே, அவருடைய மாணவர்களில் ஒருவராகிய முனைவர் யா. தா. பாசுகரதாசு அவர்களுக்கு, **'அறுவகைத் தரிசனங்களும் தமிழர் சமயமும் (விவிலிய ஒளியில்) ஓர் ஆய்வு'** - *(1998 இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டத்திற்காக அளிக்கப்பட்டது)* எனும் தலைப்பை அளித்து ஆய்வினை நிறைவு செய்யப் பெருந் துணையாய் இருந்தார்.

இவ்வாறே, அவருடைய ஆய்வு மாணவர்களாகிய நாங்கள் பலரும் அவருடைய புதிய ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளைப் பல கோணங்களிலும் ஆய்வின் வழியாக விளக்கி, உலகிற்கு வெளிப்படுத்தி வருகின்றோம். ஆராய்ச்சி அடிப்படையில் மட்டுமல்லாமல் ஐயாவின் இந்தப் புதிய கண்டுபிடிப்புகளை ஐயாவிடம் சில ஆண்டுகள் தங்கிக் கற்றுக் கொண்ட திரு. சுந்தர் யேசுவடியான் அவர்கள் 'இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு' எனும் தலைப்பில் அக்டோபர் 2001லும், ஐயாவின் வகுப்புகளில் கலந்து கொண்ட திரு. ஆ. கிறிஸ்டோபர் அவர்கள், 'இந்துத்துவாவிலிருந்து விடுதலை' எனும் தலைப்பில் 2005 லும் எளிய மக்களும் புரிந்து கொள்ளுமாறு தங்களின் கை வண்ணத்தோடு எழுதிய நூல்களைக் குறித்து சகோ. தாயப்பன் அவர்கள் இப் புத்தகத்தில் அழகாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். இவ்வாறு முனைவர் தெய்வநாயகத்தின் புதிய ஆய்வுக் கண்டு பிடிப்புகள் அவருடைய மாணவர் களால் பல கோணங்களிலும் அழகாக எழுதப்பட்டு வருகின்றன.

இந்து மதத்திற்கு அடிப்படையான 5 கோட்பாடுகள்:

சமயங்களை வரலாற்றுப் பார்வையில் பார்க்கும்போது, 'இந்து மதம்' எனப்படும் சைவ, வைணவ சமயங்களுக்கு அடிப்படையாகப் பின்வரும் 5 கோட்பாடுகள் விளங்குவதைக் காணலாம்.

1, மூவொருமைக் கோட்பாடு
2, அவதாரக் கோட்பாடு
3, பலிநிறைவேற்றக் கோட்பாடு
4, பாவ மன்னிப்புக் கோட்பாடு
5, விசுவாசத்தினால் மீட்புக் கோட்பாடு

மேற்கண்ட ஐந்து கோட்பாடுகளும் கிறிஸ்துவிற்கு முற்பட்ட இந்திய வழிபாடுகளான 1. சிந்துவெளி வழிபாடு 2. பழந்திராவிடம் 3. ஆரிய வழிபாடு இவற்றில் காணப்படவில்லை; கிறிஸ்துவிற்கு முற்பட்ட இந்தியச் சமயங்களான. **1. சமணம் 2. பௌத்தம்** ஆகியவற்றிலும் இக்கோட்பாடுகள் காணப் படவில்லை; இந்த 5 கோட்பாடுகளும் கிறிஸ்தவத்திற்கேயுரிய கோட்பாடுகளாதலால், **கிறிஸ்துவிற்குப் பிற்பட்ட நூற்றாண்டுகளைச் சார்ந்த சமயங்களான -** புனித தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவத்தின் கிளைச் சமயங்களான சைவ, வைணவ இலக்கியங்களின் அடிப்படைக் கோட்பாடு களாகக் காணப் படுகின்றன. இக் கருத்துகளை மேலும் அறிந்து கொள்ள, **'இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடே. எவ்வாறு?** எனும் நூலைக் காணலாம்.

'எல்லோருக்கும் எல்லாமானேன்' எனும் திருமறை வசனப்படி, நற்செய்தியின் மையப் பொருளாக இருக்கும் இந்தக் கோட்பாடுகள் ஐந்தையும், படித்தவர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் கூற வேண்டும் என்று உந்தப்பட்ட தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவர்கள் பின்வருமாறு 5 கோணங்களில் (Aspects) இந்தக் கோட்பாடுகளை விளக்கியுள்ளனர்.

1, புராண நோக்கு	(Mythical aspect)
2, இலக்கிய நோக்கு	(Literary aspect)
3, இறையியல்/ தத்துவ நோக்கு	(Theological / Philo sophical aspect)
4, சிற்பவியல் நோக்கு	(Iconographic aspect)
5, வரலாற்று நோக்கு	(Historical aspect)

புராண நோக்கில் விநாயகர், நடராசர் போன்றவை இறந்து, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை விளக்கும் நிலையை அழகாக எடுத்துக்காட்டும் சகோ. தாயப்பன் அவர்கள், இறையியல் நோக்கில் திருமறையைச் சாறு பிழிந்து விளக்கும் 'சிவஞானபோத'த்தின் சிறப்பை ஆங்காங்கே தொட்டுக் காட்டியுள்ளார். சிவஞானபோதம் என்பது விவிலியச் செய்திகளின் விளக்கமே என்பதை அறிந்து கொள்ள விரும்புவோர் முனைவர் தெய்வநாயகம் எழுதிய 'சிவஞானபோதம்' எனும் நூலைக் காணலாம்.

கிறிஸ்தவத்தை அழித்துக் கொண்டிருக்கும் சாதி ஏற்றத்தாழ்வு:

கிறிஸ்தவத்தை அழித்துக் கொண்டிருக்கும் சாதி ஏற்றத்தாழ்வுக் கொடுமையை அப்படியே கண்ணாடி போல் எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர்.

> *"இந்த உலகத்தில் பிறந்த எல்லா மனுஷருமே கடவுளோட பிள்ளைங்கதான். 'இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அவர்கள் அத்தனை பேரும் தமக்குப் பிள்ளைகள் ஆகும்படியாக, பிதாவானவர் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்'னு யோவான் 1:12 சொல்லுதே. 'அவரிடத்தில் யாதொரு மாறுதலும், வேற்றுமையின் நிழலும்*

இல்லை'னு யாக்கோபு 1:17 அடிச்சு சொல்லுதே. வேதாந்தத்துக்கு இந்த ஜாதி, உயர்வு, தாழ்வுன்னு எதுவும் கிடையாது.... கலாத்தியரில் 3:28ல சொன்ன பிறகும் நாம ஜாதி ஏற்றத் தாழ்வுகளைப் பாக்கலாமா? எங்க ஜாதி உயர்ந்த ஜாதி, உங்க ஜாதி தாழ்ந்த ஜாதிங் கிற எல்லா எழவுகளையும் விட்டுத் தொலைப்போமே". (ப.62)

என மிகுந்த ஆதங்கத்தோடு ஆசிரியர் எழுதியிருப்பது கிறிஸ்தவ உலகம் இந்தக் கொடுமையிலிருந்து விடுபட வேண்டுமே என்ற அவருடைய ஆழ்ந்த வேதனையையும் துடிப்பையும் காட்டுவதாய் உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு தில்லி மாநகரில் 10 இலட்சம் ஷெட்யூல்டு வகுப்பினர், சாதி ஏற்றத்தாழ்வுக் கொடுமையிலிருந்து விடுபட, பௌத்த மதத்திற்கு மாறினர். கிறிஸ்தவத்திலும் சாதி ஏற்றத்தாழ்வுக் கொடுமையிருப்பதால் அவர்கள் பௌத்த மதத்திற்கு மாறினர். இந்தக் கொடிய நஞ்சு இன்னும் கிறிஸ்தவத்தில் தொடர்ந்து கொண்டிருப்பதால் "...எங்க ஜாதி உயர்ந்த ஜாதி, உங்க ஜாதி தாழ்ந்த ஜாதிங்கிற எல்லா எழவுகளையும் விட்டுத் தொலைப்போமே" என்று கொதிப்போடு ஆசிரியர் கூறுவது, அனைவரும் ஏற்றத்தாழ்வற்ற நிலையில் கடவுளின் அன்புக் குழந்தைகளாய் வாழ வேண்டுமேயென்ற அவரது உன்னத நோக்கத்தைக் காட்டுவதாய் உள்ளது.

கிறிஸ்துவில் வளருங்கள்: (கிறிஸ்தவ மதத்தில் அல்ல)

"ஒரு கிறிஸ்தவ தேவாலயத்துக்குத் தவறாம தொடர்ந்து போங்க. அங்கே இருக்கிற மனுஷங்களைப் பாக்காதீங்க. ஆண்டவரை மாத்திரம் பாருங்க" (ப. 74)

என்று ஆசிரியர் கூறுவது 'கிறிஸ்தவ மதத்தில் வளர்வது' என்பது வேறு; 'கிறிஸ்துவிற்குள் வளர்வது' என்பது வேறு என்பதைத் தெளிவாகக் காட்டுவதாய் உள்ளது.

மதமல்ல - ஆன்மீகம்:

'ஒரே மந்தை, ஒரே மேய்ப்பன்' என்பது மதங்களைக் கடந்த நிலையைக் காட்டுவதை உணர்ந்த ஆசிரியர்

"ஆன்மீகம் என்பது ஜாதி, சமய, தேச, மத, இன, மொழி, நிற எல்லைகள் எல்லாத்தையும் கடந்து மனுஷர்கள் எல்லாருக்கும் பொதுவாகத் திகழ்வது. இந்த உன்னதமான, உயர்ந்த ஆன்மீகக் கருத்துக்களை 'மதம்'ங்கிற ஒரு குறுகிய கோட்டுக் குள்ளாற பாக்கும்போது அது அரசியலா மாறிடுது..."(ப. 61)

"இந்த உலகத்தில் பிறந்த எல்லாருமே ஆன்மீக விடுதலை பெறணும்." (ப. 61)

'இது மதமாற்றம் அல்ல. மனமாற்றம்.; (ப.19)

என மதத்தினின்று வேறுபட்ட ஆன்மீக நிலையைத் தெளிவாக விளக்கியுள்ள பாங்கு உண்மையிலேயே மிகவும் வரவேற்கத்தக்கது. எனவே, மதங்களைக் கடந்த நிலையில் 'கிறிஸ்துவின் அன்பில் அனைவரும் ஒன்றிணைய வேண்டுமே' என்ற ஆசிரியரின் ஆதங்கமும் உருக்கமான அன்பும் பாரமும் இறைவனால் மிகவும் ஆசீர்வதிக்கப் படப் போகின்றதை எண்ணி ஆசிரியருக்கு உளம் நிறை பாராட்டையும் இறைவனுக்கே மகிமையையும் செலுத்துகின்றேன்.

— முனைவர் தெ. தேவகலா

National Institute of Leadership Training

(Regd. Charitable Trust - 1294 / 98)

நாள் : 13.10.2010

TRUSTEES:
G.J.Pandithurai
Founder - President

A.J. Rajasekaran
Vice - President - Admin
Treasurer

Dr.J.D.Baskaradoss
Vice-President
Curriculum Director

R. Soundararajan
Secretary

Dr. Prabhu G.J. Dorairaj
Co-ordinator

Pr.F. Sharon
Devaprasannam
Curriculam Co-ordinator

Advisory Board :

Rev. Dr. Alex Joseph
Director, Group of
Maranatha Bible Colleges
H.O. Chennai.

Dr. Alexander Harris
Founder President
Last Days Harvest Ministries
California, USA.

Evangelist Sadhu Chellappa
Founder President
Agni Ministries
H.O. Chennai.

அணிந்துரை :

அன்புள்ள கர்த்தருடைய தாசன் அருட் பணியாளர் திரு. சு.டைட்டஸ் தாயப்பன் அவர்கள் கர்த்தரால் தெரிந்து கொள்ளப் பட்ட பின்பு கடந்த 10 ஆண்டு களாகக் கர்த்தருடைய திராட்சைத் தோட்டத்தில் மிகச் சிறப்பான பணியாற்றி வருகிறார்.

அவருக்குக் கொடுக்கப்பட்ட தீர்க்க தரிசனத்தின் படி அநேகம் பேர் கர்த்தருக்குள் வழிநடத்தப்படுவது கர்த்தர் அவருக்குக் கொடுத்த ஒரு பெரிய ஈவு. 'காதுள்ளவன் கேட்கக் கடவன்' என்று விவிலியத்தில் உள்ளதுபோல இவர் தனக்கே உரித்தான எளிய பாணியில் இந்நாட்டிற்கே சொந்தமான, சரித்திர அடிப்படையில் இந்து வேதங்களைச் சார்ந்து அவ்விலக்கியங்களில் உள்ள மறைந்திருக்கும் ஏசுவையும் தோமா வழிவந்த ஆதி இந்திய வேதாந்தக் கிறித்துவ அடிப்படைக் கோட்பாடுகளையும் தன் நற்செய்திப் பணி வாயிலாக அநேகம் பேரைக் கொள்ளைப் பொருளாய்க் கிறித்துவுக்கு நேராய் வழி நடத்துவது இவருக்குக் கடவுள் கொடுத்த ஒரு பெரிய பாக்கியம், சிலாக்கியம்!

இவர் தேசியத் தலைமையாளர் பயிற்சி நிறுவனத்தோடு (NILT) சமீப காலமே தொடர்புடையவராய் இருந்தாலும் அநேக ஆண்டுகள் இந்நிறுவனத்தாரோடு நெருங்கிப் பழகிய ஓர் அனுபவத்தைக் கொடுத்த அன்பான மூத்த சகோதரர்.

அவருடன் இணைந்து அநேக நற்செய்தியாளர்களை இந்நிறுவனத்தின் நோக்கத்தின்படி சுதேசி நற்செய்திப் பயிற்சியைக் கொடுத்து, பயிற்சி பெற்றவர்கள் பல ஆத்து மாக்களைக் கர்த்தருக்கு முன்பாக நிறுத்த வாய்ப்புக் கிடைத்தது எங்களுக்குக் கிடைத்த பேறு. இவ்வன்பான இணைப்பிற்காய்க் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்.

திரு. தாயப்பன் அவர்கள் வெளியிட இருக்கும் **சைவமும் வைணவமும் கிறித்துவமே** என்னும் புத்தகம், அவர் தரிசனப்படி 50 இலட்சம் பேர் இரட்சிக்கப்படப் போவது நிச்சயம் என்று கர்த்தருடைய நாமத்தினால் இவரை வாழ்த்துகிறேன்.

இவருடைய இறைபணி பல்லாண்டு சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல இறைவன் எம்பெருமான் இயேசுவை நோக்கிப் பார்க்கிறேன். கர்த்தர் அவரையும் அவருடைய குடும்பத்தார் அனைவரையும் ஆசீர்வதிப்பராக.

கா.ச. பாண்டிதுரை
நிறுவனர் – தலைவர்

A.P.508, 22nd Street, TNHB Colony, Korattur, Chennai - 80.
Phone : 044-26248563, 9444205511, Email : thomavedanta@niltindia.org,
Website : www.niltindia.org

National Institute of Leadership Training

(Regd. Charitable Trust - 1294 / 98)

நாள் : 13.10.2010

TRUSTEES:
G.J.Pandithurai
Founder - President

A.J. Rajasekaran
Vice - President - Admin
Treasurer

Dr. J.D.Baskaradoss
Vice-President
Curriculum Director

R. Soundararajan
Secretary

Dr. Prabhu G.J. Dorairaj
Co-ordinator

Pr.F. Sharon
Devaprasannam
Curriculam Co-ordinator

Advisory Board :

Rev. Dr. Alex Joseph
Director, Group of
Maranatha Bible Colleges
H.O. Chennai.

Dr. Alexander Harris
Founder President
Last Days Harvest Ministries
California, USA.

Evangelist Sadhu Chellappa
Founder President
Agni Ministries
H.O. Chennai.

பேராசிரியர் முனைவர் **யா.தா. பாசுகரதாசு**
முன்னாள் கல்லூரித் துணை முதல்வர்,
பாடத்திட்ட இயக்குநர்
பேசி : 044-26871777, 9444225454
மின்னஞ்சல் : jdbaskar@hotmail.com,
jdbaskar@gmail.com

மதிப்புரை

சகோ. எஸ். தாயப்பன் அவர்கள் எழுதிய '**சைவமும் வைணவமும் கிறித்தவமே**' என்னும் சிறுநூலைப் படித்துப் பார்த்தேன். நற்செய்தி அறிவிக்கும் நோக்கில் சகோ. தாயப்பன் எழுதியுள்ளார். 'மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரியது' என்பது போல, நூல் சிறிதானாலும் அதில் குறிப்பிடப்படும் கருத்து மிகவும் பெரியது.

ஆய்வுலகத்திற்கேற்ப இந்நூல் அமையாவிடினும் ஆய்வுலகைச் சார்ந்த அறிஞர் பெருமக்கள் இந்நூலை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. ஏனெனில் அறிஞர் பலர் ஆய்வு செய்து வெளிக்கொணர்ந்துள்ள ஆய்வு நூல்களையும் ஆய்வுக் கருத்துகளையும் அடிப்படையாகக் கொண்டு இந்நூலை அவர் எளிய நடையில், உளங்கவரும் வண்ணம் எழுதியுள்ளார். பேச்சு வழக்கிலும் பிறமொழிக் கலப்பு நடையிலும் இந்நூல் நடைபோடுகிறது.

நூலின் தலைப்பை வாசிப்பவர்க்குச் 'சைவமும் வைணவமும் கிறித்தவமா?'–அது எப்படி? என்று சிலருக்கு வியப்பாகவும் மலைப்பாகவும் தோற்றமளிக்கும். கிறித்தவம் பல்லாயிரம் மைல் கற்களுக்கு அப்பாலுள்ள பாலத்தீன நாட்டிலே தோன்றியது. சைவமும் வைணவமும் தமிழ்

A.P. 508, 22nd Street, TNHB Colony, Korattur, Chennai - 80.
Phone : 044-26248563, 9444205511, Email : thomavedanta@niltindia.org,
Website : www.niltindia.org

நாட்டிலே உருவானவை. இவை இரண்டும் இந்து சமயத்தின் பெருங்கிளைகளாக விளங்குகின்றன. இந்து சமயத்திற்கும் கிறித்தவ சமயத்திற்கும் என்ன தொடர்பு? 'மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிற' கதையா இது ?

'இந்து' என்பது இடத்தின் பெயரே தவிர ஒரு சமயத்தின் பெயர் அன்று. 'சிந்து' என்பதை 'ஹிந்து' என்று பாரசீகர்கள் உச்சரித்தார்கள். கிரேக்கர்கள் அதனை இந்து என்று வழங்கினர். இந்திய உச்சநீதி மன்ற நீதிபதியாயிருந்த சர் வில்லியம் ஜோன்ஸ் என்பவர்தான் முதன் முதலில் 'இந்துயிசம்'(Hinduism) என்ற சொல்லைக் கி.பி. 1794 ஆம் ஆண்டு பயன்படுத்தினார். ஆனால் இன்றையக் காலக் கட்டத்தில் இந்து சமயம் பெருவழக்காகி நிலைத்து விட்டது. எனினும் இந்து சமயம் என்பது சைவத்தையும் வைணவத்தையும் குறிக்கும் பெயராகவே இன்று பயன்படுத்தப்படுகிறது.

சைவ வைணவ சமயங்களுக்குக் கருவாக விளங்கும் மூலக் கூறு எது ? ஆரியப் பிராமணரின் நான்கு வேதங்களிலிருந்து சைவ, வைணவ சமயங்கள் தோன்றி வளர்ந்தன என்று கிளிப் பிள்ளைப் பாடமாக அறிஞர்களில் சிலர் கூடச் சொல்லி வருகின்றனர்.

ஆரியருடைய வேதங்களில் சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளான சிவனுடைய பெயர் காணப்படவில்லை. அவற்றில் 'விஷ்ணு' என்னும் பெயர் குறிப்பிடப்படுகிறது. அந்த 'விஷ்ணு' என்பதற்குச் சூரியன் என்று பொருள். அது சூரிய வணக்கமே தவிர வைணவ முழுமுதற் கடவுளான விஷ்ணு வணக்கமன்று. விண் > விண்ணு > விஷ்ணு என்று ஒலித் திரிபடைந்த தமிழ்ப் பெயர் அது.

ஆரியருடைய வேதங்களில் வழிபாடு உள்ளதே தவிர, சமய வளர்நிலை அதில் இல்லை. பஞ்ச பூதங்கள், இயற்கை, முன்னோர், ஆவிகள் போன்ற வளர்ச்சியடையாத வழிபாடுகளைக் கூறுவனதாம் ஆரிய வேதங்கள். நான்கு வேதங்களையும் பின்பற்றும் வைதிகர்கள் சிவனைச் சூத்திரக் கடவுள் என்றும் சைவ சமயத்தின் மூலமாக விளங்கும் சிவலிங்க வழிபாட்டை ஆண் – பெண் குறி இணைந்த, 'சிசுன தேவ' வணக்கம் என்றும் இழிபடுத்தி எழுதி வைத்திருப்பதை அறிஞர் பெருமக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சிவலிங்க வணக்கம் ஆபிரகாமின் கால முதலே வழக்கில் இருந்த தாகக் கூறுவர். சிந்து வெளியில் ஏராளமான சிவலிங்கங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இந்தச் சிவலிங்க வழிபாட்டைக் கிறித்தவத் திருமறையின் பழைய ஏற்பாட்டு நூல்களில் பல இடங்களில் காணலாம். இவற்றை 'நினைவுத் தூண்கள்' (Memorial Stones) என்று குறிப்பிடுகின்றனர்.

நினைவுக்கல் அல்லது தூண் வழிபாட்டினை விவிலியத் தொடக்க நூலான ஆதியாகமம் 28ஆம் அதிகாரத்தில் தெளிவாக நாம் காண்கிறோம். யாக்கோபு படுத்துறங்கிய போது கடவுட் காட்சி கண்ட அந்த இடத்தில், தலையணையாய் வைத்திருந்த கல்லை நினைவுத் தூணாக (ஆதியாகமம் 28:18) நிறுத்தி அதன்மேல் எண்ணெய் வார்த்து, அந்த இடத்திற்குப் 'பெத்தேல்' (28:19) அதாவது

'கோயில்' என்று பெயரிட்டார். பின்னர் கடவுளைப் பணிந்து விண்ணப்பம் பண்ணி, பத்தில் ஒரு பங்காகிய தசம பாகத்தைச் செலுத்துவேன் (28:22) என்று நேர்ந்து கொண்டார். பின்னர் யாக்கோபு கடவுளின் கட்டளைப்படி பெத்தேலுக்குத் திரும்பி, பலி பீடம் ஒன்றைக் கட்டி (ஆதி. 35:7) 'ஏல்-பெத்தேல்' என்று பெயரிட்டார்.

நினைவுத் தூண் வழிபாட்டைப் பழைய ஏற்பாட்டின் பிற நூல்களிலும் காணலாம். இதன் தொடர்ச்சியாகவே சிவலிங்க வழிபாடு அமைந்திருக்கிறது. 'சிவம்' என்னும் தமிழ்ச் சொல்லுக்கு அன்பு என்று பொருள், 'லிங்கம்' என்னும் சமற்கிருதச் சொல்லுக்குக் 'குறி' அல்லது 'அடையாளம்' என்று பொருள். எனவே, சிவலிங்கம் என்பதற்கு 'அன்பின் குறி' என்று பொருள்.

'சிவம்', 'சிவன்' என்னும் பெயர்கள் கிறித்துவுக்குப் பின்னர் உருவான பெயர்ச் சொற்கள். தமிழில் மிகப் பழைய இலக்கியங்களாகப் போற்றப்படும் சங்க இலக்கியங்களில் இச்சொற்கள் பயின்று வரவில்லை.

சங்கப் பனுவல்கள் இயற்கை நெறிக் காலத்தவை. இக்காலத்தையடுத்து உருவான பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அறநெறிக் காலத்தவை. அறநெறி இலக்கியங்களில் மிகவும் தலையாகப் போற்றப்பெறும் நூல் திருவள்ளுவரின் திருக்குறள். சைவ, வைணவ சமயங்களின் தோற்றத்திற்குத் திருக்குறளும் அடிப்படையாய் விளங்கியது என அறிஞர் குறிப்பிடுகின்றனர். திருவள்ளுவரின் காலம் கி.பி. முதலாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டினதாகலாம் என்பது அறிஞர்களின் கருத்து. இந்நூலின் பாயிரத்திலுள்ள முதல் மூன்று அதிகாரங்களில் கடவுள் மூன்று நிலைகளில் போற்றப்படுகிறார். தந்தை, தூய ஆவி, மைந்தன் என மூவொரு கடவுள் வாழ்த்தப் பெறுகிறார். இது குறித்து ஏராளமான ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன.

திருக்குறட் காலத்தையடுத்துத் தமிழ் நாட்டில் பக்தி இயக்கம் தோன்றியது. தமிழ்ப் பக்தி இயக்கத்தின் காலம் கி.பி. 5 ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 9 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம் ஆகும். பக்தி இயக்கக் காலத்தில் நாயன் மார்களும் ஆழ்வார்களும் பாடிய போற்றிப் பாடல்களே பன்னிரு திருமுறைகள் எனவும் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் எனவும் வழங்கப் படுகின்றன.

தமிழ்ப் பக்தி இயக்கத்திற்கும் இதன் விளைவாகத் தோன்றிய சைவ, வைணவ சமயங்களுக்கும் உந்து சக்தியாக விளங்கியது எது ? அந்த உந்து சக்தி ஆரிய வேதங்கள் அல்ல என்று முன்னர்ப் பார்த்தோம். கிறித்துவுக்கு முன்னர் இந்தியா வில் வழங்கி வந்த சமயங்கள் பௌத்தமும் சமணமும் ஆகும். இவை இரண்டும் நாத்திக சமயங்கள். நாத்திக சமயங்களிலிருந்து ஆத்திக சமயங்கள் தோன்ற முடியாது. ஏனெனில் சமண பௌத்த சமயங்களில் கடவுட் கோட்பாடு இல்லை.

அப்படியென்றால் கடவுட் கோட்பாட்டுச் சமயங்களான சைவ, வைணவ சமயங் களின் உந்து சக்தியாகத் திகழ்ந்தது எது ? அந்த உந்து சக்தி கிறித்தவமே! பாலத்தீனத்திற்கும் இந்தியாவிற்கும் ஏராளமான கடல்வழித் தொடர்புகள், இருந்து வந்தன என்பதை வரலாறு வெளிப்படுத்துகிறது. காவிரிப் பூம்பட்டினம், முசிறி,

தொண்டி முதலிய தமிழகக் கடற்கரைப் பட்டினங்களிலிருந்து கடல்வழியாகவும் தரைவழியாகவும் வெளி நாடுகளுடன் தமிழகத்திற்கு வணிகத் தொடர்பு இருந்தது.

இத்தொடர்புகளின் துணையால் இயேசு பெருமானின் நேரடி மாணாக்கரான தோமையர் கி.பி. 49 ஆம் ஆண்டிலே வட இந்தியாவில் தட்சசீலம் வந்து 'கொண்ட போரசு' என்னும் அரசனின் அவையில் இருந்துள்ளார். பின்னர் அவர் பாலத்தீனம் சென்று கி.பி. 52இல் கேரளம் எனப்படும் சேரநாட்டில் கொடுங்களூரில் வந்திறங்கி நற்செய்தி அறிவித்தார். அதன்பயனாக 7 1/2 திருச்சபைகளை அவர் உருவாக்கினார். அவை 'ஏழரைப் பள்ளி' என மலையாளத்தில் வழங்கப்படுகிறது. அவற்றில் அரைப்பள்ளி என்பது நாகர்கோவிலுக்கு அருகிலுள்ள திருவிதாங்கோடு என்னும் ஊரில் தூய மரியாள் ஆலயமாக இன்றும் உள்ளது. இதனை இந்திய அரசு உலகிலுள்ள மிகப்பழைய ஆலயமாக அறிவித்துள்ளது. சேரநாட்டு ஊழியத்திற்குப் பிறகு தோமையர் சென்னையில் (மயிலாப்பூரில்) சின்னமலை, பெரியமலை, மயிலாப்பூர் ஆகிய இடங்களில் நற்செய்தி ஆற்றினார். கி.பி. 72இல் பெரிய மலை எனப்படும் தூய தோமையர் குன்றில் பகைவரால் குத்தப்பட்டு இரத்தச் சாட்சியாக இறந்தார். அவரது உடல் சென்னைக் கடற்கரையில் அடக்கம் பண்ணப்பட்டது. அவரது உடல் மேலேதான் இன்றுள்ள சாந்தோம் பேராலயம் கட்டப்பட்டுள்ளது. அவரது ஊழியத்தின் பயனாய்க் கிறித்துவை ஏற்றுக் கொண்டவர்கள் என்ன ஆனார்கள் ? இது பற்றித் திருச்சபை கண்டு கொள்ளவில்லை !

இன்றையக் கிறித்தவர்கள் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு வந்த அந்நியர் வழிவந்த கிறித்தவத்தைப் பின்பற்றுவதால் தோமா வழிவந்த ஆதிக் கிறித்தவத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளவில்லை.

தோமாவழி ஆதி இந்தியக் கிறித்தவம் இந்திய மண்ணில் வேரூன்றி, இந்தியப் பண்பாட்டில் உரம் பெற்று வளர்ந்துள்ளது. தோமா வழி ஆதி இந்தியக் கிறித்தவத்தைச் சைவ சமயத்திலும் வைணவ சமயத்திலும் தான் காண முடிகிறது. இவை இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வெளிவந்து கொண்டிருக்கும் ஆய்வு முடிவுகள் ஆகும்.

இந்த ஆய்வுக் கருத்துகளைக் கற்று சகோ. தாயப்பன் அவர்கள் இந்நூலைப் பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் எழுதியிருப்பதற்காக அவரைப் பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

சிவனுக்குத் தீவண்ணன், செந்தழலோன், சேயோன் என்றும் விஷ்ணுவுக்கு மேகன், மேகவண்ணன் என்றும் எப்படிப் பெயர்கள் வந்தன? மோசேக்குக் கடவுள் தீவண்ணனாகவே ஓரேபில் காட்சி கொடுத்தார் (யாத்திராகம் 3:2) ; நெருப்புத் தூணில் இசுரயேல் மக்களை இரவில் வழி நடத்தினார் (யாத். 13:21-22). சீனாய் மலையை நெருப்பும் மேகமும் மூடியது (யாத். 24:15); ஆசரிப்புக் கூடாரத்தில்

மேகத்தின நடுவிலிருந்து கடவுள் மோசேயுடன் பேசினார். இசுரயேல் மக்களைக் கடவள் மேகத் தூணிலிருந்து பகலில் வழிநடத்தினார் (யாத். 13:21).

பழைய ஏற்பாட்டில் மோசே மூலம் தீவண்ணனாகவும் மேகவண்ண னாகவும் வெளிப்பட்ட கடவுள் புதிய ஏற்பாட்டில் அன்பே வடிவாக இயேசு என்னும் பெயரில் அவதாரமாக வந்து, முதல் மனிதன் ஆதாம் மூலம் ஏற்பட்ட ஜென்ம பாவத்தை நீக்கப் பலியாகி நம்மை மீட்டுக் கொண்டார்.

மோசேயின் காலத்தில் கடவுளுக்கு என்ன பெயர் வழங்கியது? கடவுளிடம் மோசே அவர் பெயரை அறிந்து கொள்ள முற்பட்டபோது, 'இருக்கிறவராக இருக்கிறேன்' (யாத். 3:14) என்ற பெயரைத்தான் குறிப்பிடுகிறார். எனவே, மோசே வழிவந்த காலங்களில் கடவுள் தீவண்ணனாகவும், மேக வண்ணனாகவும் அறியப்பட்டதில் வியப்பொன்று மில்லை.

சைவ சமயம் கடவுளின் பேரன்பை விளக்கும் அன்புச் சமயமாகத் திகழ்கிறது. வைணவ சமயம் அவதாரமாக வந்த கடவுளின் மீட்பை விளக்கும் மீட்புச் சமயமாகத் திகழ்கிறது. சைவக் கோயில்களில் கர்ப்பக் கிரகத்தில் உருவமில்லை. சிவலிங்கத்தை உருவமாகக் குறிப்பிடுவதில்லை. வைணவக் கோயில்களின் கருவறையில் விஷ்ணுவின் உருவம் உள்ளது. அதாவது, மக்களை மீட்பதற்காகக் கடவுள் மனித உருவில் பிறந்து வந்தார் என்பதை விளக்குவது அது.

சைவ வைணவ சமய இலக்கியங்கள், அவற்றின் இறையியல் முதலியன விவிலிய அடிப்படையில் நோக்கும்போதுதான் சரியானதும் தெளிவானதுமான விளக்கம் பெறுகின்றன. எனவே, தோமாவின் நற்செய்தியின் பயனாகச் சைவ சமயங்களில் இறையியற் கருத்துகள் உருவாயிருக்க வேண்டும் என்று வரலாற்று அடிப்படையில் நோக்குவது சரியாகத் தோன்றுகிறது.

சைவ வைணவ சமயங்களின் புராண, இதிகாசச் செய்திகள் உருவான தொடக்கக் காலத்தில் உள்ளவை போன்றே இன்றும் இருக்கவில்லை. இவற்றில் காலந்தோறும் இடைச் செருகல்களும் சிதைப்புகளும் அழிப்புகளும் செய்யப்பட்டுள்ளன.

எனவே, இந்நூலைப் படிகின்றவர்கள் எச்சரிக்கையுடன் இதனைப் படிக்க வேண்டும். ஏனெனில் அசிங்கமான கதைகளும் செய்திகளும் அவற்றில் காணப்படலாம். அந்தப் பின்னணியில் சைவ, வைணவத்தைப் பார்க்கக் கூடாது. அதற்காகக் தான் சைவ சமயதத்திற்குச் சைவ சித்தாந்த சாத்திரங்கள் கி.பி. 12 – கி.பி. 14 ஆம் நூற்றாண்டுகளில் உருவாக்கப்பட்டன.

சைவ சித்தாந்த சாத்திரங்களில் அடிப்படை நூலாகத் கொள்ளப்படுவது மெய்கண்டார் இயற்றிய 'சிவஞான போதம்'. இதில் முதல் மனிதனின் வீழ்ச்சி – அவனை மீட்பதற்குச் கடவுள் அவதாரமாக வந்தது – அவனை மீட்பதற்காக அவர் தம்மைப் பலியாகக் கையளித்த 'தவம்' – புனிதர்களின் (பரிசுத்தவான்கள்) ஐக்கியம் ஆகியன முறையாகச் சொல்லப்படுகின்றன. இவை அனைத்தும் கிறித்தவத்தை விளக்குவன.

அது போல வைணவத்தின் இறையியலாக 'விசிட்டாத்வைதம்', 'துவைதம்' முதலியன விளங்குகின்றன. இவற்றின் மூலங்களாகப் 'பிரமசூத்திரம்', 'உபநிடதங்கள்', 'பகவத் கீதை' முதலியன விளங்குகின்றன. உபநிடதங்களின் சாரமாக விளங்குவதுதான் பிரமசூத்திரம். இதனை வியாசர் என்ற பாதராயணர் இயற்றினார். சிவஞான போதம் எவ்வாறு சூத்திரங்களைக் கொண்டு உருவாக்கப் பட்டதோ அவ்வாறே பிரமசூத்திரங்களும் சூத்திரங்களைக் கொண்டு இயற்றப்பட்டது.

பிரமசூத்திரம் என்னும் நூல் வேதாந்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை மிக மிக நுட்பமாக விளக்கிக் காட்டுகிறது. வேதத்தை அந்தப் படுத்துவதுதான் வேதாந்தம். வேதங்கள் பலிசெலுத்தி வழிபடுவதைக் குறிப்பது. இது பழைய ஏற்பாட்டைப் போன்று பலிக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. வேதாந்தமோ பலி நிறைவேற்ற சமயத்தை விளக்குவது. கடவுள் மனித இனத்தை மீட்பதற்காக மனிதனாக அவதரித்து, தம்மையே பலியாக்கினார் ; ஆகவே இனி, பலி செலுத்த வேண்டிய தேவை இல்லை.

ஆகவே தான் 'அகம் யக்ஞம்' (நானே பலி) என்பது உபநிடதங்களிலும் பிரமசூத்திரத்திலும் கீதையிலும் சொல்லப்படுகிறது. இயேசு கிறித்துவின் சிறப்புகளை விவரிப்பதாகப் பிரமசூத்திரம் விளங்குகிறது. பிரம சூத்திரம் காட்டும் பிரமன் இயேசுவே என விளக்கிக் காட்டுகிறது. இந்நூலில் கிறித்தவத்தின் மூவொரு கடவுட் கோட்பாடு சிறப்பாகக் காட்டப்படுகிறது. இதனை 'விவிலிய ஒளியில் பிரமசூத்திரம்' என்னும் நூலைத் தமிழிலும் 'Brahma Sutras and Christianity' என்னும் நூலை ஆங்கிலத்திலும் படித்துப் பயன் பெறலாம்.

ஆகவே, சைவத்திலும் வைணவத்திலும் இயேசு கிறித்து, 'அறியப்படாத கடவுளா'யிருக்கிறார் என்பது தெளிவாகிறது. இத்தகைய நூல்களையும் கருத்துகளையும் கிறித்தவர்கள் தேடிக் கண்டுபிடித்து, பாவத்திலும் சிலை வணக்கத்திலும் சிக்கியுள்ள மக்களை நல்வழிப்படுத்தி, உலக மீட்பராகிய இயேசுவிடம் ஆற்றுப்படுத்த வேண்டுவது கிறித்தவர் ஒவ்வொருவரின் கடமை ஆகும். இதனைத் தெளிவுபடுத்தும் வகையில் சகோ. தாயப்பன் இந்நூலை ஆக்கியுள்ளார். அவரது ஊழியம் சிறப்படைய வாழ்த்துகிறேன். இந்நூலைக் கற்கின்றவர்கள் பக்கத்தில் உள்ளவர்களுக்கும் நண்பர்களுக்கும் வாங்கிக் கொடுத்து இயேசு பெருமான் காட்டிய இறை அரசு விரிவடையச் செய்வார்களாக !

கடவுள் ஒருவரே ! பெயர்கள் தாம் வேறு !
சைவருக்கும் வைணவருக்கும் கிறித்தவருக்கும் கடவுள் ஒருவரே !
"அவர்தாம் இயேசு"
உண்மையை உணருங்கள் !
உண்மை உங்களை விடுதலையாக்கும் !

பேராசிரியர் முனைவர் **யா.தா. பாசுகரதாசு**

INDIAN ANARYA SAMAJ MINISTRIES
INDIAN ANARYA SAMAJ TRUST
16-A, CHIDAMBARANATHAN STREET,
R.V.PURAM, NAGERCOIL – 629 001.
Cell: 98651-90390

M. Sunder Yesuvadian (a) M.S. Mankad,
Founder

10.10.2010

அணிந்துரை

இரண்டாயிரம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் எட்டாம் தேதி,சென்னை முத்தாப்புதுபேட்டையில் பாஸ்டர் எம். ஆல்பர்ட் அவர்களது “பெத்தேல் கிரிஸ்டியன் அசெம்ளி (இன்றைய கில்கால் திராவிட வேதாகம திருச்சபை) சபையில் வைத்து ஒரு ஜெபக்கூட்டம் நடந்தது. திராவிட ஆன்மீக இயக்கத்தின் நிறுவனரான முனைவர் மு.தெய்வநாயகமும், அவரது குழுவினரும் இந்த ஜெபக்கூடுகையை வழி நடத்தினர். அந்த நாளின் முக்கிய ஜெபக்குறிப்புகளில் ஒன்று - “ திராவிட ஆன்மீக இயக்கத்தின் ஆய்வாளர்களின் ஆய்வுகளின் மூலம் கர்த்தர் இந்த காலத்தில் வெளிப்படுத்திக்கொண்டிருக்கும் “ஆதி இந்தியக் கிறிஸ்துவ சத்தியங்களை” இந்திய கிறிஸ்துவர்களுக்கும், பொது மக்களுக்கும் எளிய நடையில் விளக்கிக் கூறும் வண்ணம் நூல்களை எழுதும் எழுத்தாளர்களையும், எளிய நடையிலுள்ள நூல்களையும் தாரும்” என்பதாக இருந்தது. அந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட இறைவன், அதே வருடத்தில் தானே “உலக மதங்களின் ஆய்வுப்பார்வையில் இந்தியா ஒரு கிறிஸ்துவ நாடு” என்ற ஒரு நூல் வெளி வர உதவினார்.இந்த நூல் ஆங்கிலத்திலும், மலையாளத்திலும் வெளி வர கர்த்தர் தொடர்ந்து உதவினார். இந்த புதிய கருத்துக்களை சுவிசேஷ ஊழியர்களும்,போதகர்களும்,விசுவாசிகளும் பரவலாக அறிய வாய்ப்பளிக்கும் வகையில் மேலும் பல தேவதாசர்கள் அநேகம் நூல்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர்.இந்த நூல்களின் சிலவற்றை இந்த நூலின் ஆசிரியர் பார்வை நூற்பட்டியலில் குறிப்பிட்டுள்ளார்.

தீவிர இந்து மத பக்தராக இருந்த சகோ.எஸ்.தாயப்பன் அவர்களையும், அவருடைய குடும்பத்தையும் இயேசு தம்முடைய

மகத்துவமான பணிக்காக அழைத்து,போதித்து,பக்குவப்படுத்தி வல்லமையாக பயன்படுத்தி வருகிறார். திரு. தாயப்பன் அவர்களை நாகர்கோவிலுக்கு அழைத்து கன்வென்ஷன் நடத்த பாஸ்டர் எம்.ஜி.வில்சன் அவர்கள் ஒழுங்கு செய்தார்.நாங்கள் பழகினோம். "இந்தியா ஒரு கிறிஸ்துவ நாடு", "திராவிடரும் திராவிட இந்தியாவும்" என்ற எனது நூல்களையும்,எனது மூத்த சகோதரர் திரு எம்.கிறிஸ்டோபர், என் இளைய சகோதரர் பாஸ்டர் எம்.ஆல்பர்ட் மற்றும் முனைவர் ஜெ.டி.பாசுகரதாசு ஆகியோர் எழுதிய பல நூல்களையும் திரு.தாயப்பன் அவர்களுக்கு கொடுத்தேன், ஆதி இந்தியக் கிறிஸ்துவமாகிய சைவமும் வைணவமும் கிறிஸ்துவமே என்ற சத்தியத்தை எடுத்துக்கூறுவது இந்தக்காலத்துக்கு மிகவும் பொருத்தமான ஊழிய வழிமுறையாக இருக்கும் என்று கருத்து பரிமாறிக்கொண்டோம்.

எப்படியாகினும் இந்திய மக்கள் கிறிஸ்துவை அறிய வெண்டும் என்ற ஆதங்கத்தோடு விவிலியத்தையும்,ஆய்வு நூல்களையும் ஆழ்ந்து கற்றுக்கொள்ளும் வரத்தை பெற்ற திரு.தாயப்பனுக்கு,**"சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே"** என்ற இந்த நூலை இவ்வளவு குறுகிய காலத்துக்குள் எழுதி வெளியிட அருள் வழங்கியது தூய ஆவியானவரே என்பதுதான் உண்மை. சைவ-வைணவ மதத்துக்கும், கிறிஸ்துவத்துக்கும் உள்ள தொடர்பை விளக்க திரு.தாயப்பன் அவர்கள் 50 தலைப்புகளை வழங்கியுள்ளார். இந்த 50 தலைப்புகளை கிறிஸ்துவப்போதகர்களும்,சைவ-வைணவ மத போதகர்களும் இணைந்து கற்றுக்கொள்ளும் நாள் வரவேண்டும். அன்றுதான் இந்தியா ஆன்மீக விடுதலை அடையும்.

ஆதி இந்தியக் கிறிஸ்துவம் பற்றிய ஆய்வுக்கருத்துக்களையும் பயன்படுத்தி ஊழியம் செய்யும் திரு.தாயப்பன் அவர்களது இந்த நற்செய்திப்பணிகளை தேவன் மேலும் விரிவடையச் செய்வாராக. இயேசுவை நிழலாக ஆராதித்து வரும் சைவ-வைணவ இந்தியர்களை நிஜமான இயேசுவை ஆராதிப்பதற்கு ஏதுவாக இந்த நூலை தேவன் தாமே வல்லமையாக எடுத்துப்பயன்படுத்துவாராக.

எம்.சுந்தர் யேசுவடியான்

என்னுரை

“யதோ வா இமானி பூதானி ஜாயந்தே
ஏன ஜாதனி ஜீவந்தி
யத் பிரய நித்ய பிசம் விஸந்தி” – தைத்திரிய உபநிடதம் II 1.9

(எல்லாப் பொருட்களும் எதிலிருந்து பிறந்து, எங்கு வாழ்ந்து, எதனிடத்திற்குத் திரும்புகிறதோ அதுவே பிரமன் என்கிறது மேற்கண்ட உபநிடதம்)

இந்தப் பிரம்மன் யார்? என்ற தேடலில் பல்வேறு சமய நூல்களையும், வேதங்களையும், வேதாந்தங்களையும், புராணங்களையும், தேடிப் பிடித்து படித்தேன். தெளிவு பிறந்தது. அஞ்ஞானம் விலகியது. சத்தியம் விளங்கியது. சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே என்னும் வெளிப்பாடும் கிடைத்தது. அதை வெளிப்படுத்துவதே இந்த நூல்.

மதம் என்ற எல்லைக்கு அப்பாற்பட்டு ஆன்ம விடுதலை, முக்தியை மட்டுமே மனதில் கொண்டு ஆராயப்பட்ட ஆய்வு நூல்கள் அவைகள். எது சத்தியம், எந்த மார்க்கத்தில் சென்றால் மெய்ப்பொருளை, அந்த பரப்பிரம்மத்தை அடைய முடியும் என்று நம் வேதாந்தங்கள், வேதாந்திகள், சித்தர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் கூறியுள்ளார்கள் என்பதை தெளிவாக ஆராய்ந்து அறிந்த ஆய்வுகளின் சத்தியத்தை சுருக்கி இதில் எழுதியுள்ளேன்.

அப்படி எடுத்து எழுதுவதற்கு அனுமதி அளித்த திரு.ஆ. கிறிஸ்டோபர், NILT நிறுவனர் கா.ச. பாண்டித்துரை, டாக்டர் யா.தா.பாஸ்கரதாஸ், டாக்டர் தெ.தேவகலா, திரு. சுந்தர் இயேசு வடியான், டாக்டர் கா. சண்முகநாதன் எழுதிய ‘ஓர் அன்புக் கடவுளின் உண்மைக் கதை’ என்ற நூலில் இருந்து பல குறிப்புகளை வெளிட அனுமதி அளித்த திரு. ஜோசப் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மதிப்புரை, அணிந்துரை அளித்த தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட தேவ ஊழியர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

இந்த நூலைப் படிக்கும் ஆன்மாக்கள் அனைவரும் சத்தியத்தை அறிந்து மெய்ஞானம் பெற்று மெய்ப்பொருளைப் பற்றிப் பிடித்து ஆன்ம விடுதலை பெற்று உய்ய எல்லாம் வல்ல இறையை வேண்டி நிற்கிறேன்.

சென்னை –73
15.10.2010

மெய்ப்பொருள் தாகம் கொண்ட
இறை ஊழியன்
எஸ். தாயப்பன்

‘சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே’

நான் பிறந்த ஊர்

நான் பிறந்து வளர்ந்து படிச்சது எல்லாமே காமராஜர் மாவட்டத்தில் உள்ள சாத்தூரில் தான். அது திருநெல்வேலிக்கு போகிற ட்ரெயின் ரூட்ல விருதுநகருக்கு பக்கத்தில இருக்கு. சாத்தூர் வெள்ளரிப்பிஞ்சு, சாத்தூர் மிளகாய், சாத்தூர் சண்முக நாடார் கடை காராச்சேவு எல்லாம் எப்படி ரொம்ப ஃபேமஸோ, அதே போல சாத்தூர் சாக்கடையும் ரொம்ப ரொம்ப ஃபேமஸ்! சும்மா குடலை ஒரு புரட்டு புரட்டி எடுத்திடும். அவ்வளோ நாத்தம். சாத்தூரை விட்டு நான் 1960ல எனது ஹைஸ்கூல் படிப்பை முடிச்சுட்டு இந்திய விமானப் படையில சேருறதுக்காக நான் ஊரை விட்டு வெளியே வந்துட்டேன். இருந்தாலும் இப்பயும் சாத்தூரில் என்னால் என்றும் எப்போதும் மறக்க முடியாதது – சாத்தூரின் தெற்கே ஓடுகின்ற நல்ல அகலமான ‘வைப்பாறு’ தான். வருஷத்தில முக்கால் வாசி நாட்கள் அது வறண்டு தான் கிடக்கும். எப்பவாவது மழை நெறைய பெஞ்சு மேற்கே உள்ள அணைக்கட்டு நிரம்பிடுச்சுன்னா, தண்ணியை திறந்து விட்டுடுவாங்க. ஆத்துல புதுத் தண்ணி செம்மண் கலர்ல நொங்கும் நுரையுமா இரு கரையையும் தொட்டுக்கிட்டு நிரம்பி வழிய ஓடுறதைப் பாக்க ஊரே கூடிடும். நாங்க சின்னப் பசங்களா இருக்கும் போது அந்த ஆற்றுப் பாலத்தில ஏறி நின்னுக்கிட்டு ஆற்றுத் தண்ணியில குதிச்சு நேரம் காலம் போறது தெரியாம கும்மாளம் போட்டு நீந்துவோம்.

ஆற்றுக் கரையெல்லாம் தோப்பு

தண்ணீர் இல்லாத நாட்களிலே ஆற்றில குழி தோண்டி உறை பதிச்சு, வாளியில நீர் மொண்டு குளிப்போம். லீவு மற்றும் திருவிழா நாட்கள்ல ரெண்டு மூணு

ஃபேமிலியா சேர்ந்துக்கிட்டு வீட்ல சித்ரான்னங்கள் எல்லாம் செய்து எடுத்துக்கிட்டு குழந்தை குட்டிகளோட அந்த ஆற்றுக்குப் போயி வெள்ளை வெளேர்னு இருக்கிற அந்த ஆற்று மணலில நல்லா விளையாட்டிட்டு, நிலாச்சோறு சாப்பிட்டுட்டு ஜாலியா வருவோம். ஆற்றில ஊரை ஒட்டி இருக்கிற வடக்குக் கரை முழுக்க எங்கே பார்த்தாலும் பச்சைப் பசேல்னு நிறைய நந்தவனமா (தோப்பு) இருக்கும். அந்த நந்தவனத்தில தென்னை, மா, பலா, நெல்லி போன்ற மரங்களும், தோப்பின் நடுவில பெரிய பெரிய துலாக் கிணறுகளும் இருக்கும். அந்த கிணத்தைச் சுத்தி சிமெண்ட்டுனாலேயே கட்டி இருக்கிற பெரிய தொட்டிகள் இருக்கும். துலாபாரக் கம்புகளில் கட்டி இருக்கும் வாளியின் மூலமாக தண்ணீரை சேந்தி சேந்தி தொட்டியில யாராவது ஊத்துவாங்க. ஜனங்கள் நேரம் போறது தெரியாம தண்ணியை மொண்டு மொண்டு குளிப்பாங்க. ஜாலியா இருக்கும். அப்படி குளிக்கிற தண்ணியெல்லாம் சின்ன வாய்க்கால் மூலமா தோட்டத்தில இருக்கிற செடி, கொடி, மரங்களுக்குப் பாயும். அங்கே துளசி, வில்வம், நாகலிங்க மரம் மற்றும் பல மூலிகை செடிகளும் கூட இருக்கும்.

அரசமரத்துப் பிள்ளையார்

அந்த தோப்புகளின் முகப்பில் பெரிய ஆலமரம் அல்லது அரசமரம் இருக்கும். அந்த மரத்தின் அடியில மரத்தைச் சுத்தி சிமெண்ட்டுனால ஒரு திண்டு கட்டியிருக்கும். அதுல ரோட்டைப் பார்த்தா மாதிரி ஒரு பிள்ளையாரு சிலை இருக்கும். அந்த சிலைக்கு செம்பருத்திப் பூ, மஞ்சள் அரளிப் பூ மற்றும் அந்த தோப்பின் மற்ற பூக்களைக் கொண்டும் அலங்காரம் பண்ணியிருப்பாங்க. கிணத்துல குளிச்சுட்டு ஈர உடையோட அந்த பிள்ளையாரண்டை வந்து மூணு தோப்புக் கரணம் போட்டுட்டு, தாடையில மாறி மாறி ரெண்டு தட்டு தட்டிட்டு, விரலை மடக்கி நெத்தியிலேயும் லேசா ரெண்டு குட்டு குட்டிட்டு, அந்த சிலைக்குப் பக்கத்தில இருக்கிற ஒரு கல்தூண் மேல கொட்டி வச்சிருக்கிற விபூதியை எடுத்து, உள்ளங்கையில் அதை கொஞ்சம் தண்ணீர் விட்டுக் குழைத்து மூன்று விரல்களினாலே அதை அள்ளி அப்படியே நெத்தியிலேயும், மார்லேயும், தோள் பட்டை, புஜம், மணிக்கட்டு, முழங்கையை மடிச்சு அந்த முஷ்டியிலேயும் பட்டை பட்டையா மூணு திருநீர்க் கோடுகளை இட்டு, சிவப்பழமா அந்த அரசமரத்தை மூணு தடவை பிரதட்சணமாகவும், மூணு தடவை அப்பிரதட்சணமாகவும் என் அப்பா வலம் வந்து மீண்டும் அந்த புள்ளையாருக்கு முன்னாடி உக்கி போடுவாரு.

நான் சின்னப் பிள்ளையா இருக்கும் போது எங்கப்பா என்னையும் எழுப்பி, ஆற்றங்கரை தோப்புக்கு குளிக்கிறதுக்கு கூட்டிட்டு போயிடுவாரு. போகும் போதே ஒரு வேப்பங்குச்சியையோ, ஆலமரத்து விழுதையோ ஒடிச்சு பல் தேய்க்கிறதுக்குன்னு கையில கொடுத்திடுவாரு. அந்த குச்சியை வச்சு தேச்சுக்கிட்டே எங்க அப்பா பின்னாடி ஓடுவேன். குளிச்சுட்டு எங்க அப்பா அந்த

புள்ளையாருக்கு முன்னாடி உக்கி போடுறது மாதிரியே நானும் செய்வேன். என் அப்பாவும், மத்த பெரிய ஆட்களும் அப்டி காதை பிடிச்சு கீழே லேசா இழுத்து உக்கி போட்டு தாடையில தட்டி, நெத்தியில குட்டிக்கும் போது எனக்கு சிரிப்பா வரும். ஏன் இப்படிச் செய்யுறாங்கன்னு என் பிஞ்சு உள்ளத்தில 1008 கேள்விகள் எழும்.

என் குழந்தை உள்ளத்தை குழப்பிய கேள்விகள்

'அப்பா, சாமி ஏன் கல்லா இருக்காரு? அவரு ஏன் மரத்தடியில உட்கார்ந்துகிட்டு இருக்காரு? அவருக்கு வீடு இல்லையா? எதுக்கு நாம மூணு தடவை அந்த மரத்தை சுத்தணும்? காதைப் படிச்சுட்டு எதுக்கு உக்கி போடணும்? ஏன் தாடையில போட்டுக்கிடணும்? ஏன் நெத்தியில குட்டிக்கிடணும்? விபூதி ஏன் பூசணும்? அதுல ஏன் மூணு கோடு? என்றெல்லாம் பல கேள்விகளைக் கேட்டு என் அப்பாவை ஒரு வழி பண்ணிடுவேன். என் தொணதொணப்புக்கெல்லாம் என் அப்பா பொறுமையா பதில் சொல்லிக்கிட்டே வருவாரு.

'சாமிக்கு இந்த உலகமே வீடு தான் கண்ணா. அவர் தூணிலும் இருப்பார். துரும்பிலேயும் இருப்பாரு. கல்லிலும் இருப்பாரு. அவரு எல்லா இடத்திலயும் இருக்காரு. அவரு சர்வ வியாபி' என்று சொல்லி என் சின்ன வாயை அடைச்சிடுவாரு. 'ஏன் மரத்தடியில உட்கார்ந்து இருக்காரு?' 'மரத்தடியில நெறைய நிழல் இருக்கும் இல்லையா? அங்கே வெயில் அடிக்காதில்லையா? போறவங்க, வர்றவங்க எல்லாரையும் பாக்குறதுக்கு இந்த இடம் வசதியா இருக்குல்லையா? அதுனால தான் இங்க உட்கார்ந்துக்கிட்டு இருக்காரு'. இந்த பதில் எனக்கு கொஞ்சம் கன்வின்ஸ் பண்ற மாதிரி இருந்துச்சு.

மரத்தை ஏன் மூணு தடவை சுத்தணும்?

'அப்பா, எதுக்கு அந்த மரத்தை மூணு தடவை சுத்தணும்?' 'நிறைய தடவையும் சுத்தலாம் தான். ஆனா நம்மைப் படைத்தல், காத்தல், அழித்தல்ங்கிற மூணு முப்பெரும் தொழிலையும் செய்யுற கடவுளுக்கு நன்றி கூறும் விதமா மூணு தடவையாவது சுற்றணும்னு பெரியவங்க சொல்லுவாங்க. அது தான் ஐதீகம்!'. என்னவோ எனக்கு பெரிசா புரிஞ்சா மாதிரி 'ஓ.. அப்படியா .. அதுக்குத் தானா..?'ன்னு தலையை மேலும் கீழும் ஆட்டுவேன். 'ஆமா... காதைப் பிடிச்சுக்கிட்டு எதுக்கு உக்கி போடணும்?'. 'எத்தனையோ தப்பெல்லாம் நாம பண்றோம் இல்லையா? அவைகள் எல்லாத்தையும் மன்னிச்சுடுங்கப்பான்னு கடவுள் கிட்ட தோப்புக்கரணம் போட்டு நாம மன்னிப்பு கேட்கிறோம்னு அதுக்கு அர்த்தம்'. ஆமா.. ஆமா.. எத்தனையோ தப்பு பண்றோமே. நேத்துக்கி கூட பக்கத்து வீட்டு பாஸ்கரனோட பென்சிலை அவனுக்கு தெரியாம எடுத்துட்டு வந்துட்டேனே. அது தப்புத் தானே! தப்பு செஞ்சா கடவுள் கண்ணைக் குத்திடுவாரே. அதுனால தோப்புக் கரணம் போட்டு மன்னிப்பு கேக்கிறது நல்லது தான்னு நான் மனசுல நெனைச்சுக்கிடுவேன். இந்த பதிலும் சரியாவே பட்டுச்சு.

'ஓ... தாடையில போட்டுக்கிடுறதும், நெத்தியில குட்டிக்கிடுறதும் அதுக்குத் தானோ... சரி சரி சாமி குட்டினா நமக்கு வலிக்கும். நாமளே நம்மை குட்டிக்கினா, வலியில்லாம மொள்ள குட்டிக்கிடலாமே. வெரிகுட். நல்ல ஐடியா. இதுவும் சர்த்தான் என்று என்னை நானே சமாதானப்படுத்திக் கொள்வேன். கொஞ்ச நேரம் கழிச்சு 'அப்பா' என்பேன். 'என்னப்பா?'. 'விபூதியை எதுக்கு பூசணும்?' 'ஏலே, நீ இன்னும் அந்த சப்ஜெக்ட்டை விடலையா?' என்று சிரிச்சுக்கிட்டே பார்ப்பார். 'சொல்லுப்பா' என்பேன். 'அது .. அது..' அதுக்கு டக்குன்னு அப்பாவால பதில் சொல்ல முடியலை. கொஞ்சம் யோசிக்கிட்டு 'நாம இப்போ குளிச்சோம் இல்லையா? தலையெல்லாம் ஒரே ஈரமாயிடுச்சுல்லே. நமக்கு ஜலதோஷம் பிடிக்காம இருக்கிறதுக்கு அந்த ஈரத்தையெல்லாம் இந்த விபூதி உறிஞ்சு எடுத்துடும். அதுக்குத் தான் நெத்தியில விபூதி பூசுறோம்'. பொடியனை எப்படியோ சமாளிச்சுட்டோம்கிற ஒரு திருப்தியில என்னைப் பார்த்து சொல்வாரு.

'நெத்தியிலே பூசறது தலையில இருக்கிற ஈரத்தை உறிஞ்சுறதுக்கு. கையில, உடம்புல எல்லாம் எதுக்குப் பூசணும்? அதுலேயும் ஏன் மூணு விரலை வச்சு மூணு கோடு போடணும்?'. இது வரை பொறுமையா பதில் சொல்லி வந்துக்கிட்டு இருந்த அப்பாவுக்கு கொஞ்சம் எரிச்சல் வந்துடுச்சு. ஏன்னா அதுக்கு அவருக்கு பதில் சொல்லத் தெரியலை. 'போதும். சும்மா தொண தொணன்னு கேட்டுக்கிட்டே இருக்கக் கூடாது. நீ பெரிய ஆளா ஆனாப் பிறகு உனக்கே எல்லாம் புரியும். இப்போ கம்முன்னு பேசாம வா' என்று கொஞ்சம் எரிச்சலோடேயே சொல்லிட்டு கொஞ்சம் வேகமாகவும் நடக்க ஆரம்பிச்சாரு. ஆனா நான் பெரிய பையனா, பெரிய ஆளா ஆனாப் பிறகும், பல வேதங்களையும், புராணங்களையும் படிச்சாப் பிறகும் கூட எனக்கு அதுக்கு பதிலே கிடைக்கலை.

சந்தனம், குங்குமப் பொட்டின் அர்த்தம் என்ன?

அதே மாதிரி அந்த மூணு விபூதிக் கோடுகளின் நடுவில எதுக்காக சந்தனம் இடணும்? அதுல ஏன் சிகப்பா குங்குமப் பொட்டு வைக்கணும்? அதுக்கு என்ன அர்த்தம்? அப்படி இடுவதின் தாத்பர்யம் என்ன? புரியலை. இது சம்பந்தமா பல புராணங்களையும், வேதங்களையும் தேடினேன். எனக்கு இது பத்தின விளக்கம் கெடைக்கலை. அதே போல கீழ்கண்ட இந்த கேள்விகளுக்கும் இவைகளை ஏன் செய்யணும்? எதுக்காக செய்யணும்கிற விளக்கம் நான் பல வேதங்களில் தேடிப் பார்த்தும் எனக்கு கிடைக்கலை.

1. ஏன் நாமம் போடணும்?
2. அதில மூணு கோடுகளுக்கு என்ன அர்த்தம்?
3. அதில ரெண்டு கோடு வெள்ளையாயும், நடுக்கோடு ஏன் சிகப்புக் கலர்லேயும் போடணும்?

4. அந்த சிகப்புக் கோடு மேலே ஒல்லியாயும், கீழே வரவர ஏன் கொஞ்சம் பருமனாகவும் இருக்கு?
5. தேங்காய், பழம் உடைப்பதின் தாத்பர்யம் என்ன?
6. உயிர் பலியிட்டு எதுக்காக அதன் இரத்தத்தை சிந்தணும்?
7. அப்படி பலியிட்டதை ஏன் பிரசாதமாக சாப்பிடணும்?
8. சிகப்பான குங்குமத்தை ஏன் பயன்படுத்தணும்?
9. வீட்டு நிலைப்படிகளில் ஏன் மஞ்சள் பூசி, குங்குமம் வைக்கணும்?
10. இந்த விபூதி எப்படி வந்துச்சு? இதற்கு மூலம் எங்காவது இருக்கா?
11. கருவறைக்குள் போகும் போது ஏன் கோவில் குருக்கள் மணி அடிச்சுக்கிட்டே போகணும்?
9. எல்லாக் கோயில்களிலேயும் பலி பீடங்கள் இருக்கு. ஆனா எந்தக் கோயில்களிலேயும் இப்போ எந்த பலியையும் கொடுக்கிறதில்லையே. ஏன்?

சத்தியத்தைத் தேடினேன்

இது போன்று பல கேள்விகள் என் உள்ளத்தில் எழுந்ததுண்டு. எங்கு தேடியும் எனக்கு விடை தான் கிடைக்கவில்லை. நம்ம முன்னோர்கள், மூதாதையர்கள் இதையெல்லாம் ஒரு காரணமில்லாமலா ஏற்படுத்தி இருப்பாங்க? கண்டிப்பா அதுக்கு ஏதாவது ஒரு முகாந்திரம், அர்த்தம் இருக்கும். நமக்கு தான் அதுக்கு விளக்கம் கிடைக்கலை, தெரியலைன்னு என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டேன். நெறைய படிப்பேன். அதுவும் ஆன்மீக சம்பந்தமா அதிகம் படிப்பேன். நிறைய ஆன்மீகவாதிகள், பக்திமான்கள், யோகிகள், தியானிகளோடு பழகுவேன். ராமகிருஷ்ணா மடம் போவேன். வேதாத்திரி மகரிஷி புத்தகங்கள் என இப்படி பலரின் புத்தகங்களையும் படிப்பேன். மடத்தில் பலரோடு கலந்துரையாடுவேன். எல்லாக் கோயில்களுக்கும் போவேன். கோயிலுக்குப் போனா, வெறுமே சாமியை மட்டும் கும்பிட்டுட்டு வர மாட்டேன். கோயிலின் ஒவ்வொரு அம்சமாகப் பார்த்து, ரசிச்சு, ஆராய்ஞ்சு, அதன் ஸ்தல புராணம், மகிமை எல்லாம் கேட்டு அறிஞ்சு, அந்த திருத்தலம் சம்பந்தமாய் உள்ள நூல்களையும் அந்த கோவில் தேவஸ்தானத்தில் கேட்டு வாங்கிப் படிப்பேன்.

இயேசு என்னைத் தொட்டார்

இப்படியெல்லாம் நெறைய படிச்சதுனால தான் நான் ஒரு தீவிரமான, வைராக்கியமுள்ள ஒரு இந்துவாக, இந்து மதம் ஒரு அர்த்தமுள்ள மதம், நமது தமிழ் திராவிடக் கலாச்சாரம், நாகரீகம், சமூகம், பண்பாடு, வாழ்க்கை முறை அனைத்துமே மிகவும் தொன்மையானது. இந்த உலகத்தின் மற்ற நாகரீகங்களுக்கெல்லாம் முன்னோடியாய் இருப்பது என்று அடிச்சு

திட்டவட்டமாய் வாதம் செய்வேன். அப்படிப்பட்ட என்னைத் தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து 2001ல் என்னுடைய மகன் கார்த்திக்கின் வியாதியின் மூலமாக அமெரிக்காவில் தொட்டார். செவ்வாடையில் ஓம் சக்தி பக்தர்களாக இருந்த என் முழுக் குடும்பத்தையும் இயேசு ***'பக்தி உள்ளவனை கர்த்தர் தனக்காகத் தெரிந்து கொண்டார்'*** என்று வேதத்தில் சொல்லப்பட்டது போல தெரிந்து கொண்டார். இயேசு எங்களை எப்படி சந்தித்தார், நாங்கள் ஏன் கிறிஸ்தவர்களாக ஆனோம் என்பதை **'என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும்'** என்று ஒரு சாட்சி நூலாக எழுதினேன். தமிழிலில் இன்று இந்த நூல் 2 லட்சம் பிரதிகளுக்கு மேல் விற்கப்பட்டுள்ளது. இது ஆங்கிலம், கன்னடம், மலையாளம், தெலுங்கு என பல மொழிகளிலும் மொழி பெயர்ப்பும் செய்யப்பட்டுள்ளது. எங்களது சாட்சியை VCDயாகவும் வெளியிடவும் கர்த்தர் கிருபை பாராட்டினார். இன்று 1,65,000 VCDக்கள் விற்கப்பட்டு விட்டன. VCD களை பார்க்கின்ற, சாட்சி நூலை படிக்கின்ற எவருடைய உள்ளத்தையும் அது உலுக்குவதாக இருப்பதாக அனைவருமே கூறுகின்றனர். பெருமை எனக்கு இல்லை. துதி, கனம், மகிமை, மாட்சிமை, பெருமை எல்லாம் இந்த வானத்தையும், பூமியையும் படைத்த கர்த்தருக்கே உரியது. என்னோட எல்லா புத்தகங்களும், VCDக்களும் பத்து ரூபாய் மட்டுமே.

விளக்கம் தந்த வேதாகமம்

கிறிஸ்துவுக்குள்ள நான் வந்தாப் பிறகு பரிசுத்த வேதாகமத்தையும், அதன் விளக்க நூல்களையும் நிறைய படிச்சேன். அது என்னை கிறிஸ்துவுக்குள்ள பலப்படுத்தியது மாத்திரமல்ல, சிறு வயது முதல் விடை காண முடியாமல் என் உள்ளத்தில் இருந்த அநேக கேள்விகளுக்கும் அதில் விளக்கம் கிடைத்தது. தெளிவு கிடைக்கக் கிடைக்க அப்படியே ஆடிப் போயிட்டேன். ஐயோ நாம இதுவரைக்கும் எவ்வளவு அறியாமையில இருந்திருக்கிறோம். நாம மாத்திரமல்ல, நம்ம தேசத்தில் இருக்கிற எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள் எப்படி ஒரு தவறானதை, ஒரு நிழலை, ஒரு டூப்ளிக்கேட்டை பின்பற்றி வருகிறோம். எப்படியெல்லாம் நாம் சில சுயநலவாதிகளால் வஞ்சிக்கப்பட்டுள்ளோம் என்பதை அறிந்து அப்படியே நொந்து போய் விட்டேன். இதில கொடுமை என்னன்னா, நாம் எல்லாருமே வஞ்சிக்கப்பட்டு இருக்கிறோம்கிறது தெரியாமலேயே அது தான் உண்மையானதுன்னு காலம் காலமாக நம்பி ஏமாந்து கொண்டிருக்கிறோம் என்பது தான். இருளில் வாழும் இந்த கோடிக்கணக்கான மக்களுக்கும் சரியானதொரு தெளிவான விளக்கங்களை கொடுத்து அவர்களையும் வெளிச்சத்திற்கு கொண்டு வரணுமேங்கிறதுக்காக இது சம்பந்தமான பல நூல்களைத் தேடித் தேடி கண்டுபிடிச்சுப் படிக்க ஆரம்பிச்சேன். அப்படிப் படிச்சதின் விளைவே உங்கள் கைகளில் இருக்கும் இந்த நூல்.

திருக்குறள் கிறிஸ்தவ உபதேசங்களின் முதல் தமிழ்நூல்

சகோ. ஆ. கிறிஸ்டோபர் அவர்கள் எழுதிய '**திருக்குறளின் உட்கிடக்கை கிறிஸ்தவமே**' என்ற நூலை வாசித்தேன். திருக்குறளில் உள்ள 1330 குறட்பாக்களும் எடுத்துரைப்பது கிறிஸ்தவ உபதேசங்களைத் தான் என மிகத் தெள்ளத் தெளிவாக, ஆதாரபூர்வமாக, ஆணித்தரமாக, நெத்தியடியாக, ஒருத்தருமே மறுத்துச் சொல்ல முடியாதபடி அவ்வளவு அருமையானதொரு விளக்கம் கொடுத்து எழுதியிருக்கிறதைப் படிச்சுட்டு அப்படியே ஆடிப் போயிட்டேன். இது எத்தனை பேருக்குத் தெரியும்? எவ்வளவு பெரிய ஒரு சத்தியம் இதுவரை யாருக்குமே தெரியாம இருந்திருக்கே. 'உலகத் திருமறை' என்று போற்றப்படும் ஒரு தெய்வீக நூலை இது நாள்வரைக்கும் எப்படி நாம தவறா புரிஞ்சுக்கிட்டு இருந்திருக்கிறோம்னு நெனைச்சு இதை உடனே இந்த உலகுக்கு அறிவிக்கணுமேங்கிற ஒரு அவசர ஆதங்கத்தில என்னுடைய '**இந்தியாவுக்கு இயேசு கிறிஸ்து தேவை ஏன்?**'கிற புத்தகத்திலே '**திருக்குறள் இயேசுவின் திருக்குரல்**'னு தலைப்பிட்டு சகோ.ஆ.கிறிஸ்டோபர் அவர்கள் எழுதிய இந்த புத்தகத்தைப் பற்றியும், இது சம்பந்தமாக டாக்டர் ஆ.தெய்வநாயகம், டாக்டர் தேவகலா மற்றும் பலரும் எழுதியிருக்கிற அருமையான ஆராய்ச்சி நூல்களைப் பற்றியும் சின்னதாக எழுதி சாம்பிளுக்கு சில திருக்குறளுக்கு மாத்திரம் விளக்க உரையும் அளித்து, மேற்கொண்டு விளக்கமாகப் படிக்க அந்த நூல்களை வாங்கிப் படிக்கவும், அவைகள் எங்கு கிடைக்கும் என்றும் எழுதினேன்.

சைவமும் வைணமும் கிறிஸ்தவமே

அதுக்கப்புறம் சகோ.ஆ. கிறிஸ்டோபர் அவர்கள் எழுதிய மற்ற ஆராய்ச்சி நூல்களையும் படிக்கணுமேங்கிற ஒரு ஆர்வம் எனக்குள்ள அப்படியே பொங்கி எழுந்தது. தேடிக் கண்டுபிடிச்சு அவர் எழுதின **(ஆதி இந்தியக் கிறிஸ்தவம் என்ற சைவ வைணம்)** '**இந்துத் துவாவிலிருந்து விடுதலை!**' என்ற நூலையும், '**(உலகப் பெருமதங்களில்) ஒரு புதையுண்ட வரலாறு**' என்ற ஒரு நூலையும் வாசித்தேன். இரண்டுமே மிக அருமையான ஆழமான ஆராய்ச்சி நூல்கள். என் சந்தேகங்கள் எல்லாம் தீர்ந்துச்சு. கொஞ்சங்கூட விவாதத்துக்கே இடமில்லாத வகையில மிகத் தெளிவாக சைவமும் வைணவமும் கிறிஸ்தவத்தின் உபதேசங்களை அப்படியே ஏற்றுக் கொண்டு, நமது நாட்டு திராவிட கலாச்சாரத்தின்படி அவைகளுக்கு உருக் கொடுத்து உருவாக்கப்பட்டதே சைவமும், வைணவமும் என்று புரிந்தது. நம் நாட்டின் பூர்வ குடிகள் அனைவருமே திராவிடர்கள் தான். அவர்களின் நாகரீகம் தலை சிறந்தது. நமது நாடே ஒரு கிறிஸ்தவ நாடு தான் என்று மிகத் தெளிவாக ஆதாரங்களுடன் எழுதியிருந்தார்.

இது சம்பந்தமா வேற யாராவது எழுதியிருக்கிறாங்களான்னு தேடிப் பார்த்தேன். இந்த அடிமையைக் கொண்டு என்ன செய்ய வேண்டும், எதை எழுத வேண்டும் என்ற தேவன் சித்தம் கொண்டிருக்கிறாரோ அதற்குரிய புத்தகங்கள் அனைத்தையும் நான் தேடாமலே எனக்கு அவர் கிடைக்கப் பண்ணுவார். இது தான் தேவ சித்தம், அவரின் அங்கீகாரம். இதை நான் என் கிறிஸ்தவ ஜீவியத்தில் பல தடவை பார்த்திருக்கிறேன். அதே போல இப்பவும் எனக்கு இது சம்பந்தமாக பல புத்தகங்கள் கிடைத்தன.

1. டாக்டர் மு.தெய்வ நாயகம் அவர்கள் எழுதிய 'விவிலியம் திருக்குறள் சைவ சித்தாந்தம்–ஒப்பாய்வு'

2. டாக்டர் தெ.தேவகலா அவர்கள் எழுதிய 'இந்தியா ஒரு தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடே. எவ்வாறு?'

3. 'ஓர் அன்புக் கடவுளின் உண்மைக் கதை' – டாக்டர் கா.சண்முகநாதன்

4. 'திராவிடமும் திராவிட இந்தியாவும்' – எஸ்.எல். சாகர் – தமிழில் வெளியீடு – எம். சுந்தர் யேசுவடியான்.

5. 'விவிலிய ஒளியில் பிரம்ம சூத்திரம்' – டாக்டர் பாஸ்சுரதாஸ்

மேற்கண்ட புத்தகங்களையும் படிச்சேன். என் சந்தேகங்கள் எல்லாமே தீர்ந்துச்சு. கொஞ்சங்கூட விவாவத்துக்கே இடமில்லாத வகையில மிக தெள்ளத் தெளிவா 'சைவமும் வைணவமும்' கிறிஸ்தவத்தின் உபதேசங்களை அப்படியே ஏற்றுக் கொண்டு நம்ம நாட்டு திராவிடக் கலாச்சாரத்தின் படியே அவைகளுக்கு உருக் கொடுத்து உருவாக்கப்பட்டது தான் என்று புரிஞ்சது. நம் நாட்டின் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என சகல பகுதிகளிலும் இருந்த பூர்வ குடிமக்கள் அனைவருமே திராவிடர்கள் தான். நமது நாடு ஒரு கிறிஸ்தவ நாடே என்று மிகத் தெளிவாக ஆதாரங்களுடன் இந்த நூல்கள் பறையறிவித்தன.

எங்கிட்ட ஒரு கெட்ட பழக்கம் (அல்லது நல்ல பழக்கமான்னும் தெரியலை). நான் நெறையப் படிப்பேன். அதில ஏதாவது ஒரு நல்ல விஷயத்தை நான் படிச்சுட்டா அதை எல்லாருக்கும் சொல்லணுமேங்கிற அந்த ஆசையை, துடிப்பை என்னாலே அடக்கவே முடியாது. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'கிற ஒரு வாஞ்சை. அதே மாதிரித் தான் ஆண்டவர் செஞ்ச நன்மைகளையும் எல்லாருக்கும் சொல்லணுமேங்கிற ஒரு ஆவல்ல தான் என்னோட ஒவ்வொரு புத்தகத்திலேயும் ஒண்ணு ரெண்டு சாட்சிகளையும் எப்படியாவது எழுதிடுவேன். அந்த ஒரு நல்ல எண்ணத்தில தான் என்னை ஒரு கலக்கு கலக்குன இந்த விஷயத்தையும் உங்க எல்லார்கிட்டேயும் சொல்லி உங்களையும் ஒரு கலக்கு கலக்கணுமேங்கிறதுக்காகத் தான் இதை எடுத்து எழுதுகிறேன். இப்படி எல்லாம் செய்யிறதுனுடைய அல்ட்டிமேட் எய்ம் என்ன? எல்லாரும் பாவத்தை விட்டு விலகி, சந்தோஷமா சமாதானத்தோட இருக்கணும். இந்த

வாழ்க்கைக்குப் பிறகு இருக்கிற நித்திய வாழ்க்கையிலேயும் பரலோகத்தில, மோட்சத்தில, சொர்க்கத்தில நம்மையெல்லாம் படைச்ச இறைவனோட இருக்கணும். அந்த பேராசையில தான் இதைச் செய்யுறேன். 68 வயசுலேயும் ஓடிக்கிட்டு இருக்கேன். இது மத மாற்றம் அல்ல. மனமாற்றம். பாவ வாழ்க்கை, பாவ சிந்தையிலிருந்து ஒரு மனமாற்றம். அவ்வளவே.

நான் இந்த சப்ஜெக்ட் விஷயமா படிச்ச எல்லாத்தையும் என்னுடைய கைவண்ணமும் கலந்து அப்படியே எழுதுறதா இருந்தா அது ஒரு பெரிய வால்யூமாவே ஆயிடும். அதுனால ரொம்ப சுருக்கமா, அதன் ஹை லைட்டை மாத்திரம் இதில எழுதுறேன்.

புதையுண்டு கிடக்கிற இது போன்ற பல வரலாற்று சத்தியங்களை எல்லாரும் தெரிஞ்சுக்கிடணுமேங்கிற ஒரு ஆதங்கத்தில தான் இந்த நூலையே எழுதுறேன். இது எல்லாமே நானே ஆராய்ச்சி பண்ணி நோண்டி நுருவி எடுத்த சமாச்சாரங்கள்னு நினைச்சுடாதீங்க. சில புண்ணியவான்கள் கஷ்டப்பட்டு இராத்திரி பகலா அலசி ஆராய்ந்து எடுத்து எழுதினதுலே கொஞ்சுண்டு அப்படியே சாம்பிளுக்கு என்னுடைய மசாலாவையும் சேர்த்து உங்க முன்னாடி படைக்கிறேன். சப்ஜெக்ட் கொஞ்சம் கரடு முரடானது, கருகலானது. அதுனால கொஞ்சம் பொறுமையாவே ஸ்டெப்பை ஸ்டெப்பா ஆதியிலிருந்தே நான் தொடங்கினாத் தான் உங்களுக்கு இது நல்லா புரியும்.

இது விஷயமா இன்னும் டிடைல்டா ஃபுல்லா நீங்க தெரிஞ்சுக்கிடணும்னா இந்த நூலின் கடைசியில ஒரு புஸ்தக லிஸ்ட் கொடுத்திருக்கேன். அவைகளை எல்லாம் வாங்கிப் படிங்க. இப்படிப்பட்ட அருமையான ஆராய்ச்சி நூல்களையெல்லாம் எல்லாருமே வாங்கிப் படிக்கணும். நமது நாட்டின் பாரம்பரியம், கலாச்சாரம், சமய வளர்ச்சி, ஆரியர்களால் திராவிடர்களாகிய நாமெல்லாரும் எப்படி பல நூற்றாண்டுகளாக ஏமாற்றப்பட்டு இருக்கிறோம். ஆரியர்களின் வர்ணாசிரம ஜாதிக் கொடுமைகளுக்கு இன்றளவும் நாம் எப்படி அடிமைப்பட்டுக் கிடக்கிறோம். இன்று மதம் என்ற பெயரால் மீண்டும் அந்த பழைய 'ஆண்டான்–அடிமை' மனுதர்ம இழிநிலைக்கு கொண்டு செல்ல சில அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் எப்படி முனைந்து செயல்படுகின்றன என்பதை எல்லாம் தெரிந்து கொள்ள முடியும்.

உலக நாகரீகம்

வரலாற்று ஆசிரியர்கள் உலக நாகரீகத்தை மூன்று பகுதிகளாகப் பிரிச்சு, முதல் நாகரீகம் சுமேரிய நாகரீகம் (கி.மு.3500), இரண்டாவது எகிப்தின் நைல் நதி நாகரீகம் (கி.மு 3000), மூன்றாவது சிந்து வெளி நாகரீகம் (கி.மு.2500) என்று சொல்லுவாங்க. சமீப கால ஆராய்ச்சிகள் எல்லாமே உலகத்தின் முதல் நாகரீகமே இந்தியாவுல, அதுவும் குறிப்பா தமிழகத்திலேயே தோன்றியது தான்னு நம்புவதற்கு ஏதுவாக இருக்கின்றன என ஆராய்ச்சியாளர்கள்

கருதுகின்றனர். நம்ம நாட்டின் ஒரு பகுதியாக முன்பு இருந்த, தற்போது கடலின் அடியில் மூழ்கிக் கிடக்கிற பழங்காலப் பட்டிணங்களைக் குறித்த தகவல்களை வைத்தும், பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டு இருக்கிற ஆதி மனுஷனான ஆதாமும், ஏவாளும் இருந்த ஏதேன் தோட்டமே சினேயாருக்கு கிழக்கே அதாவது இந்தியாவை ஒட்டின பகுதிகளில் கடலுக்கு அடியில் மூழ்கிக் கிடக்கிறதாகக் கூறப்படும் லெமூரியாக் கண்டத்திலே தான் இருந்திருக்கணும் என்று சிந்திக்க பலமான ஏதுவுண்டு எனவும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

திராவிடர்கள்

உலகின் முதல் மனித சமுதாயம் கிழக்கிலிருந்து மேற்கே சினேயாருக்கு சென்றதாயும், அவங்க அத்தனை பேருமே ஒரே பாஷை பேசிக்கிட்டு இருந்ததாயும் வேதம் கூறுகிறது. அந்த முதல் மனித சமுதாயம் பேசிக்கிட்டு இருந்தது தமிழ் மொழியாத் தான் இருந்திருக்கணும்னு ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். தமிழ் மொழி பேசி வந்த அவர்கள் தமிழர் என்று அழைக்கப்பட்டதாகவும், அந்த தமிழர் என்ற சொல் நாளடைவில் 'தரமிளர்–திரமிடர், திரவிடர் – பின்பு திராவிடர் என்று மாற்றம் அடைந்ததாகவும் கருதப்படுகிறது. மிகச் சிறந்ததாகக் கருதப்படும் நம்முடைய அந்த திராவிடர்களின் நாகரீகம் அனேக நூற்றாண்டுகள் புதைக்கப்பட்டு அதன் மேன்மைகள் வெளியே கொண்டு வரப்படாமலேயே இருந்தது தான் நம்முடைய பெரிய துரதிருஷ்டம்.

சிறப்பான சிந்துவெளி நாகரீகமும் அதன் அழிவும்

1920ம் ஆண்டு ஹரப்பா, மொகஞ்சதாரோ (தற்போதைய பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தின் ஒரு பகுதி) என்னும் இடங்களில் செய்யப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் மூலம் திராவிடர்களின் சிறப்பான சிந்து வெளி நாகரீகமும், அவர்கள் பயன்படுத்திய சித்திர எழுத்துக்கள், சிறப்பான சமூக வாழ்க்கை, நகர அமைப்பு எல்லாமே வெளி உலகத்தின் வெளிச்சத்திற்கு வந்து திராவிடர்களின் சிந்துவெளி நாகரீகமே மிகவும் பழமையானது என்றும், மிகச் சிறந்தது என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அப்போதுஅவர்கள் செய்து வந்த நினைவுக்கல் வழிபாடுகளும், கிடைத்த நினைவுக்கற்களின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவைகளே பின்பு 'சிவ லிங்கம்' என அழைக்கப்பட்டதாகவும் ஆராய்சியாளர்கள்கூறுகின்றனர். மிகச் சிறந்த நாகரீகத்தையும், கலாச்சரத்தையும் உடைய திராவிடர்கள் இந்திய தேசம் முழுவதிலும், அதை ஒட்டிய பிற பகுதிகளிலும் வாழ்ந்து வந்தார்கள் என்று காணப்படுகிறது. கி.பி.49 ல் இந்தியாவுக்கு வந்த இயேசுவின் சீடர் செயிண்ட் தாமஸ் (புனித தோமா) அவர்கள் கூறிய கடவுள் கொள்கைகளை அவர்கள் ஏற்றுக் கொண்டதின் மூலம் சைவ, வைணவ சமயங்கள் உருவாகின. ஆனால் இந்த திராவிடர்களின் சிறப்புக்கள்

எல்லாமே இந்தியாவுக்கு நாடோடிகளாக வந்து குடியேறிய அந்நிய ஆரியர்களால் கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குப் பின் அழிக்கப்பட்டு விட்டன.

ஆதி இந்திய கிறிஸ்தவத்தால் தோன்றிய சைவமும், வைணமும்

இன்று பொதுவாக சைவ, வைணவ மதங்களை இந்து மதத்தோடு சம்பந்தப்படுத்தி அவைகள் இந்து மதம் என்று பேசப்படுகின்றன. மேலும் அவைகள் கிறிஸ்தவத்துக்கு முற்றிலும் முரண்பட்டவை, மாறுபட்டவை எனவும் காட்டப்படுகின்றன. ஆனா கொஞ்சம் உற்றுப் பார்த்து ஆராய்ந்தால் கிறிஸ்தவமும், சைவமும். வைணவமும் ஒரே அடிப்படையிலான கடவுள் கொள்கையில் அமைந்திருப்பதைக் காண முடியும். அன்பே உருவான கடவுள் மனிதனாக அவதரித்தார் என்பதே அந்த அடிப்படைக் கொள்கை. கடவுள் மனிதனாக அவதரித்தார் என்பது ஒரு வரலாற்று நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சியை கிறிஸ்தவமும், சைவ, வைணவ மதங்களும் ஏற்றுக் கொண்டு தங்களின் சித்தாந்த நூல்களில் அதை விளக்குகின்றன. சைவ சித்தாந்தத்திற்கு அடிப்படை நூலாக இருப்பது மெய்கண்டார் எழுதிய சிவஞான போதம் ஆகும்.

சிவஞான போதம்

சிவஞான போதத்தில் 14 சாஸ்திரங்கள் இருக்கின்றன. இவைகள் அனைத்தும் கி.பி.13ம் நூற்றாண்டில் மெய்கண்டரால் எழுதப்பட்டன. இந்த சாஸ்திரங்கள் அனைத்தும் சூத்திரத்தால் ஆக்கப்பட்டன. சூத்திரம் என்றால் ஒரு பெரிய ஆலமரத்தை ஒரு சிறு புல்லின் நுனியில் உள்ள பனித்துளியில் பிரதிபலித்துக் காட்டுவது போல, பரந்து விரிந்த ஆழமான கருத்துக்களை ஒரு சிறு சூத்திரத்தில் பிரதிபலிப்பது என்பதாகும். சிவஞான போதத்தில 40 வரிகள் அடங்கின 12 சூத்திரங்கள் மட்டுமே உள்ளன. சிவஞான போதம் என்றால் சிவம் அல்லது அன்பு என்ற ஞானத்தைப் போதிப்பது என்று பொருள். அதாவது பரிசுத்த வேதாகமத்தில் யோவான் 3:16ல் கூறப்பட்டு இருக்கும் தேவ அன்பு இங்கே விளக்கப்படுகிறது. *'தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரைத் தந்தருளி'*ய அந்த ஒப்பற்ற, அளப்பரிய, உயர்ந்த, உன்னதமான, தியாக அன்பை மிக ரத்தினச் சுருக்கமாக சிவஞான போதம் விளக்குகிறது. சிவஞான போதத்தை கிறிஸ்தவ உபதேசங்களின் அடிப்படையில் நோக்கினால் மட்டுமே அதன் விளக்கங்களைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியும்.

சிவஞான போதத்தின் 12 சூத்திரங்களில் இருப்பவை

பரிசுத்த வேதாகமத்தில் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை கூறப்பட்டிருக்கும் கருத்துக்களின் சாராம்சம், சத்து சிவஞான போதத்தில் 12 சூத்திரங்களில் அடக்கி சொல்லப்பட்டு இருக்கிறது.

இதை 5 முக்கிய பகுதிகளாகப் பிரித்துக் கூறலாம்.

1. மனிதனின் படைப்பும் வீழ்ச்சியும்
2. வீழ்ச்சி அடைந்த மனிதனின் (ஆன்மாவின்) நிலை
3. வீழ்ச்சி அடைந்த மனிதனை கடவுள் தேடி வந்து மீட்பது
4. மீட்கப்பட்ட மனிதனின் நிலை
5. மீட்கப்பட்ட மனிதன் கடவுளோடு நித்திய வாழ்வில் இணைவது

அதில் ஒரு சில சூத்திரத்தை மாத்திரமே நாம் இப்போது இங்கே பார்க்கப் போகிறோம்.

'அவன் அவள் அது எனும் மூவினைமையின்
தோற்றி திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்'

– சிவஞான போதம் சூத்திரம்–1

பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள கடவுளின் படைப்பைக் குறித்தும், மனுஷன் விழுந்து போனதைக் குறித்தும், அதனால் மனுக்குலத்திற்குள் பாவம் பிரவேசித்ததைக் குறித்தும் இந்த சூத்திரம் விளக்குகிறது.

விளக்கம்: '**அவன்**' முதல் மனுஷனாகிய ஆதாம்; '**அவள்**' – முதல் மனுஷியாகிய ஏவாள்; '**அது**' – உலகம்; '**மூவினைமையின் தோற்றிய திதியே**' – மூன்று வெவ்வேறு விதமான செயல்களின் மூலம் இறைவன் இவைகளைத் தோற்றுவித்தான். அதாவது ஆதாமை பூமியின் மண்ணினாலும், ஏவாளை ஆதாமின் விலா எலும்பிலிருந்தும் இந்த உலகத்தை வார்த்தையின் மூலமாகவும் கடவுள் படைத்தார் என பைபிள் கூறுவதை இது விளக்குகிறது. இவைகள் படைக்கப்பட்ட போது மிகவும் தூய நிலையில் இருந்தன. ஆனால் '**ஒடுங்கி மலத்துளதாம்**'–அந்த தூய நிலையில் இருந்து இவைகள் ஒடுங்கிப் பாவத்தில் விழுந்தன. ஏதேன் தோட்டத்தில் விலக்கப்பட்ட மரத்தின் கனியை சாத்தானுடைய தூண்டுதலால் புசித்த படியால் அவர்களுக்குள் பாவம் பிரவேசித்தது. ஆதாம், ஏவாள் அவர்களின் சந்ததியாகிய நாமும் இதனால் சபிக்கப்பட்டு பாவத்திற்கு உள்ளானோம். இதற்கு காரணமான சாத்தானையும் கடவுள் சபிச்சாரு. அதோடு பூமியும் சபிக்கப்பட்டது. '**அந்தம் ஆதி**' – அது தூய நிலையின் அந்தமும் அதாவது பாவம் இல்லாத நிலையின் முடிவும், பாவ நிலையின் தொடக்கமும் ஆயிற்று. '**என்மனார் புலவர்**'–இது அறிஞர்களின் கூற்று ஆகும்.

வீழ்ச்சி அடைந்த மனிதனின் மீட்பு

'ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவு மாய்த் தவத்தினில் உணர்த்த விட்டு
அன்னியம் இன்மையின் அரன் கழல் செலுமே

– சூத்திரம் 8

விளக்கம்: (ஆன்மாவானது) '**ஐம்புல வேடரின்**' – மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புல இச்சைகளாகிய வேடருடன் வளர்ந்து; '**அயர்ந்தனை**' என – தன்னையும் தன்னைப் படைத்த கடவுளையும் அறியாமல் மயங்கி விட்டதை; '**தம்முதல்**' – தமக்கு முதல்வனாகிய இறைவன் கண்டு; '**குருவுமாய்**' – குருவாக உலகில் வந்து; '**தவத்தினில்**' – பாவத்துன்பத்தைத் தானே ஏற்றுக் கொண்டு சிலுவை மரணமாகிய தவத்தை நிறைவேற்றியதை; '**உணர்த்தி**' – ஆன்மாவுக்கு உணர்த்திக் காட்டும் போது; '**விட்டு**' – ஆன்மாவானது தன் பாவத்தை விட்டுப் பிரிந்து; '**அன்னியம் இன்மையின்**' – இறைவனோடு இருந்த பிளவு நீக்கப்பட்டு; '**அரன்**' – இறைவனின்; '**கழல் சேருமே**' – திருவடியை சென்றடையும்.

ஓர் எடுத்துக் காட்டு

இதை சைவ சித்தாந்தம் ஒரு எடுத்துக் காட்டுடன் விளக்குகிறது. வேட்டையாடுவதற்காக காட்டிற்குள் சென்ற ஒரு ராஜாவின் மகன் காணாமல் போய் விட்டான். எங்கு தேடியும் அவன் கிடைக்கவில்லை. ஏதோ கொடிய விலங்கிற்கு அவன் பலியாகி விட்டான் என நினைத்து மிகவும் வருத்தத்தோடு ராஜா திரும்பி விட்டார். அந்த அரசகுமாரன் காட்டு வேடர்களால் கண்டுபிடிக்கப்பட்டு ஒரு வேடனாகவே காட்டில் வளர்கிறான். தான் ஒரு அரச குமாரன் என்பதையும் அவன் அறவே மறந்து போய் விட்டான். நீண்ட நாட்கள் கழித்து தன் மகன் வேடர்களோடு காட்டில் வசிக்கிறான் என்று அரசன் அறிந்தான். ஆனால் தான் ஒரு அரசனாக அங்கு சென்றால் அவன் ஓடி விடுவான் என்று உணர்ந்தான். அதனால் தானும் ஒரு வேடன் போல வேடம் பூண்டு காட்டிற்குள் சென்றான். மகனோடு பேசினான். உண்மையை விளக்கிக் கூறினான். பின்பு மகனை மீட்டு தன்னோடு அழைத்துக் கொண்டு வந்தான்.

வேதாகம விளக்கம்

தேவ சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் பாவத்திறகு உட்பட்டு தேவனை விட்டு விலகி வெகு தூரம் போனான். உலக சிற்றின்பங்களுக்கு அவன் தன்னை ஒப்புக் கொடுத்து விட்டான். தப்பிப் போன மனுஷனை மீண்டுமாய் தன்னிடம் சேர்ப்பதற்காக தேவன் பரலோகத்தை விட்டு பூமியில் ஒரு மனிதனாக அவதரித்து வந்து, அவனை இரட்சித்து மறுபடியும் தன்னோடு சேர்த்துக் கொள்ளுகிறார். '***இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வந்தார்***' என 1 தீமோத்தேயு 1:15ம், '***அவர் தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபம் எடுத்து மனுஷ சாயலானார்***' என பிலிப்பியர் 2:7ம் கூறுகிறது.

இதே போல கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கொள்கைகளை மற்றும் பல சைவ, வைணவப் பாடல்களிலும் காணலாம். 'கடவுள் ஏன் மனிதனாகப் பிறந்தார்' என்பதைக் குறித்து நம்மாழ்வார் திருவிருத்தம் 1 – 3580 கூறுகிறது.

'பொய் நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை இனியாம் உறாமை உயிர் அளிப்பான்
எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா'

–நம்மாழ்வார் திருவிருத்தம்

பொருள்:

கறைபட்ட ஞானமும், தவறான ஒழுக்கமும், அழுக்கு (பாவம்) நிறைந்த உடம்பும் நம்மை ஆட்கொள்ளாமல் நமக்கு நல்லதோர் வாழ்வைத் தருவதற்காகவே இறைவன் ஒரு ஸ்திரியில் பிறந்தார்.

'இறைவா இன்பத்து எமை இருத்த
வேண்டி பிறவா முதல்வன் பிறந்தான்'

– போற்றி பஃறொடை – 69

பொருள்:

நீங்காத நித்திய இன்பத்தில் நாம் இருக்க வேண்டும் என்பதற்காகப் பிறவா முதல்வனாகிய இறைவன் பிறந்தார்.

'அருபரத்தொருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமையைச்
சிறுமை என்றிக ழாதே'

– திருவாசகம் போற்றித் திரு அகவல் 75–77ல்

கடவுள் ஏன் மனிதனாக அவதரித்தார் என்ற அவதார நோக்கத்தை சரியாகப் புரிந்து கொள், இகழ்ந்து பேசாதே எனவும் எச்சரித்துப் பாடுகிறது.

சிருஷ்டி பாவத்தில் விழுந்து போன காரணம் குறித்து

'முக்தி முதற் கொடிக்கே மோகக் கொடி படர்ந்து
அத்தி பழுத்தது என்று உந்தீ பற
அப்பழம் உண்ணாதே உந்தீ பற'

– திருவுந்தியார் – 41

பொருள்:

முக்தி நிலையாகிய இன்ப நிலையில் இருக்க வேண்டி படைக்கப்பட்ட முதல் கொடியில் (ஆதாமில்) மோகமாகிய பாவக் கொடி படர்ந்தது. எப்பொழுது என்றால் 'உண்ணாதே' என்று கூறப்பட்ட பழத்தை அவன் உண்ட போது.

விளக்கம்:

'அப்பழத்தை உண்ணாதே' என்று தேவன் முதல் மனிதனாகிய ஆதாமுக்கு கட்டளை இட்டார். ஆனால் அவன் அக்கட்டளையை மீறிப் பாவஞ் செய்த போது அவனும், ஆதாமின் வழி பிறக்கின்ற மக்கள் அனைவருமே பாவத்துக்குள்ளாகினர். இப்படி பிறக்கும் போதே அவர்களை தொடர்ந்து வருகின்ற பாவத்தை 'சகஸமலம்' (இயல்பாகவே வரும் பாவம்) என சைவமும், 'ஜென்ப பந்தம்' என வைணவமும் கூறுகின்றன.

மனிதரை மீட்க கடவுள் மனிதனானார்

'அவன் கண்டாய் நன்னெஞ்சே ஆரருளும் கேடும்
அவன் கண்டாய் ஐம்புலனாய் நின்றான் அவன் கண்டாய்'

– நாலாயிரம் திவ்வியப் பிரபந்தம்
இயற்பா இரண்டாம் திருவந்தாதி (24) – 3307

பொருள்:

மாசே இல்லாத கடவுள் மாசுள்ள மனிதனின் பாவத்தை அறுத்து மீட்பதற்காக ஐம்புலன்களையும் உடைய மனிதன் ஆனார்.

இதை அப்பரின் தேவாரப் பாடலும் கூறுகிறது. பாவியர் பாவத்தைப் போக்குவதற்காக இறைவன் பலியானார் என அப்பர் பெருமான் பாடுகிறார் பாருங்கள்.

'ஆவியாய் அவியுமாகி, அருக்கமாய்ப் பெருக்கமாகிப்
பாவியர் பாவம் தீர்க்கும் பரமனாய்ப் பிரமனாகி'

– அப்பர் தேவாரம் – 320

சைவப் பாடல் ஒன்றும் குருவாக அவதரித்த கடவுள் கோடு ஆயுதத்தால் அதாவது மரக்கொம்பாலான ஆயுதத்தால் (சிலுவையில்) கொடிய பாவ வினையைத் தீர்த்தார் எனக் கூறுகிறது.

'குருவடி வாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறம் இது பொருள் என
வாடாவகை தான் மகிழ்ந்து எனக்கு அருளிக்
கோடு ஆயுதத்தால் கொடு வினை களைந்தே'

–சித்தர்களின் பாடல்

அகஸ்தியர் கடவுளின் பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு ஆகியவற்றை சுட்டிக் காட்டி கீழ்கண்டவாறு பாடியிருக்கிறார்.

'வணங்குவாய் செகசோதி ஒருவனாகி
மாநிலத்தை ஒரு நொடியில் வகுத்தே மண்ணில்
குணமான மனிதரையும் படைத்த பின்பு
குவலயத்தில் தானுதித்துக் குருவாய் வந்து
சனமான சமுசாரம் ஒன்றுமில்லாமல்
சன்னியாசி போலிருந்து தவத்தைக் காட்டி
அன்பான சித்தர்களை இருத்திப் போட்டு
அகண்ட தலஞ்சென்றவரை அண்டுவாயே!'

அகஸ்தியரின் மற்றப் பாடல்களையும், அழுகிணிச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், கோரக்க முனிவர், பட்டினத்தடிகள், திருமூலர், திரு.வி.க, சிவவாக்கியர், போகர், கழாய்ச் சித்தர், அகப்பேய் சித்தர், கொங்கண முனிவர், வால்மீகர் போன்ற பல சித்தர்கள் எழுதிய பாடல்களையும், அதன் பொருள் விளக்கங்களையும் அறிய நான் எழுதியுள்ள **'சித்தர்கள் கண்ட மெய்ப் பொருள்'** என்ற நூலை வாசிக்கவும். (விலை ரூ.10/– மட்டுமே. இன்று வரை 75000 பிரதிகள் விற்கப்பட்டுள்ளன).

சித்தர்களின் சித்திரவதை

சித்தர்கள் கடவுளோடு நெருங்கிய உறவை வளர்த்துக் கொண்டு, கடவுளின் அருளையும், வல்லமையையும் பெற்று அனேக பாடல்களையும், இலக்கியங்களையும், தத்துவங்களையும், சாஸ்திரங்களையும் இயற்றினார்கள். அது மட்டுமின்றி நாடோடிகளாக வந்த ஆரியர்கள் நமது நாட்டைப் பிடித்து, அரசாள்பவர்களின் துணை கொண்டு நம் திராவிடர்களின் மதங்களான சைவ, வைணவத்தில் பல திருக்குகளை செலுத்தி, ஆரிய வைதீகத்திற்கு அடிமைப்படுத்த முயன்ற போதும், மனுநீதியின் மூலமாக வர்ணாஸ்மிரத்தையும், ஜாதி ஏற்றத் தாழ்வுகளையும் கொண்டு வந்த போது அதை சித்தர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். அப்படி எதிர்த்த சித்தர்களையும், முனிவர்களையும் ஆரியர்கள் அரசனோடு உள்ள தங்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி அவர்களை அடித்துத் துன்புறுத்தி, எதிர்த்தவர்களைக் கொலையும் செய்தனர். இதனால் சித்தர்கள் காடுகளிலும், குகைகளிலும் தஞ்சம் புகுந்தனர். அங்கும் அவர்களை ஆரியர்கள் விடாமல் துரத்திச் சென்று கொன்றனர். குகைகளை இடித்து அவைகளை மூடினார்கள். இதை 'குகையிடிகலகம்' என்றே வரலாற்றில் சொல்லப்பட்டுள்ளது. இது தமிழ் நாட்டில் கி.பி. 13ம் நூற்றாண்டில் நடைபெற்றது. சித்தர்களின் படைப்புக்கள், பாடல்களையும் ஆரியர்கள் அழித்தார்கள் என வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

பரிசுத்த வேதாமகத்தில் சொல்லப்பட்டுள்ள கடவுள் கொள்கை, மனிதன் பாவத்தில் விழுந்தது, அவனை மீட்க இறைவன் மனித அவதாரம் எடுத்தல், அவனுக்காக மரித்தல், அதனால் மனுக்குலத்தை மீட்டு அவர்களுக்கு நீடு வாழ்வை, நித்திய ஜீவனைக் கொடுத்தல் போன்ற அனைத்து கிறிஸ்தவ

உபதேசங்களையும் சிவஞான போதத்திலும், நம்மாழ்வார் திரு விருத்தம், போற்றி பஃறொடை, திருஉந்தியார், நாலாயிரம் திவ்விய பிரபந்தம், திருவாசகம், தேவாரம், திருக்குறள் மற்றும் அகத்தியர் போன்ற சித்தர்கள் மற்றும் அனேக சைவ, வைணவப் பாடல்கள், புராணங்கள், இதிகாசங்கள் அனைத்திலும் காணலாம். இதற்கு ஆதாரமாக, எடுத்துக் காட்டாகவே, உதாரணத்திற்கு இவைகளிலிருந்து ஒரு சில பாடல்களை இங்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது.

பரிசுத்த வேதாகமம் மிகவும் விளக்கமாகக் கூறுவதை சிவஞான போதகமும், சித்தர்களும், மற்ற பாடல்களும் மிகச் சுருக்கமாக, மறை பொருளாகக் கூறுகின்றன. பரிசுத்த வேதாகமத்தை முதலில் படித்து விட்டுப் பின் சித்தர்களின் பாடல்களையும், சைவ, வைணவ சித்தாந்தங்களையும் ஆராய்ந்து பார்த்தால் உண்மை, அதன் ஒற்றுமை, உட்கருத்து எல்லாமே கிறிஸ்தவ உபதேசங்களையும், கடவுளின் மனித மீட்புத் திட்டத்தையும் வெளிப்படுத்துவதாகவே இருக்கிறது என்பது புலனாகும். இப்போது பரிசுத்த வேதாமகத்தில் சொல்லப்பட்டுள்ள தேவ திட்டத்தை சுருக்கமாகப் பார்ப்போமா?

கடவுள் மனிதனாகும் திட்டம்

கடவுளின் கட்டளைக்கு கீழ்படியாமல் போனதின் நிமித்தம் சபிக்கப்பட்டு பாவத்தில் விழுந்த மனிதனை மீட்டு எடுக்க தேவன் சித்தம் கொண்டார். அதற்கான திட்டத்தையும் தேவன் ஏதேன் தோட்டத்தில் வெளிப்படுத்தினார் (ஆதி 3:15). அந்த திட்டத்தின் பிரகாரம் கடவுள் மனிதனாகப் பூமியில் அவதரிக்க வேண்டும். வார்த்தையாகிய தேவன் (இயேசு கிறிஸ்து) ஒரு கன்னியின் வயிற்றில் பிறப்பார். அவர் மனுஷனின் வீழ்ச்சிக்குக் காரணமான சாத்தானின் தலையை நசுக்குவார். அவர் தம்மையே பலியாகக் கொடுத்து மனுக்குலத்தை மீட்டுக் கொள்வார் என்பதே தேவனின் திட்டம்.

கடவுளின் திட்ட செயலாக்கம்

பாவத்தில் விழுந்த முதல் மனிதனாகிய ஆதாமின் சந்ததியில் நீதியோடு வாழ்ந்த நோவாவையும் அவன் குடும்பத்தாரையும் தவிர இப்பூமியில் வாழ்ந்த மற்ற அனைவரையுமே ஆண்டவர் ஜலப் பிரளயத்தினால் அழித்துப் போட்டார் (கி.மு. 2348) நோவாவின் சந்ததி பிறகு பலுகிப் பெருகி கிழக்கிலிருந்து மேற்கே பயணம் பண்ணி மெசப்படோமியாவில் தங்கினார்கள். அங்கே ஊர் என்ற இடத்திலிருந்து கடவுள் தமது திட்டங்களுக்காக ஆபிரஹாமைத் தெரிந்து கொண்டு அவரை உலகத்தின் மையப் பகுதியான பாலஸ்தீனத்திற்கு கொண்டு போனார். ஆப்ரஹாமிலிருந்து **இஸ்ரவேல்** (இஸ்ரேல்) என்னும் ஒரு ஜனக்கூட்டத்தை தேவன் எழுப்பினார். அவர்களும் தேவனை மறந்து பல அக்கிரமங்களில் ஈடுபட்டு பாவத்தில் விழுந்து தேவ கோபாக்கினைக்கு ஆளானார்கள். தேவன் அவர்களை 430 வருடங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திற்கு ஒப்புக் கொடுத்தார்.

அடிமைத்தனத்தில் அவதிப்பட்டு மனந்திரும்பி அவர்கள் கதறிய போது தேவன் அவர்களை மீட்க மோசே என்ற ஒரு தலைவனை எழுப்பி, அவன் மூலம் இஸ்ரேல் ஜனங்களை விடுவித்து கானான் தேசத்திற்கு வழி நடத்தினார். வழியில் சீனாய் மலையில் ஆண்டவர் அவர்களுக்கு பல சட்ட திட்டங்களையும், கடவுட் கொள்கை, ஆலய வழிபாட்டு முறைமைகள், பலி செலுத்தும் முறைமை போன்ற பல கட்டளைகளை மோசேயின் மூலம் கொடுத்தார். பின்பு இஸ்ரேல் ஜனங்களை கானான் தேசத்திலே சேர்த்து, அதையும் மோசேக்குப் பின் வந்த யோசுவாவின் மூலம் பங்கிட்டுக் கொடுத்தார்.

கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொண்ட ஜனங்கள் மறுபடியும் அக்கிரமங்கள் செய்து பாவத்தில் விழுந்தனர். தேவன் மீண்டுமாய் அவர்களை அடிமைத்தனத்திற்கு ஒப்புக் கொடுத்தார். பின் சாலமோன் ராஜாவின் காலத்திலே கற்களால் ஆன முதல் தேவாலயம் எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது (கி.மு.972). மீண்டும் ஜனங்கள் தேவன் காட்டிய வழியை விட்டு விலகி மீறி நடந்தார்கள். சாலமோனுக்குப் பிறகு இஸ்ரேல் தேசம் இரண்டாகப் பிரிந்தது. வடதேசமாகிய இஸ்ரேல் கி.மு.721ல் அசீரியாவால் அடிமைப்படுத்தப்பட்டது. தென் தேசமாகிய யூதா கி.மு.586ல் பாபிலோனியாவால் அடிமைப்படுத்தப்பட்டது. இஸ்ரேல் ஜனங்கள் 70 ஆண்டுகள் பாபிலோனிய அடிமைத்தனத்திற்கு ஆளானார்கள். அதன் பின்பு அவர்கள் மீட்கப்பட்டு பாலஸ்தீனத்திற்கு திரும்பினார்கள். அவர்களை மேதிய பெர்சியர்களும், கிரேக்கர்களும் பின்பு ரோமர்களும் ஆண்டார்கள்.

கடவுள் மனிதனாக அவதரித்தல்

ரோமச் சக்கரவர்த்தியான அகஸ்து ராயனின் நாட்களில் (கி.மு.27 – கி.பி14) தேவனின் திட்டப்படி வீழ்ச்சி அடைந்த மனிதனை இரட்சித்து மீண்டும் தம்மிடம் சேர்த்துக் கொள்ள கடவுள் கன்னி மரியாளின் வயிற்றில் கருவாகி இவ்வுலகில் அவதரித்தார். அவர் **இரட்சகர்** (தமிழில் **இயேசு**) என்றும், **அபிஷேகம் பண்ணப்பட்டவர்** (தமிழில் **கிறிஸ்து**) என்றும் அழைக்கப்பட்டார்.

கடவுளின் அவதாரம் உலக வரலாற்றை **கி.மு** என்றும் **கி.பி** என்றும் பிரித்தது. அவர் 33 1/2 ஆண்டுகள் பாலஸ்தீனத்தில் சஞ்சரித்து அனேக அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்தார். அவருக்கு சீஷர்கள் இருந்தார்கள். தேவ திட்டத்தின் படி அவர் ஜனங்களின் பாவத்திற்காக தம்மையே சிலுவையில் பலியாகக் கொடுத்து மனுக்குலத்துக்கு இரட்சிப்பை உண்டாக்கினார். பின் அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். அதன் பிறகு 40 நாட்கள் அவர் இவ்வுலகில் சஞ்சரித்து சீஷர்களுக்கு போதித்து அவர்களை பலப்படுத்தினார். பின்பு அனேக ஜனங்கள் பார்த்துக் கொண்டிருக்க, ஒலிவ மலையிலிருந்து அவர் பரமேறிச் சென்றார். இதுவே கடவுள் உலகில் மனிதனாக அவதரித்தார் என்பதைக் குறித்த வரலாறு.

கடவுள் அவதார நற்செய்தி

கடவுளின் அவதாரம் இந்த உலகிற்கு கிடைத்த, அளிக்கப்பட்ட ஒரு நற்செய்தி, பெரும்பேறு ஆகும். இந்த நற்செய்தி நமக்கு பல நல்ல அம்சங்களை அறிவிக்கிறது.

1. கடவுள் ஒருவரே. அவர் திரித்துவமாக, மூவொரு கடவுளாக இருக்கிறார்.

2.அவர் எல்லா மனுஷரையும் இரட்சிக்க இவ்வுலகில் மனிதராக அவதரித்தார்.

3.அவர் தம்மையே பலியாக்கி இரட்சிப்பை மனிதருக்கு உண்டாக்கினார்.

4.இதை விசுவாசித்து ஏற்றுக் கொள்கிறவர்கள் கடவுளைச் சென்று அடைவார்கள்.

இது கிறிஸ்தவத்திலும், சைவ வைணவத்திலும் காணப்படும் ஒரு அடிப்படைக் கொள்கை ஆகும். இந்த நற்செய்தி இயேசுவின் சீஷர்களான பவுல், பேதுரு முதலானோரால் ஐரோப்பாவிற்கு முதலாம் நூற்றாண்டில் எடுத்துச் செல்லப்பட்டு அது '**ஐரோப்பிய கிறிஸ்தவம்**' என்று அழைக்கப்படலாயிற்று.

இந்தியாவிற்கு நற்செய்தி

இயேசுவின் சீஷராகிய புனித தோமா இந்த நற்செய்தியை கி.பி.49ல் இந்தியாவிற்கு கொண்டு வந்தார். '**ஆதி இந்தியக் கிறிஸ்தவம்**' என்று அழைக்கப்பட்ட அதை நமது தேசத்தில் வாழ்ந்த அனைத்து குடிமக்களாகிய திராவிடர்களும் ஏற்றுக் கொண்டார்கள். அதுவே சைவம், வைணவம் என்ற பெயரில் இங்கு அழைக்கப்படலாயிற்று. தோமா இந்தியாவில் பல இடங்களில் நற்செய்தியை அறிவித்தார். தட்சசீலத்தில் சிற்றரசனாக இருந்த கொண்டோபரஸ் என்பவனை சந்தித்து கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்தார். தோமாவின் நற்செய்தியைக் கேட்டு அவரை ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவர்களாக மாறியவர்கள் ஐந்து லட்சம் பேர்களுக்கும் மேலாக அப்போதே இருந்தார்கள் என ஜவஹர்லால் நேரு, நமது நாட்டின் முதல் பிரதமர் அவரின் '**டிஸ்கவரி ஆஃப் இந்தியா**' என்ற நூலில் எழுதியுள்ளார். இதை டாக்டர் அம்பேத்கார் முதல் வரலாற்று ஆசிரியர்கள் அனைவருமே ஒத்துக் கொண்டுள்ளனர்.

2000 வருஷங்களுக்கு முன்பு ஐந்து லட்சம் பேர் இயேசுவை நேரடியாக ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவர்களாக மாறினார்கள். 2000 வருஷத்துக்கு முன்பு நமது தேசத்தின் ஜனத்தொகை எவ்வளவு இருந்திருக்கும்? 30 லட்சம் அல்லது 40 லட்சம் இருந்திருக்குமா? 40 லட்சத்தில் 5 லட்சம் பேர் இயேசுவை நேரடியாக ஏற்றுக் கொண்டவர்கள். மீதமுள்ள ஜனங்கள் தோமாவின் நற்செய்தியைக் கேட்டு 'கடவுள் ஒருவரே. அவர் திரித்துவமாக இருக்கிறார். அவர் நம்மை மீட்க மனிதனாய் அவதரித்தார். அவரை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில்

மோட்சம், கைலாசம், வைகுண்டம் கண்டிப்பாக போகலாம் என விசுவாசித்து, அக்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, நமது திராவிடக் கலாச்சாரம், முறைமை, புரிந்த கொள்ளுதலின்படி ஏற்றுக் கொண்டு சைவ, வைணவ மதங்களை ஸ்தாபித்து இறைவனை தொழுது கொண்டார்கள்'. இது தான் நடந்த சரித்திர உண்மை.

அப்போது இந்தியாவின் நிலை

கி.பி.52ல் தோமா இந்தியாவிற்கு வந்த போது இங்கு நாத்தீக கொள்கைகளை பின்பற்றிய சமண மதமும், புத்த மதமும் மட்டுமே இருந்தன. வேறு எந்த மதமும் அப்போது இந்தியாவில் இருந்தது இல்லை என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். சிந்து வெளி நாகரீகத்தில் திராவிடர்கள் செய்து வந்த நினைவுக்கல் நட்டு வழிபடும் முறை இருந்தது. அந்த நினைவுக்கல் வழிபாடுகளே பிற்காலத்தில் '**சிவ லிங்க**' வழிபாடு என அழைக்கப்பட்டது. சங்க காலத்தில் சிவலிங்கத்தை கந்து என்றும், கொற்றவை என்னும் வெற்றித் தேவதையையும், வேலன் என்ற குமரனையும், வேறுபல தெய்வங்களையும் வழிபட்டு பலிகளும் செலுத்தி வந்தனர் என வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

அந்நியர்களின் ஆக்கிரமிப்பு

இந்தியாவில் எல்லா இடங்களிலும் திராவிடர்கள் வாழ்ந்து வந்தார்கள். மேதிய பெர்சீய மன்னரான தரியூ கி.மு.518லும், அதன் பின் கிரேக்க மன்னன் மஹா அலெக்ஸாண்டர் கி.மு.326லும் இந்தியாவில் பல பகுதிகளை வென்று அரசுகளை ஸ்தாபித்தனர். கிரேக்க சாம்ராஜ்யத்திற்குப் பிறகு ரோம சாம்ராஜ்யம் உலகளவில் உயர்ந்து இந்தியாவுடன் மிக நெருக்கமான வாணிபத் தொடர்புகளை வைத்து இருந்து அவர்களும், சகர்கள் கி.மு.இரண்டாம் நூற்றாண்டிலும், கூஷாணர்கள் கி.பி.1ம் நூற்றாண்டிலும், ஹுணர்கள் கி.பி.4ம் நூற்றாண்டிலும் இந்தியாவுக்கு வந்தார்கள் என சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். பல்வேறு தேசத்தவர்கள் எப்படி இந்தியாவிற்குள் வந்தார்கள் என்பதை அலெக்ஸாண்டர் ஹாரீஸ் மற்றும் செலுக்கசின் தூதுவரான மெகஸ்தனீஸ், திரு. நீலகண்ட சாஸ்திரி மற்றும் பல வரலாற்று ஆசிரியர்கள் எழுதிய நூல்களையும், இந்தப் புத்தகத்தின் கடைசிப் பக்கங்களில் கொடுத்துள்ள நூல் பட்டியலில் உள்ள ஆராய்ச்சி நூல்களையும் படித்தால் தெரிந்து கொள்ளலாம். உலக வரலாற்றில் பெர்சிய, கிரேக்க, ரோம சாம்ராஜ்யங்களின் எழுச்சி, வீழ்ச்சிகளையும், இடையில் யார் யார் ஆண்டார்கள் என்கிற விபரங்களை பரிசுத்த வேதாகமம் மிகத் துல்லியமாகக் கூறுகிறது.

கி.மு. 6ம் நூற்றாண்டிலிருந்து இப்படி அந்நிய தேசத்தவர்களாகிய பெர்சியர்கள், கிரேக்கர்கள், ரோமர்கள், சாகர்கள், கூணர்கள் இந்தியாவில் நுழைய ஆரம்பித்தார்கள். இவர்களின் வருகையால் மேற்கு ஆசியாவில் உள்ள தேசங்களுக்கு

இந்தியாவிற்குள் நுழைவதற்கான விரிவான பாதை அமைந்து விட்டது. அனேக அண்டை நாட்டவர்கள் வடமேற்கு இந்தியாவில் பிரவேசிக்கலானர்கள். வந்து குடியேறிய அந்நியர்களில் சிலர் சிற்றரசுகளை அமைத்தார்கள். வேறு சிலர் திராவிட சிற்றரசர்களின் அரசவைகளில் அமர்த்தப்பட்டார்கள்.

இவர்கள் தீ வழிபாட்டைக் கடைப்பிடித்தார்கள். அந்தத் தீயில் குதிரை, ஆடு, மாடுகளை சுட்டு சாப்பிட்டு சோமபானம், சுராபானம் ஆகிய போதை மதுவகைகளை அருந்தி வந்தார்கள் என சரித்திரம் கூறுகிறது. இவர்களே பின் நாட்களில் ஆரியர்கள் என அழைக்கப்பட்டார்கள். தீ வழிபாடு இயற்கை வழிபாட்டோடு சேர்ந்ததாகும். பிருத்வி, வருணன், அக்கினி, சூரியன், வாயு என்னும் ஐம்பெரும் பூதங்களையும், தியெசு, அதிதி, மருத்துக்கள், இந்திரன், மித்திரன் முதலான பிற தேவர்களையும் இவர்கள் வழிபட்டு வந்தார்கள். பின்பு திராவிட அறிஞர்கள் உருவாக்கிய வேதங்களையும் இவர்கள் பின்பற்றி அவற்றையும் தங்களுடைய தாக்கிக் கொண்ட விதத்தை இப்போது மேற்கொண்டு நாம் பார்ப்போம்.

தோமாவின் உபதேசத்தை சமண மதத்தை சேர்ந்தவர்களும், புத்த மதத்தை சேர்ந்தவர்களும், பழங்கால திராவிட தொழுகையை சார்ந்தவர்கள் என ஒரு கூட்ட திராவிட மக்கள் ஏற்றுக் கொண்டதினால் சமண மதத்திலும், புத்த மதத்திலும், திராவிடத் தொழுகையிலும் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன.

புத்த மதத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

புத்த மதம் ஒரு நாத்தீக மதமாக கருதப்பட்டது. தோமாவின் நற்செய்தியைக் கேட்டவர்கள் அதை ஏற்றுக் கொண்டு அவர்கள் கடவுளின் மூவொருமைக் கொள்கைக்கு **தர்ம காயா, சம்போக காயா, நிர்மாண காயா** என்ற திரித்துவப் பெயரை புத்தருக்கு வைத்து அவரை தெய்வமாக வணங்க ஆரம்பித்தார்கள். பின்னர் புத்தருக்கு கோயிலையும் கட்டினார்கள். தோமாவின் கடவுட் கொள்கையை ஏற்றக் கொண்ட புத்தர்களின் மதம் **மகாயான புத்தமதம்** என்று அழைக்கப்பட்டது. இந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ளாமல் முன்பு இருந்த புத்த மதக் கொள்கைகளையே கடைப்பிடித்த புத்தர்கள் **ஹுனயான புத்தர்கள்** என அழைக்கப்பட்டார்கள். தோமாவின் உபதேசத்தால் இரண்டாகப் பிரிந்த பின் ஹீனயான புத்தமத நூல்கள் பாலி மொழியிலும், கிறிஸ்தவக் கொள்கையால் மாற்றம் அடைந்த மகாயான புத்தமத நூல்கள் கிறிஸ்துவுக்குப் பின் சமஸ்கிருதத்திலும் எழுதப்பட்டன.

சமண மதத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

சமண மதமும் கடவுள் நம்பிக்கையற்ற மதமாகவே இருந்தது. அதுவும் இரண்டாகப் பிரிந்தது. தோமாவின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்கள் **ஸ்வேதாம்பரர்கள்** என அழைக்கப்பட்டார்கள். இவர்கள் மிதவாதிகள். வெள்ளை ஆடைகளை அணிவார்கள். தோமாவின் கடவுட் கொள்கைகளை

ஏற்றுக் கொள்ளாத சமணர்கள் **திகம்பரர்கள்** என அழைக்கப்பட்டார்கள். இவர்கள் எவ்வித ஆடையும் அணியாமல் தங்களையே வெறுத்து, எந்த உயிரையும் சேதப்படுத்தாமல், தனித்து இருந்து, உணவையும் உட்கொள்ளாமல் தங்களை சாவுக்கு ஒப்புக் கொடுத்து விடுவார்கள்.

திருக்குறளில் தோமாவின் உபதேசங்கள்

திருக்குறள் ஒரு கிறிஸ்தவ நூல் என்றும், தோமாவின் உபதேசக் கொள்கைகளை விளக்கிக் காட்டும் ஒரு சிறந்த நூல் என்றும் திருக்குறள் அறிஞர்கள் முன்பாக நிரூபிக்கப்பட்டுள்ளது. வள்ளுவர் கடவுளின் திரித்துவக் கொள்கையை பிதா, பரிசுத்த ஆவி, குமாரன் என்ற நிலையில் கடவுள், வான், நீத்தார் எனக் கூறி இறை வாழ்த்தில் மூன்று அதிகாரங்களில் இறைவனை வாழ்த்திப் பாடியுள்ளார். பைபிள் 'ஆதியிலே தேவன்' என்று ஆரம்பிக்கிறது. அதையே வள்ளுவப் பெருந்தகை 'ஆதிபகவன்' என்கிறார். பகவன் என்றால் தன்னைத் தானே பகுத்து நிற்பவன் என்று பொருள். அவர் பிதாவாக, பரிசுத்த ஆவியாக, குமாரன் இயேசுவாக தம்மை பகுத்து நிற்கிறார் எனக் கூறியுள்ளார். 'நீங்கள் தேவனுடைய ஆலயமாக இருக்கிறீர்கள்' என வேதம் கூறுவதை குறள் 'கடவுள் இதயமாகிய தாமரையில் வீற்றிருப்பவர்' எனக் கூறுகிறது.

'பொறி வாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடு வாழ்வார்' – திருக்குறள் 6வது குறட்பா.

பொறியாகிய கருவியில் (சிலுவையில்) தன் புலன்களையும் அவித்தவனாகிய (பலியாக்கியவனாகிய) இறைவன் (இயேசு கிறிஸ்து) காட்டிய வழி நிற்பவன் நீடு வாழ்வு (நித்திய ஜீவனை) பெற்றுக் கொள்வான்.

'நீரின்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு' – குறட்பா 20

பரிசுத்த வேதாகமம் பரிசுத்த ஆவியை மழையாகவும், முன்மாரி, பின் மாரியாகவும் கூறுகிறது (ஓசியா 6:3). திருவள்ளுவர் பரிசுத்த ஆவியை வான் சிறப்பு எனப் போற்றி 'நீரில்லாமல் இவ்வுலகம் இயங்காது. அது போல பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லை என்றால் உலக மக்களிடம் ஒழுக்கம் நிலை நிற்க முடியாது' எனக் கூறுகிறார்.

குமாரானாகிய கடவுளைக் குறித்து சொல்லும் போது 'அவர் வானுலகை விட்டு இம்மண்ணுலகிற்கு வந்து தம்மைத் தாமே நீத்தவர் (பலியாக்கியவர்) என்றும், அந்த நீத்தாருடைய பெருமையைக் கூறும் நூலே (பரிசுத்த வேதாகமமாகிய பைபிள்) சிறந்த நூல் என்றும் கூறுகிறார். அவர் தம்மைத் தாமே பலியாக்கிய போதிலும் மீண்டும் புத்துயிர் பெற்றவர். அதாவது மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தவர். அதை குறட்பா வடிவில் வள்ளுவர் கூறுகிறார். அவர்

புத்துயிர் பெற்றதற்கு தேவ தூதர்களால் சாட்சி பெற்றார். அதை குறட்பா 25 விளக்குகிறது. அவர் பெருமையை குறித்து இந்நிலத்து மறைமொழியாகிய பரிசுத்த வேதாகமம் விளக்குகிறது என குறட்பா 28ம், இயேசுவை இந்த உலகத்திலுள்ள அனைத்து உயிர்களையும் இரட்சிக்கும் அந்தணர் என குறட்பா 30லும் வள்ளுவர் குமாரனாகிய இயேசுவை (நீத்தாரை) வாழ்த்துகிறார்.

இது போன்று திருக்குறளில் உள்ள 1330 குறட்பாக்களுமே கிறிஸ்தவக் கொள்கைகளையே விளக்குகின்றன என அறுதி இட்டு உறுதியாக, ஒரு சிறிது கூட சந்தேகத்துக்கோ விவாதத்திற்கோ இடமின்றி ஐந்து பல்கலைக்கழகங்களை சேர்ந்த தமிழ்த் துறைத் தலைவர்கள் மற்றும் பல கல்லூரித் தமிழ் பேராசிரியர்கள் மற்றும் தமிழ் அறிஞர்கள் கூடி ஆராய்ந்த கருத்தரங்கு மாநாட்டில் நிரூபிக்கப்பட்டுள்ளது. திருக்குறள் அறிஞர்களான டாக்டர் மு.தெய்வநாயகம், டாக்டர் தெ.தேவகலா, டாக்டர் எம்.கிறிஸ்டோபர், டாக்டர் இரா.அருளப்பா, டாக்டர் ந. அப்பு ரெட்டியார் போன்ற இன்னும் அனேக அறிஞர்கள் பல ஆண்டுகள் இரவு பகல் கண் விழித்து, அரும்பாடுபட்டு ஆராய்ந்து எழுதியுள்ள விளக்க உரைகளைப் படியுங்கள். அப்பொழுது தெளிவு பெறுவீர்கள். முதலில் எனக்கும் பயங்கர ஷாக்காத் தான் இருந்தது. ஆனால் பலரின் ஆராய்ச்சி நூல்களைப் படித்த பின்பே தெளிவு பெற்றேன்.

இவ்வாறு திருவள்ளுவர், அகத்திய முனிவர், சித்தர்கள், சைவக் குறவர்கள், வைணவ ஆசாரியர்கள், ஆழ்வார்கள் போன்ற திராவிடத் தமிழ் அறிஞர்கள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய புனித தோமாவின் திரியேக தேவ கடவுட் கொள்கைகளையும், உபதேசங்களையும் தங்கள் வழிகளில், நிலைகளில், ஏற்றுக் கொண்டு விளக்கியுள்ளார்கள். இப்படியாக திராவிடத் திருநாடாகிய நம் இந்திய தேசத்தில் புனித தோமாவின் கிறிஸ்தவ உபதேசம் சைவம், வைணமுவமாக மலர்ந்தது.

சைவம்

பழந்திராவிட மக்கள் தங்களின் முக்கிய கடவுளாக பிதாவை சிவன் என்றும், குமாரன் இயேசுவை வேலன் அல்லது குமரன் என்றும், நம்மைப் பலப்படுத்தி, வழிநடத்தும் வல்லமை தேவனாகிய பரிசுத்த ஆவியை 'பெலன், வல்லமை, பவர்' கொடுப்பவர் என்ற அர்த்தத்தில் சக்தி என்றும் அழைத்தார்கள். தோமாவின் திரித்துவ கடவுட் கொள்கையை அப்பன், அம்மை, மகன் அதாவது சிவன், சக்தி, குமரன் என ஏற்றுக் கொண்டார்கள். இப்படி ஏற்றுக் கொண்டவர்கள் சைவர்கள் என அழைக்கப்பட்டார்கள்.

வைணவம்

பரிசுத்த ஆவியை பெண்பாலாக ஏற்றுக் கொள்வதை ஒரு சாரார் மறுத்து, பரிசுத்த ஆவியினால் கன்னி மரியாள் கர்ப்பவதியானாள் என்பதால் அது

ஆணாகத் தான் இருக்க முடியும் எனக் கருதி. அவர் விண்ணிலிருந்து வந்தவர் ஆனபடியால் அந்தப் பொருளில் அவரை 'விட்டுணு' (விஷ்ணு) என்று அழைத்து, கிறிஸ்தவத்தின் திரியேக கடவுட் கொள்கையை பிதா என சிவனையும், பரிசுத்த ஆவியானவரை விஷ்ணு என்றும், குமாரனை விஷ்ணுவிலிருந்து தோன்றிய பிரம்மா என்றும் எடுத்துக் கொண்டார்கள். இப்படி ஏற்றுக் கொண்டவர்கள் வைணவர்கள் என அழைக்கப்பட்டார்கள்.

தோமாவின் புது உபதேசத்தில் புத்துயிர் பெற்ற திராவிட பக்தர்கள் பக்திப் பரவசத்தோடு தேவாரம், திருவாசகம், திருக்குறள், நாலாயிர திவ்விய பிரபந்தம் போன்ற பல பக்திப் பாடல்களை கி.பி.5ம் நூற்றாண்டிற்குப் பிறகு உண்டாக்கினார்கள். இவைகள் மக்களிடையே பக்தியைப் பெருக்கி, பக்தி இயக்கங்களை பலப்படுத்தின. இது தெற்கிலிருந்து வடக்கிலும் பரவியது. சமண, புத்தமதங்களில் இருந்த அநேக திராவிடர்கள் இந்த புதிய பக்தி இயக்கங்களில் சேர்ந்தார்கள் (இப்படி சேர்ந்தவர்களில் ஒருவர் தான் திருநாவுக்கரசர்). சைவத்தை நடத்த நாயன்மார்களையும், வைணவத்தை வழி நடத்த ஆழ்வார்களையும் கர்த்தராகிய தேவன் எழுப்பினார்.

ஆலய வழிபாடு; சைவ வைணவக் கோயில்கள்

இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில் நாடோடிகளாய் சுற்றித் திரிந்து கொண்டிருந்த அந்நியர்களுக்கு (இவர்களே பிற்காலத்தில் ஆரியர்கள் என அழைக்கப்பட்டார்கள்) எவ்வித ஆலய வழிபாடுகளும் இருந்தது இல்லை. இந்தியாவில் முதல் நூற்றாண்டுக்கு முன்பு இருந்த சமணம், புத்த மதங்கள் நாத்திக கொள்கைகளை உடையவைகளாக இருந்தபடியால் அவர்களுக்கு கடவுள் வழிபாட்டுக்கான ஆலயங்கள் எதுவும் இருந்தது இல்லை. தோமாவால் கிறிஸ்தவக் கொள்கைகள் போதிக்கப்பட்ட பின்பே திராவிட மக்களுக்கு ஆலயங்கள் தோன்றலாயின. கடவுள் உண்டென்ற தோமாவின் கொள்கையை ஏற்றுக் கொண்ட திராவிட சமண, புத்த மதங்கள் மகாவீரரையும், புத்தரையும் கடவுள் அவதாரங்களாகக் கொண்டு கோயில்களைக் கட்டி அவர்களை வழிபடத் தொடங்கினார்கள்.

1. எருசலேம் தேவாலயத்தின் மாதிரியின் படியே நம் கோயில்களின் அமைப்பு.

சைவ, வைணவ சமயத்தை சேர்ந்த திராவிடர்களும் தங்களின் வழிபாட்டிற்காக ஆலயங்களை அமைத்தனர். கடவுள் சீனாய் மலையில் மோசேக்கு முதற் கோயிலை (ஆசரிப்புக் கூடாரம்) எப்படிக் கட்ட வேண்டும், அதன் அளவுகள், செலுத்த வேண்டிய பலிகள், அவைகளை எப்படிச் செலுத்த வேண்டும் என்பதையும் கற்பித்தார். இவைகளை யாத்திராகமம் 25,26,27ம் அதிகாரங்களில் வாசிக்க முடியும். தேவன் கொடுத்த அளவுகள், முறைமைகளின் படியே அச்சரம் பிசகாமல் அப்படியே இறைவனுக்கென முதல்

கோயிலான ஆசரிப்புக் கூடாரத்தை மோசே கி.மு.1461ல் எழுப்பினார். சாலமோன் அரசனின் நாட்களில் கற்களால் ஆன முதல் தேவாலயம் எருசலேமில் கி.மு.972ல் கட்டப்பட்டது. (1 ராஜாக்கள் 6,7ம் அதிகாரங்கள்).

அப்படிக் கட்டப்பட்ட முதற் கோயிலின் ஆகம விதி முறைமைகளின் படியே, அந்த கிறிஸ்தவ தேவாலயத்தின் மாதிரியின்படியே நமது தேசத்திலும் சைவ, வைணவக் கோயில்களில், கோயில் பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மஹா பரிசுத்த ஸ்தலம் (கர்ப்பக்கிரஹம்), பலி பீடம், ஒடுக்கமான ஜன்னங்கள், சுற்றுக் கட்டுகள், அளவுகள், ஒட்டுச் சுவர்கள், சுழல்படிகள், சித்திர வேலைப்பாடுகள், கொத்து வேலைகள், பொன் தகட்டால் மூடுதல், இரட்டைக் கதவுகள், தூண்கள் மேல் உத்திரங்கள், உத்திரங்களின் மேல் மச்சுப் பாவுதல், கும்பங்கள், ஜலதாரைகள், மதிற் சுவர்கள், கோட்டைக் கதவுகள் எல்லாம் அப்படியே திராவிடர்களால் கட்டப்பட்டு இங்கு வழிபாடுகள் திராவிடர்களாலேயே நடத்தப்பட்டன. சிதம்பரம், திருவரங்கம் கோவில்கள் இந்த கிறிஸ்தவ தேவாலய ஆகம விதிகளின் படியே கட்டப்பட்டன. தில்லையில் உள்ள கனக சபையின் கோயில் அமைப்பு யாக்கோபு தொடங்கி வைத்த கோயில் வழிபாட்டின் விரிவே என்று கா. சுப்பிரமணிய பிள்ளை 'தமிழர் சமயம்' என்ற நூலில் (பக் 52) எழுதியுள்ளார்.

2. வெண்கலத்தால் பணி முட்டுக்கள்

பணி முட்டுக்கள் வெண்கலத்தால் செய்யப்பட வேண்டும் என்று யாத்திராகமம் 25:31–39, 27:3,19,20,21ல் சொல்லப்பட்டுள்ளபடியே சைவ வைணவ கோயில்களிலும் செய்யப்படுகின்றன.

3. வழிபாட்டு முறைகள், பிரசாதம், எண்ணெய் விளக்கு ஏற்றுதல்

கோவிலின் வாசல்கள் பெரும்பாலும் கிழக்கு முகமாக இருப்பதுவும், கோவிலில் பூஜை பண்ணும் போது புளிக்காத மாவும், வேறு பல உணவுப் பொருட்களும், எண்ணெய்யும், காய்கனிகளைப் பயன்படுவதும், பூசாரி குளித்து முடித்து திருநீரை பூசித் தங்களைத் தீட்டு கழித்துக் கொள்வது, பூஜையின் போது எண்ணெய் விளக்கு ஏற்றுவது, நறுமணப் புகை, இடைவிடாத மணி ஓசையை கர்ப்பக்கிரஹத்துக்குள் எழுப்புதல் போன்ற அனைத்து பூஜை முறைகளுக்கும் உரிய ஆதாரத்தை பரிசுத்த வேதாகமத்திலேயே காண முடியும்.

4. மணி அடித்துக் கொண்டே கர்ப்பக்கிரஹத்துக்குள் போகுதல்

மூலஸ்தானத்திற்குள் அதாவது கர்ப்பக்கிரஹத்துக்குள் (மஹா பரிசுத்த ஸ்தலத்திற்குள்) ஆசாரியன் (கோயில் குருக்கள்) போகும் போது அவர் அங்கியின் ஓரங்களில் மணிகள் தொங்கப்பட வேண்டும். அவர் நடமாடும் போது அந்த மணி ஆடி ஓசையை எழுப்பிக் கொண்டே இருக்கும் என யாத்திராகமம் 28:34 கூறுகிறது. இதை ஒட்டியே சைவ, வைணவக் கோயில்களில் குருக்கள் மணி அடித்துக் கொண்டே கருவறைக்குள் செல்லும் பழக்கம் உண்டாயிற்று.

5. தலையில் பட்டயம் கட்டுதல்

யாத்திராகமம் 28:36ன்படி ஆசாரியர்களின் தலையில் பட்டயம் கட்டும் முறையை இன்றும் சைவ, வைணவக் கோயில்களில் காணலாம்.

6. அபிஷேகம், தூபதீபம் காட்டும் முறை

அபிஷேக தைலம், சாம்பிராணி செய்யும் முறை, தூபம் காட்டுதல் அனைத்தும் யாத்திராகமம் 30:23–28 வசனங்களில் சொல்லப்படியே செய்யப்படுகின்றன.

7. பொன், வெள்ளியால் அலங்காரம்

பொன், வெள்ளி, வெண்கலம் மற்றம் மரத்தில் செய்யப்படும் வேலைப்பாடுகள், அதில் விலை உயர்ந்த வைரம், இரத்தினக் கற்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதித்தல் போன்றவைகள் இன்றும் யாத் 31: 1–6ல் கூறப்பட்டுள்ள படியே இங்கு கோயில்களில் செய்யப்படுகின்றன.

8. நினைவுக்கல் வழிபாட்டின் வழியே சிவலிங்கம்

நினைவுக்கல் வழிபாடு என்பது 'பொது நன்மையின் வடிவாக விளங்கும் இறைவனையும், பொது நன்மையின் பொருட்டு தன்னையே தியாகம் செய்த மனிதனையும் நினைத்து கல் நட்டு வழிபடுதலே' என்று இரா.ஜெசிந்தர் எபிநேசர் தமது நூலான 'நினைவுக்கல் வழிபாடும் விவிலியமும்' – பக் 5ல் எழுதியிருக்கிறார். கடவுளை நினைத்து வைக்கப்பட்ட நினைவுக்கல் வழிபாடு சிந்து வெளியிலும் காணப்பட்டது. அதே போல இஸ்ரேல் நாட்டு வழிபாட்டிலும் காணப்படுகிறது. இஸ்ரேல் வழிபாட்டில் இது 'கல்தூண்' எனக் குறிக்கப்படுகிறது (டாக்டர் மு.தெய்வநாயகம், 'விவிலியம், திருக்குறள், சைவ சித்தாந்தம் – ஓர் ஒப்பாய்வு'– பக் 45–47).

யாக்கோபு கலக்கத்தோடும், துன்பத்தோடும் சென்ற போது கடவுள் அவனுக்கு காட்சி கொடுத்தார் (ஆதியாகமம் 28:17,18). கடவுள் தனக்கு தரிசனம் தந்த இடத்தை மீண்டும் வரும் போது அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்பதற்காக அந்த இடத்தில் ஒரு கல்லை எடுத்து நட்டான். அதை மற்ற கற்களில் இருந்து வேறுபடுத்தி அடையாளம் காட்டுவதற்காக அதன் மேல் எண்ணெய் பூசப்பட்டது. இப்படி கல்லை நட்டு, பலி பீடம் கட்டி வழிபட்ட நிகழ்வுகளை பரிசுத்த வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டு புத்தகத்தின் பல இடங்களில் காணலாம். கடவுள் மோசேக்கு சீனாய் மலையில் வார்த்தைகளையும், கட்டளைகளையும் கொடுத்த இடத்தில் பன்னிரண்டு கல்லை எடுத்து நட்டான் என யோசுவா 4:20ல் பார்க்கலாம். அதே போல யோசுவா கானானை வெற்றி கொண்ட பிறகு சீகேம் – கர்வாலி மரத்தின் கீழ் ஒரு கல்லை நட்டான் என யோசுவா 24:26–28லும் காண முடியும். இப்படியே சாமுவேலும் செய்தான் என 1 சாமுவேல் 7:12லிலும் கூறப்பட்டுள்ளது.

இது போன்ற நினைவுக்கல் வழிபாடு சிந்து வெளி திராவிட வழிபாடாகவே இருந்துள்ளது. சங்க இலக்கியங்களில் இது 'சிவலிங்கம்' என அழைக்கப்பட்டது. பைபிளில் இதற்கு 'கல்தூண்' என்று பெயர்.

9. இஸ்லாம் மதத்தில் கருப்புக்கல்

இஸ்லாம் மதத்தில் இதற்கு 'கருப்புக்கல்' என்று பெயர். இது மெக்காவில் உள்ளது. காபாவை ஏழு முறை சுற்றி வந்து இந்த கருப்புக்கல்லை தொட்டு முத்தமிடுவது இஸ்லாமியரின் வழக்கம். இப்ராஹிம் நபியும், அவரின் மூத்த மகன் இஸ்மவேலும் கடவுளைத் தொழுது கொள்ளும்படி திராவிட மரபுப்படி 'கல்' ஒன்றை நாட்டி சிறப்பித்தனர் என்பது இஸ்லாமியரின் நம்பிக்கை. அந்தக் கல் தான் கருப்புக்கல். அது இருக்குமிடம் 'பைத்துல்லா' எனப்படுகிறது. பைபிளில் இது 'பெத்தேல்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

10. ஸ்தல விருட்சம்

கானான் தேசத்தை வெற்றி கொண்ட பிறகு யோசுவா ஒரு கல்லை எடுத்து அங்கிருந்த ஒரு கர்வாலி மரத்தின் கீழ் நட்டான் என்று வேதாகமம் கூறுகிறது (யோசுவா 24:26–28). இதே போல் நமது தேசத்திலும் முன்பு பொது இடங்களில் ஒரு மரத்தின் கீழ் கற்கள் வைக்கப்பட்டு வழிபாடுகள் செய்யப்பட்டு வந்தன. பின்பு அதே இடத்தில் கோவில்கள் எருசலேம் கோயில் கட்டப்பட்ட முறையில் கட்டப்பட்டன. கல் நாட்டப்பட்டு இருந்த அந்த மரம் பின்பு 'ஸ்தல விருட்சம்' என அழைக்கப்படலாயிற்று. இப்படி எல்லாக் கோயில்களிலும் இன்றும் ஸ்தல விருட்சங்கள் இருப்பதைக் காணலாம். இதற்கு முன்னோடி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள சம்பவங்களே.

11. கன்றுக் குட்டி வாகனம்

சைவ, வைணவக் கோயில்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள மூர்த்திகள் திருவீதி உலா வருவதற்கு கன்றுக்குட்டி வாகனத்தில் எழுந்தருளுவதைக் காணலாம். இந்த கன்றுக்குட்டி வாகனம் எங்கே இருந்து வந்தது என்பதின் ஆதாரத்தையும் பரிசுத்த வேதாகமத்திலேயே காண முடியும். இஸ்ரவேலின் இராஜாவாகிய யெரோபெயாம் (கி.மு.798–762) பொன்னினால் இரண்டு கன்றுக்குட்டிகளை உருவாக்கி ஒன்றைப் பெத்தேலிலும், மற்றொன்றை தாணியிலும் ஸ்தாபித்தான் என்று 1 இராஜாக்கள் 12:28–33ல் சொல்லப்பட்ட படியே தான் நமது கோயில்களிலும் கன்றுக்குட்டி வாகனம் உருவாக்கப்பட்டது.

12. சிவலிங்கத்திற்கு முன்பாக நந்தி

சிவன் கோவில்களில் சிவலிங்கத்திற்கு முன்பாக கருவறைக்கு வெளியே நந்தி ஒன்று லிங்கத்தை நோக்கி அமர்ந்திருப்பதைக் காணலாம். நந்தி ஒரு காளையல்ல. அது ஒரு கன்றுக் குட்டியே. காளை என்றால் அதற்கு கொம்புகள் முளைத்திருக்கும். ஆனால் நந்திக்கு கொம்புகள் இல்லாமல் கொம்பு

முளைக்கும் பருவத்தில் உள்ள வளர்ந்த ஒரு கன்றுக் குட்டியையே காண முடியும். இதுவும் மேலே கண்ட விளக்கத்தின்படியே செய்யப்பட்டது தான்.

13. திருநீறு, சந்தனம், குங்குமம் நெற்றியில் இடுதல்

சைவர்கள் நெற்றிலே திருநீறு, சந்தனம், குங்குமம் இடுகின்றனர். இது கிறிஸ்தவத்தின் கடவுட் கொள்கையாகிய பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரித்துவக் கடவுளை சுட்டிக் காட்டும் விதமாகவே திருநீற்றை நெற்றியில் மூன்று கோடுகளாகப் போடுகின்றனர். இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்து விலையேறப்பட்ட இரட்சிப்பை மக்களுக்கு தந்தருளியதை நினைவுபடுத்தும் படியாக கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் சிலுவையை ஒரு புனித சின்னமாக ஏற்றுக் கொண்டனர். மரத்தால் ஆன சிலுவையில் மாண்டார் என்பதைக் குறிக்கும் விதமாக சைவர்கள் சந்தன மரக்கட்டையை உரைத்து நெற்றியில் அடையாளம் இடுகின்றனர். இயேசு சிலுவையில் இரத்தம் சிந்தியதை நினைவு கூறும் வகையில் அந்த சந்தனத்தின் மேல் சிகப்புக் குங்குமத்தை ஒரு துளி எடுத்து பொட்டாக இடுகின்றனர்.

14. நெற்றியில் இடுவதற்கு வேத ஆதாரம்

இயேசு தம்மையே பலியாக்கி இரத்தம் சிந்தி நம்முடைய சகல பாவங்களையும் பரிகரிக்கும் பாவப் பரிகாரியாக ஆனபடியால், பாவக் கறை போக்கும் அந்த பரிசுத்த இரத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதை எபிரேயர் 9:13–14ல் காணலாம். அந்தப்படியே சைவர்களும் ஏற்றுக் கொண்டு நெற்றியில் குங்குமம் இடுகின்றனர். நெற்றியில் இடுவதற்குரிய ஆதாரத்தையும் பரிசுத்த வேதாகமமே தருகிறது. ***'கர்த்தரின் நியாயப் பிரமாணம் உன் வாயில் இருக்கும்படிக்கு இது உன் கையிலே ஒரு அடையாளமாகவும், உன் 'கண்களின் நடுவே' நினைப்பூட்டுதலாகவும் இருக்கக் கடவது'*** என்று யாத்திராகமம் 13;9ம், 'சீயோன் மலையின் மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடே கூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் ***'நெற்றிகளில்' எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரையும் நிற்கக் கண்டேன்'*** என வெளிப்படுத்தின விசேஷம் 14;1 லும் கூறப்பட்டு இருக்கிறது,

15. வைணவர்களின் திருமண் – நாமம் இடுதல்

புனித தோமாவின் கிறிஸ்தவக் கொள்கையை ஏற்றுக் கொண்ட சைவர்கள் திருநீறு, சந்தனம், குங்கும சின்னத்தை பயன்படுத்திய போது வைணவர்கள் அதையே திருமண்ணாக, நாமமாக அணிந்தனர். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர்கள் நம்மை மீட்கும்படியாக விண்ணிலிருந்து வந்தவர்கள் என்பதை நினைவுகூறும்படியாக நெற்றியில் செங்குத்தாக மேலிருந்து கீழாக மூன்று கோடுகளாக இடுகின்றனர். அதில் இயேசு கிறிஸ்து இரத்தம் சிந்தியதைக் காட்ட மையக் கோட்டை சிகப்புக் கோடாகவும், இரத்தம் வடிந்ததை சுட்டிக் காட்ட மேலே ஒடுக்கமாகவும், கீழே வரவர சற்று தடிமனாகவும் காட்டப்படுகிறது.

16. திருநீறு தயாரிக்கும் முறை

திருநீறு தயாரிக்கும் முறையையும் எண்ணாகமம் 19ம் அதிகாரம் தெளிவாக விளக்கி கூறுகிறது. பழுதற்ற ஒரு செங்கிடாரியை பாளையத்துக்குப் புறம்பே எடுத்துச் சென்று அதைக் கொன்று, அதன் தோல், சதை, இரத்தம் மற்றும் சாணியையும் மணம் தரும் கேதுரு மரக்கட்டைகளைக் கொண்டு சுட்டெரித்து அந்த சாம்பலை வாரி எடுத்து சுத்தமானதொரு இடத்திலே தீட்டுக் கழிக்கும் பொருட்டாக இஸ்வேரர் அதை கொட்டி வைத்தனர். அது பாவத்தை பரிகரிக்கும் என்பதனால் அப்படி செய்யப்பட்டது. 'நீறு பூத்த நெருப்பு' என்பதில் உள்ள 'நீறு' சாம்பலைக் குறிக்கிறது. சாதாரண சாம்பல் கடவுள் வழிபாட்டோடு தொடர்பு படுத்தப்படும் போது அது 'திரு' என்ற அடைமொழி பெற்று 'திருநீறு' ஆகிறது. இயேசு கிறிஸ்துவின் சிலுவைப்பாடு மரணத்தை தியானம் செய்யும் தவசு நாட்களில் (லெந்து நாட்களில்) முதல் நாளை 'சாம்பல் புதன்கிழமை' (ஆஷ் வெட்னெஸ்டே – திருநீற்றுத் திருநாள்) என்றே இப்போதும் கிறிஸ்தவர்களில் சில பிரிவினர் கொண்டாடி வருகின்றனர். இப்போது இயேசு கிறிஸ்து தம்மையே பலியாகக் கொடுத்து பாவப் பரிகாரியாக ஆகி விட்டதால், இனி மிருக பலி தேவையில்லை என்ற பலி நிறுத்த, பலி நிறைவேற்றுக் கொள்கையை ஏற்றுக் கொண்டு இப்போது திருநீறு தயாரிக்க பசுவின் சாணத்தை மட்டுமே சுட்டெரித்து, சாம்பலாக்கி, ஜவ்வாது போன்ற வாசனைப் பொருட்கள் சேர்த்து திருநீறு தயாரிக்கின்றனர்.

17. வீட்டுக் கதவின் நிலைப்படிகளில் சந்தனம், குங்குமம் இடுதல்

வீட்டுக் கதவுகளில், கதவின் நிலைப்படிகளில் சந்தனம், குங்குமம் இடும் பழக்கம் நம் இந்து சகோதரர்களின் வீடுகளில் இப்போதும் பார்க்கலாம். இதை ஏன் செய்கிறார்கள்? அதன் அர்த்தம் என்ன? இதையும் பரிசுத்த வேதாகமம் 12ம் அதிகாரத்திலே காண முடியும். இறைவன் தம் இஸ்ரவேல் மக்களிடம் கூறினார். எகிப்து தேசத்தின் பார்வோனுடைய தலைப்பிள்ளை முதல் அந்த தேசத்தில் இருக்கிற தலைச்சன் குழந்தைகள், மிருக ஜீவன்களின் தலையீற்றுக்கள் அனைத்தையும் நான் அழிப்பேன். இஸ்ரவேல் மக்களின் குடியிருப்புக்களை தனியாக அடையாளம் காட்டுவதற்காக ஒரு ஆட்டை பலியிட்டு அதன் இரத்தத்தை வீட்டு வாசல் நிலைக்கால்கள் இரண்டிலும், நிலையின் மேல் சட்டத்திலும், தெளித்து வைக்க கட்டளையிட்டார். அப்படி செய்யும் போது 'அழிக்கும் வாதை' (சங்கார தூதன்) அவர்கள் வீடுகளைக் கடந்து போகும் போது, அந்த வாதை அவர்கள் இல்லத்திற்குள் வராமல் இருக்கும் என்றார்.

இரத்தத்தை தெளித்து வைக்காத இஸ்ரவேலர் அல்லாத அனைத்து வீடுகளில் இருந்த தலைச்சன் குழந்தைகளும், பார்ப்போனின் மகனும், மிருகங்களின் தலையீற்றுக்களும் கடவுள் சொன்னபடியே இறந்தன. அதுபோல எந்த வாதையும் இல்லத்திற்குள் வரக் கூடாது என்பதற்காகவே இப்போதும் நம்

தேசத்தில் இந்துக்கள் நிலைப்படிகளில் சந்தனத்தையும், குங்குமத்தையும் அடையாளமாக இடுகின்றனர். வேறு என்ன காரணத்துக்காக இதைச் செய்கிறார்கள் என்று வேறு எந்த வேதத்திலாவது சொல்லப்பட்டு இருந்தால் தயவு செய்து எனக்கு எழுதி அனுப்புங்களேன். ஏனென்றால் நான் பல வேதங்களில், புராணங்களிலும் தேடிப் பார்த்து விட்டேன். எனக்கு விளக்கம் கிடைக்கவில்லை. யாருக்காவது தெரிந்தால், கிடைத்தால் எனக்குத் தெரிவியுங்கள். மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன்.

18. பெண்களுக்கு ஏன் நீளமான கூந்தல்?

பெண்கள் தங்கள் கூந்தலை வெட்டாமல் நீளமாக வளர்த்துக் கொள்ளும் பழக்கம் கிட்டத்தட்ட உலகின் எல்லாக் கலாச்சாரங்களிலும் காணப்படுகிறது. அதுவும் நமது தேசத்தில், சற்று அதிகமாகவே காணப்படுகிறது. இதற்குரிய காரண காரியங்களையும் வேதாகமத்திலேயே காண முடியும். பாவம் செய்து மனிதன் இறைவனை விட்டுப் பிரிந்த நிலையில், இறை உறவின் புனிதமான தியாக அன்பை, அதன் மேன்மையை புரிந்துகொண்டு, தன்னை மாற்றிக் கொண்டு மீண்டும் அவரைக் கிட்டிச் சேருவதற்கு நிழலாக கொடுக்கப்பட்டதே கணவன்–மனைவி, பெற்றோர்–பிள்ளை, சகோதர–சகோதரிகள் போன்ற உறவுகள். அப்படி இறைவன் – மனிதன் உறவின் ஒரு அம்சத்தை விளக்குவது தான் கணவன் மனைவி உறவு. இதில் முக்கிய அம்சம் மனைவி கணவனுக்கு கட்டுப்பட்டவளாக (ஆதியாகமம் 3:16), கணவன் முன்பு தன்னைத் தாழ்த்தி நடப்பவளாக (1 கொரிந்தியர் 11 : 5–15) இருக்க வேண்டும் என்பது, இந்தத் தாழ்மை பெண்களுக்கு மகிமையாக இருக்கிறது. அந்தத் தாழ்மையின் சின்னமாக அவளுக்கு நியமிக்கப்பட்டு இருப்பதே நீளமான முடி என்று வேதாகமத்தில் கூறப்பட்டு இருக்கிறது, பெண்கள் முக்காடு இட்டுக் கொள்வதின் அடிப்படையும் இதுவே. தன் தலையை மூடிக் கொண்டிருக்கும் முடிக்கு மேல் இன்னொரு மூடியாக நீண்ட கூந்தலை வளர்த்துக் கொள்வது நம் இந்தியப் பண்பாடு.

19. சாமிக்கு முடிகாணிக்கை

தாங்கள் வணங்கும் சாமிக்கு என்று வேண்டிக் கொண்டு ஒரு குறிப்பிட்ட நாட்கள் வரை தாடி மீசை, தலைமுடியை வளர்த்துக் கொள்வதும், பிறகு அவற்றை எடுத்து விட்டு மொட்டை போட்டு முடி காணிக்கை செலுத்துவதும் நமது தேசத்தில் காணப்படும் ஒரு பழக்கமாக இருக்கிறது. இப்பழக்கத்திற்கு வலுவான ஆதாரத்தை எண்ணாகமம் 6:1–21ல் காணலாம். இதன் தாத்பரியம் என்ன? மனைவி கணவன் முன் தாழ்ந்து நிற்கக் கடமைப்பட்டவள் என்றும் அதன் அடையாளமே நீண்ட கூந்தல், தலையை முக்காடிடல் எனப் பார்த்தோம். இதே அடிப்படையைத் தான் சாமிக்காக விரதம் இருந்து முடிவளர்த்து அதை காணிக்கையாக செலுத்தும் பழக்கத்திலும் காண்கிறோம்.

20. மொட்டை போடுதலின் நோக்கம்

மனைவி தன் கணவனை சார்ந்து இருப்பது போல மனிதனும் தன்னைப் படைத்த கடவுளை சார்ந்து வாழ வேண்டியவனாக இருக்கிறான். ஆகவே தேவ சித்தம் அறிந்து அவரிடமிருந்து சில நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டி சில நாட்கள் பொருத்தனை செய்து விரதம் இருந்து, இந்த உலகப் பிரகாரமான காரியங்களில் இருந்து முடிந்த மட்டும் தன்னை விலக்கிக் கொண்டு, ஆன்மீக வளர்ச்சிக்கு வேண்டப்படாத உணவு வகைகளையெல்லாம் தவிர்த்து, கட்டுப்பாடான பரிசுத்தத்தோடும், சுத்தபத்தத்தோடும் தன்னைக் காத்துக் கொண்டு இறைவனை தியானித்து அவரை அண்டிச் சேருகிறான். அப்படி அண்டிச் சேரும் போது தன்னைத் தானே தாழ்த்துகிறான். அந்தத் தாழ்மையின் அடையாளமாக தாடி, தலைமுடியை வளர்த்து அதையே தெய்வத்திற்கு காணிக்கையாகவும் தருகிறான். இறைவனையே முழுமையாக நாடுபவர்கள் இதனாலேயே தாடி வளர்த்து, முடி வளர்த்து உச்சிக் கொண்டையும் போட்டுக் கொள்கின்றனர். இப்படிப்பட்ட விரதத்தை எபிரேய மொழியில் 'நசரேய விரதம்' என வேதாகமம் அழைக்கிறது. இயேசு கிறிஸ்துவை 'நசரேயர்' என்றும் அழைப்பது உண்டு. தமிழில் இதற்கு 'அர்ப்பண விரதம்' என்று பொருள்.

21. மாதப் பிறப்பு, அமாவாசை மற்றும் சில விசேஷ தின ஆசரிப்பு

அமாவாசை, பௌர்ணமி, சில மாதப் பிறப்புக்களையும், சில நாட்களையும் இறை வழிபாட்டிற்குரிய விசேஷ தினங்களாக நமது தேசத்தில் இந்துக்கள் ஆசரிக்கின்றனர். இந்த ஆசரிப்புக்குண்டான ஆதாரங்களையும் பரிசுத்த வேதாகமமே தருகிறது. இப்படிப்பட்ட பல்வேறு விசேஷ நாட்களை சிறப்பான இறைவழிபாட்டிற்குரிய நாட்களாக ஆசரிக்கும்படியான திட்டவட்டமான கட்டளைகள் வேதாகமத்தில் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இப்போதும் அனேகமாக எல்லா திருச்சபைகளிலும் மாதந்தோறும் முதல் தேதியன்று அதிகாலையில் கூடி தேவனை ஆராதிக்கும் வழக்கத்தை கொண்டுள்ளனர். இன்றைய கால கட்டத்தில் எந்த நாளை ஆசரிக்கணும் என்கிறதிலும், எப்படி ஆசரிக்கணும்கிறதிலேயும் சில மாறுபாடுகள் ஏற்பட்டு இருக்கலாம். பல ஆயிரம் ஆண்டுகள் இடைவெளியில் இப்படி சில மாற்றங்கள் ஏற்படுறது சகஜமே. நாட்களும், ஆசரிக்கும் முறைகளும் மாறுபட்ட போதிலும், இந்த நாட்களை விசேஷித்த விதத்தில் ஆசரிக்கணும்கிற கட்டளையை வேதாகமத்தில் மட்டுமே காண முடியும். தற்போதைய சில வேத, புராணங்களில் இந்த ஆசரிப்பு நாட்களைப் பற்றிய நாள் நட்சத்திரங்கள் என ஏதாவது குறிக்கப்பட்டு இருக்கலாம். ஆனா இவைகள் எல்லாமே மிகவும் சமீபத்தவைகளே அல்லாமல் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டவைகள் அல்ல.

22. ஏழு நாட்கள் கொண்ட வார சுழற்சி முறை

உலகம் முழுவதிலும் உள்ள தேசங்களில் வாரத்திற்கு ஏழு நாட்கள் என்ற முறையே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அது ஏன் ஏழு நாட்களாக இருக்கணும்? ஆறாகவோ, எட்டாகவோ, பத்தாகவோ ஏன் இல்லை? ஏழாக இருக்கக் காரணம் என்ன? இதையும் வேதாகமமே தெளிவுபடுத்துகிறது. வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், தாவரங்கள், மீன்கள், பறவைகள், மிருகங்கள் என அனைத்தையுமே படைத்த பின்பு ஆறாவது நாளில் கடவுள் ஆதாம் என்ற மனிதனையும், ஏவாள் என்ற பெண்ணையும் படைத்து அவர்களை ஆசீர்வதித்தார். ஏழாவது நாள் தாம் படைத்த இந்த மனித தம்பதிகளோடே அவர் ஓய்ந்திருந்தார்.

இறைவனின் இந்த படைப்பை நினைவு கூறும்படியாக 'ஆறு நாட்கள் வேலை செய்து ஏழாம் நாள் ஓய்ந்திரு' ங்கிற கட்டளை மனிதனுக்கு கொடுக்கப்பட்டது. இதை உலகம் முழுக்க அனைத்து நாடுகளுமே இந்த ஏழு நாள் வார சுழற்சியையும், ஏறத்தாழ அனைத்து நாடுகளுமே ஏழாவது நாளை விடுமுறை, ஓய்வு நாளாகவும் அனுசரிக்கின்றன. மேலும் ஏழு என்கிற அந்த எண் நம்ம இந்துக்கள் முழுமையைக் குறிக்கும் ஒரு மங்கள எண்ணாக எண்ணுகின்றனர். ஏழுநாட்களில் இறைவன் இந்த பிரபஞ்சத்தின் படைப்பை முழுமையாக்கினார். அந்த முழுமையான தன்மையைக் குறிக்க ஏழு என்கிற எண் பயன்படுத்தப்படுகிறது. இதன்படியே ஏழேழு உலகம், ஏழுமலையான் என்றெல்லாம் கூறுகின்றனர். இதற்கு ஆதாரம் வேதாகமமே.

23. மிருக வழிபாடு ஏன் எதற்காக?

சைவ வைணவக் கோயில்களில் ஏன் தேங்காய் பழம் உடைச்சு சாமி கும்பிடணும்? எந்த அர்த்தத்திலே என்ன நோக்கத்துக்காக இதைச் செய்கிறோம்னு எந்தப் புராணங்களிலாவது, வேதங்களிலாவது சொல்லப்பட்டு இருக்கா? இல்லை என்றே சொல்வேன். இவை எல்லாமே பரிசுத்த வேதாகமத்தில தேவனால் சொல்லப்பட்டவைகளின் நிழல்களே.

பாவம் செய்கிறதின் நிமித்தம் மனிதன் இறைவனை விட்டுப் பிரிந்து விலகி இருக்கிறான். மீண்டும் இறைவனோடு இணைக்கப்பட, மோட்ச கதியை அடைய, அவன் செய்யும் முயற்சிகளில் தலையாயது இறை வழிபாடு. அதிலும் மிருகங்களை பலியிட்டு செய்யப்படும் வழிபாடு இன்னும் சிறப்பானது. தெய்வம்னு நினைச்சு கும்பிடுகிறவைகளுக்கு ஆடு, மாடு, பறவைகளைப் பலி இடும் வழக்கம் நமது தேசத்தில தொன்று தொட்டு இருந்து வருது. இந்தப் பழக்கம் எப்படி வந்துச்சு, எதற்காகச் செய்யணும்னு ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களிலோ அல்லது பகவத் கீதையிலோ கூறப்பட்டு இருக்கவில்லை. ரிக் வேதத்தில பலியிடுகிறதைப் பற்றி குறிப்பிடப்பட்டு இருக்கிறதே ஒழிய அது ஏன் செய்யப்படணும்கிறதுக்கான விளக்கமோ, காரண காரியங்களோ அவைகளில் இல்லை. ஆனா இவைகள் அனைத்துமே பரிசுத்த வேதாகமத்தில் மிகத் தெளிவாக விளக்கப்பட்டு இருக்குது.

கடவுள் அன்பே உருவானவர்தான். இரக்கம், கருணை, தயவு உள்ளவர்தான். அதே சமயம் நீதிபரரும் கூட. அவர் நீதியுள்ள நியாயாதிபதின்னு சங்கீதங்கள் புத்தகம் 7:11 சொல்லுது. அவர் சர்வ லோக நியாயாதிபதின்னு ஆதியாகமம் 18:25 கூறுதே. யார் தப்பு செஞ்சாலும் அதுக்குரிய தண்டனையை அவங்க அடைஞ்சே ஆகணும். நாம செய்யக் கூடிய பாவங்கள், அது பெருசோ, சின்னதோ, அது நம்மோட உயிர் வாழ்க்கையை பாதிக்கிது. பாவம் செய்தால் அதுக்கு தண்டனையா உயிரையே இழந்தாகணும். ***'பாவம் செய்கிற ஆத்துமா சாகவே சாகும்'*** கிற கடுமையான, கடினமான உண்மையை வேதாகமம் எசேக்கியல் புத்தகம் 18:4 கூறுகிறது. இது உடனே நடக்காது. நம்முடைய சரீர மரணத்துக்குப் ஓர் நியாயத் தீர்ப்புன்னு ஒண்ணு இருக்குது. அதுக்குப் பிறகு இது நிறைவேற்றப்படும்.

மனுஷர்களான நாம எல்லோருமே அறிந்தோ அறியாமலோ ஏதாவது ஒரு பாவத்தை செய்யாம இருக்க முடியாது. வாழ்க்கையின் ஏதாவது ஒரு பகுதியில அல்லது காலக் கட்டத்தில நாம விரும்பியோ விரும்பாமலோ ஏதாவது ஒரு பாவத்தை செய்யவே செய்யிறோம். தேவ நியதியின்படி நாம மரண தண்டனை பெற்றாகணும். கடவுள் நியாயாதிபதியாக இருக்கிற அதே சமயத்தில அவர் மனதுருக்கம் கொண்ட நம்மை படைச்ச சிருஷ்டிகராகவும் இருக்கிறாரே. தாம் படைச்ச தம்மோட புள்ளங்க மரண தண்டனைக்கு ஆளாகிறதை அவரால எப்படி சகிச்சுக்கிட முடியும்? முடியாதே. அதே சமயத்தில நீதி தர்மத்தின்படி பாவத்திற்குரிய தண்டனையும் அவர் நிறைவேற்றியாகணுமே. இங்க தான் நம்ம கடவுளோட அருமையான, அற்புதமான திட்டத்தைப் புரிஞ்சுக்கிடணும்.

ஒரு உத்தமமான நீதிபதியின் மகன் ஒரு குற்றம் செய்து பிடிக்கப்பட்டு அந்த உத்தம நீதிபதியின் முன்பாகவே நிறுத்தப்படுறான். நீதிபதிங்கிற முறையில எந்த பாரபட்சமும் இல்லாம நியாயம் விசாரிச்சு, அந்த குற்றத்திற்குரிய தண்டனையா ஒரு பெரிய தொகையை அபராதமா செலுத்த வேணும்னு தீர்ப்பு அளிக்கிறார். அதை செலுத்தத் தவறினாலோ அல்லது அதை செலுத்தி முடியும் வரையிலும் சிறையில் இருக்கணும்னும் தீர்ப்பு கூறிடுறார். நீதிபதிங்கிற ஸ்தானத்தில நீதியை தீர்ப்பாக வழங்கிட்டாரு. ஒரு அன்புத் தந்தைங்கிற முறையில அவரால தம்மோட புள்ளை சிறையில இருக்கிறதுக்கு விட முடியுமா? அதுனால அவர் என்ன பண்றாரு. தன்னோட சொத்து, பத்து நிலபுலன்கள் எல்லாத்தையும் வித்து அந்த பெரிய அபராதத் தொகையை தானே கட்டி தன் மகனை சிறைத் தண்டனையிலிருந்து மீட்கிறார்.

அதே போல பாவம் செய்த தம் மக்களாகிய மனிதர்களை மரண தண்டனையிலிருந்து மீட்பதற்காக, தெய்வ நியதியின்படி மரண தண்டனை வழங்கிய கடவுள், அந்த அபராதமாகிய மரண தண்டனையையும் தானே முன்வந்து ஏற்றுக் கொண்டு செலுத்தி விடுகிறார். எல்லா மரண தண்டணையிலும் மிகக் கொடுமையான, கொடூரமான பாடுகள், வேதனைகள்

நிறைந்த மரணம் சிலுவை மரணம். உயிர் உடனேயும் போகாது. தூக்குத் தண்டனை, சிரச்சேதம், விஷ ஊசி போடுவது, கேஸ் சேம்பரில் அடைத்து சாகடிப்பது, துப்பாக்கியால் சுட்டுக் கொல்வது, விஷம் வைத்து கொல்வது, விஷப் பாம்புகளை தீண்டச் செய்வது எல்லாம் அதிக அவஸ்தை இல்லாத மரணங்கள். உயிரோட தீ வைத்துக் கொல்றது, எலெக்டிரிக் சேர் மரணம், புலி, சிங்கம் போன்ற மிருகங்களுக்கு இரையாக மனிதர்களை உயிரோடு போடுறது, உயிரோட கழுவேற்றுதல், இவை எல்லாத்தையும் விட மிக கொடூரமான மரணம் சிலுவையில் அறைந்து சாகடிப்பது என்பது. கொஞ்சம் கொஞ்சமாக வேதனையில் துடியாய் துடிச்சு, பரிதவித்து, எல்லா இரத்தமும் சிந்தி, நாவு வரண்டு போயி தாகத்தால் தவிச்சு, கழுகு, பருந்து மற்றும் பல பறவைகளால் கொத்தப்பட்டு சாகிறதை நினைச்சுப் பார்க்கவே உடம்பெல்லாம் நடுங்குது. அப்பேர்ப்பட்ட ஈவு இரக்கமில்லாத நமக்கு வர வேண்டிய அந்த மரண தண்டனையை நாம கேட்காமலேயே நமக்காக, நமக்கு ஒரு பரிபூரண விடுதலையை கொடுக்கிறக்காக நமக்காக ஏற்றுக் கொண்டு, நம்மேல் உள்ள பாவங்களையும், சாபங்களையும், நோய்களையும் அவர் சுமந்து தீர்த்து, தம்முடைய பரிசுத்தமான இரத்தத்தினால் அவைகளைக் கழுவி நம்மை சுத்திகரித்து விடுதலையைக் கொடுத்துவிட்டார்.

இப்படியாக நமக்கு வர வேண்டிய மரணம்கிற அபராதத்தை கடவுள் தானே செலுத்திய செயல் தான் இந்த பூமியின் சரித்திரத்தில் ஆசியா கண்டத்தில், பாலஸ்தீன தேசத்தில 2000 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தேறியது. இப்படி மரிக்கணும்கிறதுகாகவே கடவுள் ஒரு மனித உருவில அவதாரம் எடுத்து வந்தார். அவர் தான் இயேசு கிறிஸ்து . நமது பாவங்களுக்காக இறைவன் இயேசு எப்படி துடிதுடித்து மரித்தார்ங்கிறதை விசுவாசித்து அதை ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு பாவ மன்னிப்பு, விடுதலை, பாவ விமோசனம் கிடைக்கிறது. இதற்கு ஒரு நிழலாட்டமே நமது பாவங்களுக்காக ஒரு ஆட்டுக் குட்டியை பலியிடுவது. சிறிய ஆட்டுக்குட்டி ஒரு சுத்தமான பிராணி. ஒரு அப்பாவியான, தீமை செய்யாத பிராணி. அந்த சிறிய ஆட்டுக்குட்டி பரிசுத்தமான தூய குணங்களைக் கொண்ட இறைவனுக்கு அடையாளமாக இருக்கிறது. ஆட்டுக்குட்டி, கன்றுக்குட்டி, புறா, காட்டுக்குருவி போன்ற சுத்தமான, தீமையற்ற, அப்பாவியான பிராணி, பறவைகள் நமது பாவங்களுக்காக எப்படி துடிதுடித்து சாகிறது என்பதை பார்த்த பிறகாவது மனிதன் மனம் திருந்தி மேற்கொண்டு பாவம் செய்யாம இருக்கணும் என்பதற்காகவே இவ்வித பலிச்சடங்குகளை தேவன் நியமித்தார்.

24. கோவில்களில் இப்போது ஏன் பலி கொடுக்கப்படுவது இல்லை?

அப்படி பலியிடும் போது செய்ய வேண்டிய சடங்குகளை பரிசுத்த வேதாகமத்தில இறைவனே கற்பித்து இருக்கிறார். மிருகங்களைப் பலியிடுவதின் நோக்கம், அது தோன்றிய விதம் எல்லாமே இப்படித் தான். இதையே நம்ம நாட்டு திராவிட

மக்களும் ஏற்றுக் கொண்டு பலிகளை இட்டனர். இது எந்த இந்து மத வேதங்களிலும் விளக்கப்படவில்லை. பரிசுத்த வேதாகமத்தில மட்டுமே விளக்கப்பட்டுள்ளது.

மனிதன் தான் செய்த பாவத்திற்கு பரிகாரமாக ஆட்டை பலியிட்டான். மீண்டும் மீண்டும் பாவம் செய்து பலிகளை இட்டான். இது தொடர்கதையாக தொடர்ந்தது. பாவத்தைக் கழுவ இரத்தம் சிந்தப்பட வேண்டும்னு வேதம் கூறுகிறது. இதையே சம்பூர்ண மஹாபாரதமும், தாண்டீய மஹாப் பிரமாணம் மற்றும் பல உபநிஷத்துக்கள் எல்லாமே கூறுகின்றன. உலகம் முழுக்க இருக்கின்ற மனிதர்களின் பாவங்களைப் போக்க மெய்யான பலியாக இறைவன் இயேசுவே மனித அவதாரம் எடுத்து, பாவமே செய்யாது வாழ்ந்து, சிலுவையில் இரத்தம் சிந்தி, பலியாகி நம் அனைவரோட பாவங்களையெல்லாம் கழுவி பாப விமோசனம் தந்து விட்டார். இதனாலேயே இனி மிருகங்களை பலி கொடுக்கத் தேவையில்லை என்று பலிகள் நிறுத்தப்பட்டு விட்டன. இதை சைவமும் வைணவமும் ஏற்றுக் கொண்டது. ஆகவே தான் நம்ம கோயில்களில் பலி பீடங்கள் இருந்தும் அங்கு தற்போது எவ்வித பலியும் செலுத்தப்படுவதில்லை. இன்று சில இடங்களில் சில சிறு சிறு தெய்வங்களாக கருதப்படுபவைகளுக்கு ஆடுமாடு கோழிகளை பலி கொடுக்கலாம். ஆனால் சைவ வைணவ பெரிய கோயில்களில் எங்குமே பலி கொடுக்கப்படுவது இல்லை.

25. பலியிடுவதின் நிழலாட்டமே தேங்காய் உடைப்பு

பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளதின் இந்த தாத்பரியத்தை நமது திராவிட முன்னோர்கள் புரிஞ்சுக்கிட்டாங்க. இதை ஜனங்களுக்குப் புரிய வைக்கிறதுக்காக இந்த தேங்காய் பழம் உடைப்பு, விபூதி, குங்குமம் இடுதல் போன்ற நிழல் சம்பிரதாயங்களை ஏற்படுத்தி இதைச் செய்யும் போது இவைகள் பலிக்கு நிழலாக, உவமையாக, சிம்பாலிக்காக, சப்ஸ்டியூட்டாக செய்யப்படுகின்றன என்பதை உணர்ந்து நிழலை விட்டுட்டு நமக்காக, நமது பாவங்களுக்காக மிருக பலிக்கு பதிலாக தம்மையே பலியாகக் கொடுத்த இறைவன் இயேசுவின் பாடுகளையும், தியாகத்தையும், அன்பையும் நினைச்சு, செய்த பாவத்திற்கு மனங்கசந்து அழுது, இனி அப்பாவங்களை செய்யாம இருக்க உறுதி பூண்டு, ஒப்புக் கொடுத்து, உண்மையான சத்தியத்தை, சத்திய தேவனை, எம்பெருமான் இயேசு பிரானைப் பற்றி பிடித்துக் கொள்ளும் போது மோட்ச கதியை அடைய முடியும் என்பதற்காகவே இந்த தேங்காய் உடைப்பை நிழலாட்டமாக நம்மோட முன்னோர்கள் ஏற்படுத்தினாங்க. எதன் நிழலாட்டமா இதைச் செய்தார்கள் என்கிறதைப் பாருங்களேன்.

முன்பு	இப்போது
1. பாவம் செய்த மனிதன் சுமார் ஒரு வயதுள்ள ஆட்டுக்குட்டியின் தலையின் மேல் கை வைத்து தனது பாவத்தை இறைவனிடம் அறிக்கையிட்டு, அந்த ஆட்டுக்குட்டியை பலியிடுவான் (லேவி 4:29).மனிதனின் பாவங்களை ஆடு ஏற்றுக் கொண்டு மனிதனுக்குப் பதிலாக அது மரிக்கிறது.	1. பாவம் செய்யும் மனிதன் கோயிலுக்கு தேங்காய், பழம், பூ விபூதி, குங்குமம் வெற்றிலை பாக்கு, கற்பூரம், ஊதுபத்தி போன்ற பொருட்களை ஒரு தட்டில் வைத்து கோயில் குருக்களிடம் (பூசாரி) கொடுத்து, அந்த தட்டின் மேல் கை வைத்து தன் தேவைகளை இறைவனிடம் அறிக்கை இடுகிறான். தேங்காய் உடைக்கப்படுகிறது. பழம் இருகூறாகப் பிரிக்கப்படுகிறது. தேங்காயை அடித்து உடைப்பது ஆட்டுக்குட்டி கொல்லப் படும் சடங்கிற்கு நிழலாக இருக்கிறது
2. பலியிடப்பட்ட ஆட்டுக் குட்டியின் இரத்தம் ஆசாரியனால் மனிதன் மேல் தெளிக்கப்படுகிறது (எபி 9:13 1 பேதுரு 1:2). மனிதன் பாவம் நீங்கி சுத்தமடைகிறான். பலியிட முடியாத சமயத்தில், பாவத் தீட்டை கழிக்க இரத்தத்திற்குப் பதிலாக சர்வாங்க தகன பலியின் சாம்பல் கரைத்த நீரைத் தெளிப்பதும் உண்டு	2. குங்குமம், விபூதி பூசாரியால் மனிதன் மேல் பூசப்படுகிறது. சிகப்பு குங்குமம் பூசப்படுவது இரத்தம் மனிதன் மேல் தெளிக்கப்படும் சடங்கிற்கு நிழலாக இருக்கிறது.
3. பின்பு பலியிடப்பட்ட ஆட்டுக் குட்டியின் இரத்தம் ஆசாரியனால் இறைவனுடைய பிரகாரத்தில் தெளிக்கப்படுகிறது.(லேவி 16:15) அதாவது மனிதனுடைய பாவம் இறைவனிடத்தில் கொண்டு சேர்க்கப்படுகிறது.	3. குங்குமம் பூசாரியால் சாமியின் மீது பூசப்படுகிறது அல்லது அர்ச்சிக்கப்படுகிறது. இது இரத்தம் இறைவனின் பிரகாரத்தில் தெளிக்கப்படும் சடங்கிற்கு நிழலாக இருக்கிறது.
4.பலியிடப்பட்ட ஆட்டின் மாமிசம் சமைத்து சாப்பிடப்படுகிறது. அதாவது ஆட்டுக்குட்டியின் மாமிசம் (அதன் தீமையற்ற சாந்த குணம்) மனித மாமிசமாக (மனிதனின் குணமாக) மாறுகிறது.	4. உடைக்கப்பட்ட தேங்காயும், பழமும் பிரசாதமாக சாப்பிடப்படுகிறது. இது பலி ஆட்டின் மாமிசத்தை சாப்பிடும் சடங்கிற்கு நிழலாக இருக்கிறது.

26. தீமையை வென்ற நடராஜரின் ஆனந்த நடனம்

நடராஜர் நடன ராஜனாக, தாண்டவக் கோனாக மயானத்தில் ஆனந்த நடனமாடியதால் ஆனந்தக் கூத்தன் என்றும் அழைக்கப்படுகிறார். அது ஏன் தெரியுமா? மனிதனாக வந்த கடவுள் தன் சாவின் மூலமாக தீமையை வென்று (சாத்தானை வென்று) சாவை வெற்றி கொண்டதைக் குறிக்கவே மயானத்தில் அந்த ஆனந்தக் களிநடனம். மரித்த இயேசு கிறிஸ்து சாவை வென்று உயர்த்தெழுந்ததும் மயானத்தில் – கல்லறையில் தான். உயிர்த்தெழுதல், மரணத்தை ஜெயித்தல், ஒரு மகிழ்ச்சிக்குரிய வெற்றி அல்லவா? மரணமே உன் கூர் எங்கே, பாதாளமே உன் வல்லமை எங்கே என்று அந்த சாத்தானை – நம்மை தொடர்ந்து பாவங்களை செய்யத் தூண்டி, பாவத்தின் சம்பளம் மரணம், பாவம் செய்கிற ஆத்துமா சாகவே சாகும் என நம்மை நரகத்துக்கு இழுத்துச் செல்லும் அந்த சாத்தானையும் அவன் கொண்டு வருகின்ற நித்திய மரணத்தையும் வென்றதின் அடையாளமாகவே அவர் தம் உடம்பெல்லாம் சாம்பலைப் பூசி மரணத் தீட்டை அழித்தவராய், மண்டை ஓடுகளை மாலையாக அணிந்து மரணத்தை ஜெயித்தவராக நடனமாடி, ஆனந்தக் கூத்தராக, நடராஜராக தேவன் காட்சியளிக்கிறார்.

27. சூலாயுதம்

பாவத்தை மனதாலோ, சொல்லாலோ, செயலாலோ, சிந்தையினாலோ கூட செய்யாது நமது பாவங்களுக்காக பாவப் பரிகாரியாக பலியானவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, எல்லா வேதங்களும், வேதாந்தங்களும் இறைவன் நமக்காக பலியாகிறார் எனக் கூறுகின்றன. எந்த தெய்வம் பலியாகி இருக்கிறது? எந்த தெய்வம் இரத்தம் சிந்தி இருக்கிறது? பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள சகல விதமான சத்தியங்களுக்கும் நிழலாகவும், நிழலாட்டமாகவும், சிம்பாலிக்காகவும், உவமை உருவகமாகவும் எல்லாவற்றையும் செய்து புராணங்கள், இதிகாசங்களிலும் அது போன்று கற்பனைக் கதாபாத்திரங்களை நல்ல உயர்ந்த உன்னதமான நோக்கத்தோடு உருவாக்கியவர்களுக்கு இயேசுவே இரத்தம் சிந்தினார் என்பதற்கு ஈடாக, நிழலாக யாரையும் சொல்ல முடியாமல் பொதுவாக 'நானே பலியாக இருக்கிறேன்' என கீதையிலும், சாந்தோக்கிய உபநிஷத்திலும் மற்றும் பல சூத்திரங்களிலும் வெறும் வார்த்தைகளில் மாத்திரமே அதைக் குறிப்பிட முடிகின்றன. உவமையாக உருவகப்படுத்தப்பட்ட எந்த தெய்வத்தையும் இயேசுவைப் போல பலியானதாக காட்ட முடியவில்லை. மற்ற எல்லாவற்றிலும் கை வைத்து கற்பனையில் சகலத்தையும் புனையத் தெரிந்தவர்களுக்கு இதில் மட்டும் முடியவில்லை. அது தான் சத்தியத்தின் வல்லமை, ஏனென்றால் இயேசு கிறிஸ்து ஒருவர் தான் மனுக்குலத்துக்காக பலியானவர். அந்த ஒப்புயர்வான, உன்னத தியாக அர்ப்பணத்தை, வேறு யாராலும் உவமையாக, நிழலாகக் கூட உருவகப்படுத்த முடியவில்லை.

வானத்தின் கீழே, பூமியின் மேலே சிலுவையிலே நமக்காக, நமது பாவங்களுக்காக, சாபங்களுக்காக, மீறுதல்களுக்காக, அக்கிரமங்களுக்காக, அநியாயங்களுக்காக கைகளிலும் கால்களிலும் ஆணிகள் அடிக்கப்பட்டு சிலுவையில் தொங்குகின்ற அந்தக் கோரக் காட்சியை ஒரு நிமிடம் உங்க கண்களை மூடி, உங்களுக்கு முன்பாக கொண்டு வந்து பாருங்கள். ஒரு உயர நீளமான மரக்கட்டையில் அதன் குறுக்காக ஒரு கட்டையை மாட்டி, அதில் தொங்கும்படியாக இரண்டு கைகளிலும் நீளமான பெரிய ஆணிகளால் அந்த குறுக்குக் கட்டையோடு அடித்துத் தொங்குகின்ற காட்சி ஒரு சூலாயுதத்தை உங்கள் கண்களுக்கு முன் கொண்டு வரவில்லையா? ஆம், அந்த சூலாயுதம், அந்த திரிசூலம் தீமையை வென்றதுக்கு, மரணத்தை ஜெயித்ததற்கு அடையாளச் சின்னமாக இருக்கிறது. மனிதனுக்கும் மனிதனுக்கும் நடக்கும் சண்டைகளில் அம்பு, வேல், கத்தி, கொடுவாள், அரிவாள், தண்டாயுதம் போன்ற பல ஆயுதங்களை பயன்படுத்துவார்கள். ஆனால் சூலாயுதத்தை மட்டும் யாருமே பயன்படுத்துறது கிடையாது. ஏன்னா அது தெய்வம் மட்டுமே பயன்படுத்தும் ஒரு ஆயுதம். அதுவும் தீமையை வெல்வதற்குப் பயன்படுத்தும் ஒரு ஆயுதம். அந்த ஆயுதத்தின் வடிவம், உருவகமே இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்குவதை பிரதிபலிப்பது தான்.

28. சோமாஸ்கந்தர்

சைவத்தில் பிதாவாகிய கடவுளை 'சிவன்' என்றும், தூய பரிசுத்த ஆவியை 'சக்தி' என்றும், குமாரனாகிய இயேசுவை 'குமரக் கடவுள்' என்றும் ஏற்றுக் கொண்ட போதிலும், இம்மூவரும் ஒன்றாகவே ஒருவராகவே இருக்கின்றார் எனும் திரியேக மூவொருமை கிறிஸ்தவக் கடவுட் கொள்கையை சைவமும் ஏற்றுக் கொண்டு சிவனும், சக்தியும், குமரனும் ஒன்றாகவே ஒருவராக இருக்கின்றனர் என்பதை 'சோமாஸ்கந்தராக' உருவகப்படுத்தி இருக்கிறது. காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் கோயிலில் இந்த உருவம் இருக்கிறது.

29. அரிஹரன்

அதே போல வைணவத்திலும் பிதாவாகிய கடவுளை 'சிவன்' என்றும், தூய ஆவியை 'விஷ்ணு' என்றும், குமாரனாகிய இயேசுவை 'பிரமன்' என்றும் ஏற்றுக் கொண்ட போதிலும் இம்மும்மூர்த்திகளும் ஒருவராக ஒன்றாகவே திரிமூர்த்தியாக இருக்கின்றார் என்பதை 'அரிஹரனாக' உருவகப்படுத்தி அங்கீகரித்துள்ளனர்.

30. அர்த்தநாரீஸ்வரர்

பரிசுத்த ஆவியானவர் கடவுளோடேயே இருக்கிறார், அவர் இறைவனுக்குள் இருக்கும் ஒர் அம்சம், அவர் இறைவனே என்பதை ஏற்றுக் கொண்ட சைவர்கள் பரிசுத்த ஆவியை பெண் பாலாக, சக்தியாக கடவுளோடு, சிவனோடு இருப்பதினால், அவர்கள் இருவரையும் ஒருவராக்கி அர்த்தநாரீஸ்வரராக

உருவகப்படுத்தி சிறப்பித்துள்ளனர். அர்த்த–பாதி, நாரி–பெண், ஈஸ்வர்–கடவுள். அர்த்தநாரீஸ்வரர் என்பது தன் உடம்பின் பாதியை பெண்ணாகக் கொண்ட கடவுள். இடப்பாகம் பெண்ணாகவும், வலப்பாகம் ஆணாகவும் இருக்கும் தெய்வம். தேவன் முதல் மனுஷியாகிய ஏவாளை ஆதாமின் இடப்பாக விலாவிலிருந்து ஒரு எலும்பை எடுத்து உருவாக்கினார் என்ற சத்தியத்தை ஏற்று சைவத்தில் சக்திக்கு இடப்பாகத்தை அளித்து சிவனும் சக்தியும், 'சிவசக்தி'யாக இருக்கின்றனர். பிதாவும் பரிசுத்த ஆவியும் ஒன்றாக இருக்கின்றனர் என்பதை அர்த்தநாரீஸ்வரராக சித்தரிக்கின்றனர்.

31. புத்தமதத்தில் 'திரிகாயா'

புத்தமதத்திலும் கிறிஸ்தவத்தின் திரியேக மூவொருமை கடவுட் கொள்கையை ஏற்றுக் கொண்டு பிதாவாகிய கடவுளை புத்தரின் அறத்திருமேனி (தர்மகாயா)யாகவும், குமாரனாகிய இயேசுவை படைக்கப்பட்ட திருமேனி (நிர்மாணகாயா) யாகவும், தூய ஆவியை இன்பத் திருமேனியாக (சம்போக காயா) ஏற்றுக் கொண்ட போதிலும், இம்மூவரும் ஒருவரே என்பதைக் காட்ட முத்திருமேனியாக 'திரிகாயா' என அழைத்து அங்கீகரித்துள்ளனர்.

32. போதி சத்துவர்

புத்த மதத்தின் போதி சத்துவர் என்ற கோட்பாடு இயேசு கிறிஸ்துவின் மீட்பு செயலை, இரட்சிப்பையே விளக்குகிறது. பாவத்தில் விழுந்து போன ஜனங்களின் பாவ ஈடேற்றத்திற்காக அவர்களின் பாடுகளையும், பாவத்தையும், சாபத்தையும் தாமே ஏற்றுக் கொண்டு பாவ விமோசனத்திற்காக தம்மையே அர்ப்பணித்தார் என்பதையே போதி சத்துவமும் விளக்குகிறது. அது மட்டுமல்ல இயேசு கிறிஸ்து மனித உடல் உறவின் மூலமாகப் பிறவாமல், பரிசுத்த ஆவியின் வல்லமையினால் ஒரு கன்னியின் வயிற்றில் அவதரித்தார் என்பதை ஏற்றுக் கொண்டு போதி சத்துவரையும் ஆண்–பெண் உறவினால் பிறவாத தெய்வீகப் பிறப்பை உடையவராக சித்தரிக்கப்படுகிறார். (தோமா வழி ஆதி இந்தியக் கிறிஸ்தவம் – முனைவர் யா.தா.பாஸ்கரதாஸ் –பக் 16).

33. சைவ வைணவப் பாடல்களில் திரியேகம்

ஒருவராக இருக்கின்ற கடவுளே மூவராக அதாவது மூவொருவராக விளங்குகிறார் என்பதை சைவ வைணவத் திருப்பாடல்கள் வரிந்து கட்டிக் கொண்டு பாடி சிறப்பிக்கின்றன.

'ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க' – திருவாசகம் சிவ. 5

'மூவராகிய மூர்த்தியை ..' – நம்மாழ்வார் திருவாய் 3–6–2

'உடம்பு உருவில் மூன்றொன்றாய் மூர்த்தி வேறாய் உலகுய்ய நின்றவன்'
– திருவாய் 1–9–1

'யாவருமா யாவையுமா யெழில் வேதப் பொருள்களுமாய்
மூவருமாய் முதலாய மூர்த்தி' – திருமங்கை 4–1–2

'தன்னாலே தன்னுருவம் பயந்த தானாய்த்
தயங்கொளி சேர் மூவுலகும் தானாய் வானாய்த்
தன்னாலே தன்னுருவில் மூர்த்தி மூன்றாய்த்
தானாய னாயினான் சுரனென் றுய்வீர்'
– திருமங்கை 6–6–6

'அருவமோ உருவாரூபம் ஆனதோ அன்றி நின்ற
உருவமோ உரைக்கும் கர்த்தா வடிவெனக் குணர்திங் கென்னின்
அருவமும் உருவா ரூபம் ஆனதும் அன்றி நின்ற
உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக்குள்ளாமே'
– சிவஞான சித்தியார்138

இப்படி ஒருவர் மூவராகவும், மூவரும் ஒருவராகவுமே இருக்கின்றனர் என்பதை சுட்டிக் காட்ட எத்தனையோ பாடல்களை கிறிஸ்வத்தின் மூவொருமைக் கடவுட் கொள்கையை ஏற்றுக் கொண்ட சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் ஊண் உருகி, நெக்குருகிப் பாடியுள்ளனர்.

34. எல்லோரா குகைகளில் திரியேக ஓவியம், சிலைகள்

கடவுளின் மூன்று ஆள் தத்துவத்தை ஏற்று மூவருக்கும் தனித்தனியாக மூன்று பெயர்கள் இருந்த போதிலும் அவர்கள் அனைவரும் ஒருவரே, கடவுள் ஒருவரே என்பதை விளக்க மூன்று தலைகள் ஒரு உடம்பு என சிவன் உருவச் சிலைகளை, சிவன், சக்தி, குமரக் கடவுளாகவும், சிவன், விஷ்ணு, பிரம்மாவை ஒருவராகவும், சிலைகளாக, ஓவியங்களாக எல்லோரா, எலிபெண்டாவிலும், கற்சிலைகளாக மாமல்லபுரத்திலும், மற்றும் பல திருக்கோயில்களிலும் இருப்பதைக் காணலாம்.

35. பிரம்ம சூத்திரத்தில் திரியேக திரித்துவம்

பிரம்ம சூத்திரத்தை ஆராயும் போது திரித்துவ மூவொருமை தேவனை தனித்தனியாக போற்றிப் புகழ்கிறது என்றும், அதில் சொல்லப்படும் இலக்கணங்கள் யாவும் பரிசுத்த வேதாகமம் சுட்டிக் காட்டும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியையே குறிக்கிறது என முனைவர் பாஸ்கர தாஸ் தமது 'விவிலிய ஒளியில் பிரம்ம சூத்திரம்' என்ற நூலில் சுட்டிக் காட்டியுள்ளார். பிரம்ம சூத்திரம் திரியேக தேவனை தனித்தனியாக எப்படிப் போற்றிப் புகழ்கிறது எனப் பாருங்களேன்.

பரம்பொருளாகிய கடவுளை – பரப்பிரம்மன், ஜன்மாதி, ஜன்மாதாரம், பதி, யோனி, சத், அரூபி, பரம், ஆகாயலிங்கம் எனவும்,குமாரனாகிய இயேசுவை – அபரப்பிரம்மன், ரூபம், அபரம், ஒளி, ஈசுவரன், ஓம், ஒலி, அக்கரம் (வார்த்தை),

சத்தியப் பிரம்மன், ஜீவன் (பிராணா) எனவும்பரிசுத்த ஆவியானவரை – தகரப் பிரம்மன், பராபரம். அந்தர்யாமி, தகராகாயம், வைசவானரா, ஆனந்த மாயா என்றும் துதித்துக் குதித்து மகிமைப்படுத்துகிறது.

'மூவொரு கடவுள் என்னும் கோட்பாட்டை உருவாக்கி, இந்த உலகுக்குக் கொடுத்த பெருமை கிறிஸ்தவத்தையே சாரும்' என்ற மறை பொருள் சத்தியத்தை விளக்கிக் கூறி மகிமை சேர்த்திருக்கிறார் டாக்டர் மு.தெய்வ நாயகம் அவர்கள் (விவிலியம், திருக்குறள், சைவ சித்தாந்தம் – பக் 27).

36. தேவ நாமத்தைக் குறிக்கும் சொற்கள்

பரிசுத்த வேதாகமம் முதலில் எபிரேய மொழியில் எழுதப்பட்டது. இந்த மொழியில் இறைவன் 'யா' என்று குறிக்கப்பட்டு இருக்கிறார். இதற்கு 'என்றும் இருப்பவர்' 'நிலைத்திருப்பவர்', 'ஒப்பற்றவராய் இருப்பவர்' எனப் பொருள். 'யா' என்று எபிரேய மொழியில் உள்ள சொல் தமிழிலில் 'ஐயா' என்று தெய்வத்தைக் குறிக்கும் சொல்லாக 'முருகய்யா, வேலய்யா, குமரய்யா, கந்தையா, பாலைய்யா' என வழங்கப்படுகிறது. அது போல 'அப்பா' என்கிற சொல் எபிரேயத்திலும் அதன் சகோதர மொழியாகிய அராமியிலும் இறைவன், தகப்பன் ஆகியோரைக் குறிக்கும் ஒரு சொல்லாக இருக்கிறது. தமிழில் இறைவனையும், தகப்பனையும் அழைக்கும் சொல்லாக 'அப்பா' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

பிரம்ம சூத்திரமும் பரம் பொருளாகிய இறைவனை எப்படிப் போற்றித் துதிக்கிறது எனப் பாருங்கள்

ஜன்மாதி (1.1.2)	– உலகத் தோற்றத்திற்கு அவரே மூலகாரணர்
யோனி (1.2.27)	– அவரே உலகைப் படைத்தவர் (கர்த்தர்)
நிர்மாதாரம் (3.2.2)	– அவரே உலக உருவாக்கத்திற்கு ஆதாரமானவர்
சுயம் (1.3.1)	– தோற்ற ஒடுக்கமற்றவர்
பரம் (1.2.21)	– எல்லாவற்றிற்கும் மேலானவர்
பதி (1.3.43)	– அவரே தலைவர்
மகத் (1.4.7)	– அவரை விடப் பெரியது ஒன்றுமே இல்லை
பிரகிருதி	– அவர் உலகப் படைப்பின் முதற்காரணர் மட்டுமல்லர் நிமித்த காரணரும் அவரே.
பரிணாமத்(1.4.26)	– படைத்த பிறகு பரிணாம வளர்ச்சியில் தன்னை ஈடுபத்தியவர்
சர்வ வேதா (2.1.30)	– சர்வ வல்லமையுள்ள தேவன்
அரூபி (3.2.14)	– உருவமற்றவர்

சத் (2.3.9) – என்றுமுள்ளவர்

சர்வகதம் (3.2.37) – எங்கும் நிறைந்தவர்

அத்தா (1.2.9) – உலகம் அவரில் ஒடுங்குகிறது

உலகப் பிறப்பிற்கெல்லாம் மூல காரணம் எதுவோ அதுவே பிரம்மா (1.1.2) என்று பிரம்ம சூத்திரம் இலக்கணம் வகுத்துக் கூறுகிறது. பரிசுத்த வேதாகமும் ஆதியாகமத்தில் உலகப் படைப்பின் வரலாற்றைக் கூறி அதற்கு மூல காரணராகிய தேவனை தந்தையாகிய கடவுள் எனக் குறிக்கிறது. இயேசுவும் கடவுளைத் 'தந்தையே' என்றே அழைத்தார். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும் அனைவருமே கடவுளின் பிள்ளைகள் ஆகின்றனர் என்று யோவான் 1:12 ல் வேதாகமம் கூறுகிறது.

37. பிரபஞ்சத்தை சிருஷ்டித்த வார்த்தை

'ஓம்' என்ற வார்த்தை தமிழில் 'ஆம்' என்பதையே குறிக்கும். 'போவோம், வருவோம், செய்வோம் என்றால் 'ஆம் செய்வோம்' என்பதையே 'அப்படியே ஆகக்கடவது' என ஆம், ஆமேன், ஓம் எனக் கூறப்படுகிறது. ஓம் என்பதை முனை மந்திரமாக அல்லது பிரணவ மந்திரமாக, ஓம்கார நாதமாக (ஒலியாக, தொனியாக, வார்த்தையாக) இருப்பதாக வேதங்கள் கூறுகின்றன. '***ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனாக இருந்தது***' என ஆதியாகமம் கூறுவதையும், '***அந்த வார்த்தையே மாம்சமாகியது*** (மனிதப் பிறவியாகியது)' '***அவருடைய நாமம் வார்த்தை என்பதே***' என வெளிப்படுத்தின விசேஷம் 19:13ல் கூறுவதையே 'ஓம் என்ற ஓம்காரத்திலிருந்தே (வார்த்தையிலிருந்தே) இப்பிரபஞ்சம் உண்டாயிற்று' என சைவமும் வைணமும் கூறுகிறது.

38. வினை தீர்க்கும் விநாயகர்

மனிதனாக வந்த கடவுள் மரித்து பின் உயிர் பெற்றார் என்பதை விளக்கும் வண்ணமாகவே பிள்ளையார் கொல்லப்பட்டு பின் உயிர்ப்பிக்கப்படுகிறார். பாவ வினை தீர்க்கும் விநாயகராக, விக்கினங்களைப் போக்கும் விக்னேஷ்வரராக, ஓம் எனும் பிரணவ நாத வடிவமாக, உருவாக, இந்த பிரபஞ்சத்தைப் படைத்த ஒலியாக, முழு முதற் பொருளாக, வார்த்தையாக, பரப்பிரம்மமாக, கணநாதனாக, கணபதியாக அவரை சித்தரிக்கின்றனர். அப்படி சித்தரிக்கபடுபவர் மனிதனாக அவதரித்து உயிர்த்தெழுந்த இயேசுவையே தவிர வேறு ஒருவரை அல்ல.

இதையே ஔவையார் 'விநாயகர் அகவலில்' கடவுள் மனிதனாகி நிழலாக இவ்வுலகில் வந்து, மனிதர்களின் கொடிய பாவ வினையை தீர்த்தார் என அழகாகப் பாடுகிறார்.

'குருவடி வாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறம் இது பொருள் என
வாடாவகை தான் மகிழ்ந்து எனக்கு அருளிக்
கோடு ஆயுதத்தால் கொடுவினை களைந்தே'

(கோடு என்றால் மரக் கொம்பு – மரக் கொம்பினால் ஆன ஆயுதம் – சிலுவை). சிலுவையில் மரித்த தெய்வம் இயேசு கிறிஸ்து ஒருவரே. திருக்குறளில் இவ்வாயுதம் 'பொறி' என்னும் சொல்லால் குறிக்கப்படுகிறது – திருக்குறள் 6).

'கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்' என திருவுந்தியார் 3ம் பாடல் கூறுகிறது. அதாவது கண்டமாகிய சாவைக் கொண்டு (தம்மையே பலியாக்கி) கருமமாகிய நம் வினையை முடித்தவர் என சைவ சித்தாந்தம் கூறுகிறது.

39. அழுக்குருண்டைப் பிள்ளையார்

பிள்ளையாருக்கு அழுக்கு உருண்டைப் பிள்ளையார் என்று எப்படிப் பெயர் வந்தது தெரியுமா? அவரைப் பற்றிய கதையில் அவர் தன் தாயின் அழுக்கினால் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதற்கு காரணம் பாவ அழுக்காகிய சகசமயத்தில் (ஜென்ம பாவம்) இருக்கின்ற நம்மை மீட்பதற்காக கடவுள் தம்மைத் தாமே பாவம் நிறைந்த இந்த மனித நிலைக்கு உட்படுத்தினார் என சைவ புராணம் விளக்குகிறது. '***மனிதர்கள் யாவரும் கடவுளின் நீதியுள்ள பிள்ளையாக ஆகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காக பாவம் ஆக்கினார்***' என 2 கொரிந்தியர் 5:21 கூறுகிறது. நாம் அனைவருமே பாவத்தில் தான் பிறந்தோம் என்பதை '***என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்***' என சங்கீதக்காரன் 51:5 லே கூறுகிறான்.

40. மரித்து உயிர்த்தெழுந்த பிள்ளையார்

பிள்ளையார் கதையில் சிவனே பிள்ளையாரின் தலையை வெட்டியதாகவும், பின்பு யானையின் தலையை ஒட்டியதாகவும் கூறப்படுகிறது. அதற்கு அதில் ஒரு தகுதியில்லாத காரணமும் கூறப்படுகிறது. ஆனால் அதற்குரிய உண்மையான காரணம் – மக்களை விடுவிப்பதற்காக மனிதனாக அவதரித்த கடவுள் தன் தந்தையாரின் திட்டப்படியே இந்த உலகில் குருவாக வந்து, பலியாகி மீண்டும் உயிர்த்தெழுந்தார் என்பதையே புராணக் கதையின் மூலமாக தந்தையே பிள்ளையின் தலையை வெட்டி பிறகு ஒட்டுவதாக கூறப்படுகிறது. இதை பரிசுத்த வேதாகமும் '***என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக் கொள்வதில்லை. நானாகவே அதைக் கொடுக்கிறேன். உயிரைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு. அதை மீண்டும் பெற்றுக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. என் தந்தையின் கட்டளைப்படியே நான் இப்படிச் செய்கிறேன்***' என யோவான் 10:18லிலும்,

'...இறந்த அவரை (இயேசு கிறிஸ்துவை) மரித்தோரிலிருந்து எழுப்பின பிதாவாகிய தேவனாலும்...' என கலாத்தியர் 1:1 லிலும் கூறப்பட்டு இருக்கிறது.

41. வேழமுகத்தோனாக மறுரூபம் ஆக்கப்பட்ட பிள்ளையார்

அவருக்கு ஏன் யானைத் தலை? அவர் பலியான போதிலும் அவர் அப்படியே அழிந்து விடவில்லை. அவர் மீண்டும் உயிர்த்தெழுந்தார் என்பதை விளக்கவே அவருக்கு யானைத்தலை ஒட்டப்பட்டது. உயிர்த்தெழுவதற்கு முன்பு இருந்த உடல் வேறு, உயிர்த்தெழுந்த பின்பு மறு ரூபமாக்கப்படுகின்ற உடல் வேறு. அது மகிமைக்குரிய உடல் என்பதை விளக்கவே விலங்குகளிலேயே மிகவும் பெரியதும், சிறப்பானதாகக் கருதப்படும் யானையின் தலை ஒட்டப்படுகிறது. *'கடைசி எக்காளம் தொனிக்கும். ஒரு இமைப் பொழுதிலே நாம் எல்லோரும் மறுரூபம் ஆக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும். அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாக எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபம் ஆக்கப்படுவோம்'* என 1 கொரிந்தியர் 15:51,52 கூறுகிறதே.

42. பிள்ளையாரை தண்ணீரில் கரைத்தல்

பிள்ளையார் ஊர்வலத்தின் இறுதியில் பிள்ளையாரை ஏன் தண்ணீரில் கரைக்கின்றார்கள் தெரியுமா? மக்களை பாவக் கறையிலிருந்து விடுவிப்பதற்காக கடவுள் தூய ஆவியினால் மனிதனாக அவதரித்ததாக பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. தூய ஆவியை மழை என்றும், அருள் மாரி என்றும், தேற்றரவாளன் என்றும் திருமறை கூறுகின்றது. *'தாகமுள்ளவன் மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின் மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்...'* என ஏசாயா 44:3 லிலும், *'இதோ இறுதி நாட்களில் எல்லோர் மீதும் என் ஆவியைப் பொழிவேன்'* என அப்போஸ்தலர் 2:17லிலும் ஆவியானவர் செய்வார் என அவரை வேதம் சிறப்பித்துக் கூறுகிறது. தூய ஆவியினால் உற்பவித்து அவதரித்த கடவுளின் பிள்ளையாகிய அவர் திரும்பவும் தூய ஆவியினிடத்திற்கே சென்று நமக்கு அவரை தேற்றரவாளனாக அனுப்புகிறார் என்பதை *'தந்தை அனைத்தையும் தம் கையில் ஒப்படைத்துள்ளார் என்பதையும், தாம் கடவுளிடமிருந்து வந்தது போல அவரிடத்திற்கே திரும்பச் செல்ல வேண்டும் என்பதையும் அறிந்தவராய்..'* என யோவான் 13:3லிலும், *'நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்'* என யோவான் 16:7லிலேயும் கூறப்பட்டுள்ளது. அவதாரம் எடுக்கக் காரணமாய் இருந்தவரிடமே திரும்பச் சென்று அவரையே நம்முடைய தேற்றரவாளனாக அனுப்புவதை விளக்குவதற்காகவே பிள்ளையாரின் இறுதி ஊர்வலத்தில் அவர் தூய ஆவியின் உருவகமாகிய தண்ணீரில் கரைக்கப்படுகிறார். தண்ணீரில் பிள்ளையார் கரைக்கப்படுவதின் தாத்பரியமே இது தான்.

43. சைவம் வைணவத்தில் குமாரனாகிய இயேசு கிறிஸ்து நான்கு கோணங்களில்

குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை சைவமும், வைணமும் நான்கு கோணங்களில் விளக்குகின்றன என டாக்டர் மு.தெய்வநாயகம், 'விவிலியம் திருக்குறள் சைவ சித்தாந்தம் –ஒப்பாய்வு' பக் 130–137 ல் கூறியுள்ளார்.

(அ) சாத்தானை அல்லது தீமையை வென்றவர் என்பதை விளக்கும்படியாக இயேசுவைக் குமரக்கடவுளாகவும்,

(ஆ) இறந்து உயிர்த்தெழுந்தவர் என்பதைக் கூறும்படியாக அவரைப் பிள்ளையாராகவும்,

(இ) உலகப் படைப்புக்கு காரணமானவர் என்பதை சுட்டிக் காட்டி விளக்கும் விதமாக அவரை பிரம்மன் என்றும்,

(ஈ) சூரியனைப் போல ஒளிமயமானவர், அவர் உலகத்தின் ஒளி என்று விளக்கும்படியாக அவரை ஐயப்பனாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளார்.

44. சூரபத்மனை வென்ற குமரக் கடவுளாக குமாரன் இயேசு

இயேசு கிறிஸ்து தீமை என்னும் சாத்தானை வென்றார் என்பதை முருகன் சூரபத்மனை வென்றார் என உருவகப்படுத்தியுள்ளனர். இயேசு சாத்தானை அழிக்கவில்லை. அவனை வென்றார். அதே போல முருகன் சூரபத்மனைக் கொல்லாமல் அவனை சேவலாகவும், மயிலாகவும் ஆக்கி ஆட்கொண்டார். முருகன் மரமாகி நின்ற சூரபத்மனை வேல் கொண்டு இரண்டாகப் பிளந்து வென்றார். தீமையை வெல்லும் அந்த வேலையும் அவர் சக்தியிடமிருந்து (பரிசுத்த ஆவியிடமிருந்து – சைவர்களின் பார்வையில் தாயாகிய ஓம் சக்தியிடமிருந்து) பெற்றுக் கொண்டார் என புராணம் கூறுகிறது. மயில் கால்களின் கீழ்உள்ள பாம்பு சாத்தானை, தீமையை வென்ற நிலையைக் குறிக்கிறது. பரிசுத்த வேதாகமம் நம்மை மணவாட்டி என்றும் இயேசுவை நம்மைத் தேடி வரும் மணவாளனாகவும் சித்தரிக்கிறது. மணவாளன் மணவாட்டியைத் தேடி வருவது போல் இயேசு கிறிஸ்து நமக்காக இப்பூமிக்கு வந்தார். மனிதனாகப் பிறந்தார். மீண்டும் அழைத்துப் போக வருவேன் எனக் கூறியிருக்கிறார்.

45. தேடி வந்த தெய்வம்

முருகன் வள்ளியைத் தேடி அவளின் இருப்பிடத்திற்கு அவரே சென்றார். வள்ளி ஒரு தாழ்ந்த நிலையில் உள்ள ஒரு குறத்தி. அவளைத் தேடி குமரக் கடவுள் சென்றார். அதே போல பாவத்தில் விழுந்து தாழ்ந்த நிலையில் இருக்கும் நம்மைத் தேடி இயேசு இந்த உலகத்திற்கு வந்தார் என்பதை உருவகப்படுத்திய தையே ஸ்கந்த புராணத்தில் எழுதியுள்ளனர்.

46. முருகனுக்கு ஏன் 12 கரங்கள்?

முருகனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தும் அவருக்கு குழந்தைகள் கிடையாது. முருகனுக்கு இன்னொரு பெயர் 'கோவணத்தாண்டி'. இந்தப் பெயர் அவரின் துறவு நிலையையும், கூறப்பட்டுள்ள இரண்டு மனைவிகளுமே ஒரு உருவகமே அன்றி அது உண்மை அல்ல என்றும் உணர்த்துகிறது. முருகனுக்கு பன்னிரண்டு கைகள் உள்ளது போல புராணங்கள் கூறுகிறது. கரம் பன்னிரெண்டானாலும் கால்கள் இரண்டு மட்டுமே. 12 கைகள் என்பதுவும் ஒரு உருவகமே. அது இயேசு கிறிஸ்துவின் 12 சீஷர்களைக் குறிப்பதற்கே காட்டப்பட்டுள்ளன. 12 சீஷர்கள் மாத்திரமல்ல. அவரை ஏற்றுக் கொள்ளும் சீஷர்கள் ஒவ்வொருவருமே அவர் நடந்தபடியே, அவர் நடந்த பாதையிலேயே, வழிமுறைகளிலேயே நாமும் வாழ வேண்டும் என்பதற்காகவே இரண்டு கால்கள் மாத்திரமே காட்டப்படுகின்றன.

தெய்வ யானை யூத திருச்சபைக்கு அடையாளமாகவும், வள்ளி புற ஜாதி திருச்சபைகளையும் குறிக்கிறது. தாழ்ந்த புற ஜாதியாகக் கருதப்பட்ட சமாரியரை இயேசு கிறிஸ்து தேடிச் சென்று (யோவான் 4ம் அதிகாரம்) அவர்களோடு தங்கி, உரையாடி, நற்செய்தியைக் கூறி மணவாட்டி திருச்சபையாக சேர்த்துக் கொண்டார் என யோவான் 4:42ல் பார்க்கிறோம். அதே போல நம் அனைவரையுமே அவர் மணவாட்டியாக எண்ணி அன்பைப் பொழிந்து ஆட்கொள்ளும் நிலை இங்கு கதை வடிவில் கூறப்படுகிறது.

47. காவடி எடுத்து கர்த்தரை நினைவு கூறுதல்

காவடி –காவு தடி = பலிக்குரிய தடி (காவடி = காவு + தடி, காவு – பலி). மனிதனாக வந்த கடவுள் மரத்தில் பலியானதின் அடையாளமாக, மரத்தால் ஆன சாவுக்கு (காவு) உரிய தடியாகிய காவடியை (காவு + தடி= காவடி) முருக பக்தர்கள் எடுத்துச் செல்வதை இன்றளவும் காணலாம். இயேசு கிறிஸ்து கொல்கதா மலைக்கு சிலுவையின் குறுந்தடியை சுமந்து கொண்டு சென்றதை நினைவு கூறும்படியாக பக்தர்கள் காவடி எடுத்துச் செல்கின்றனர். ***'என்னைப் பின்பற்ற விரும்புகிறவன் தன் சிலுவையை சுமந்து கொண்டு என் பின்னால் வரக் கடவன்'*** என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறாரே. இயேசு கிறிஸ்து சுமந்து கொண்டு சென்றது முழுச் சிலுவையை அல்ல. முழுச் சிலுவை மிகவும் கனமான ஒன்று. ஒருவரால் தூக்கி செல்வது மிகவும் கடினம். அவர் தூக்கி சென்றது குறுக்குத் தடியை மாத்திரமே. மாற்கு 18;21, மேத்யூ 27:32ஐ ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ள The New World Translation அதை 'சித்திரவதை செய்யும் ஒரு தடி' (Tortore stake) என்றே கூறுகிறது.

48. சிருஷ்டிப்பின் தெய்வம் பிரம்மாவாக இயேசு கிறிஸ்து

வைஷ்ணவம் இயேசுவை பிரம்மாவாக ஏற்றுக் கொண்டு அவரைப் படைப்பின் கடவுள் என்றே குறிப்பிடுகிறது. இது ***'சகலமும் அவர் மூலமாகவே***

உண்டாயிற்று. உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை' என யோவான் 1:3ல் சொல்லப்பட்டுள்ள கிறிஸ்துவின் இப்பிரபஞ்ச சிருஷ்டிப்பு நிலையை விளக்குவதாகவே உள்ளது.

49. பிராண லிங்கமாக இயேசு கிறிஸ்து

கடவுளை ஈஸ்வரன் என்று தமிழில் அழைக்கிறோம். இந்தியில் பரமேஷ்வர் என அழைக்கின்றனர். கிரேக்க மொழியில் 'ஈஸோயஸ்' (Lesous) என்ற வார்த்தையே மருவி ஜீஸஸ் (Jesus) என ஆகியது. அந்த வார்த்தையே பின்பு லத்தீன் மொழியில் 'யெகோஷீவா'... ஜோஷீவா (Joshua) என மாறியது. அந்த வார்த்தையே எபிரேய மொழியில் 'யேஷீவா' (Yeshua) என வழங்கி அதுவே நமது இந்திய மொழியில் ஈஸ்வரன், ஈஷ்வர் என திரிந்திருக்கிறது என Universal Dictionary, Readers' Digest Assn. Inc. London 1988 Page 826 கூறுகிறது.

இயேசு கிறிஸ்துவை பேதுரு 'உயிருள்ள கல்' என 1 பேதுரு 2:4ல் குறிப்பிடுவதைப் போல பிரம்ம சூத்திரமும் பிரம்மனை (இயேசுவை) 'பிராண லிங்கம்' என 1.1.30ல் குறிப்பிடுகிறது

50. பிரம்ம சூத்திரத்தில் கிறிஸ்தவம்

'விவிலிய ஒளியில் பிரம்ம சூத்திரம்' என்ற நூலில் பிரம்ம சூத்திரத்தை குறித்து மிக அழகாக விளக்கம் அளித்துள்ளார் டாக்டர் யா.தா. பாஸ்கரதாஸ் அவர்கள். பல ஆண்டுகள் இந்து மத வேதங்கள், வேதாந்தங்கள், புராணங்கள், உபநிஷத்துக்களை ஆராய்ந்து 'தோமா வழி ஆதி இந்தியக் கிறிஸ்தவம்', Dravidian Philosophy' 'Trinity in Indian thought' என பல ஆராய்ச்சி நூல்களையும் எழுதியுள்ளார். இந்த நூல்கள் அனைத்தையும் NILT - National Institute of Leadership Training, 508 22nd street, Periyar Nagar, Korattur, Chennai 600 080 Tel. No.044–26871563) வெளியிட்டு இருக்கிறது. இந்த நூல்களையும், NILT வெளியிட்டுள்ள மற்ற நூல்களையும் வாங்கிப் படியுங்கள். வேதங்களைப் பற்றிய வெளிச்சம் உங்களுக்கு கிடைக்கும். நான் எடுத்துக் கொண்டுள்ள சப்ஜெக்ட்டுக்கு ஏற்றபடி மிக சுருக்கமாகவே, தேவையான அளவே அவர் அளித்துள்ள விளக்கத்திலிருந்து எடுத்து அங்காங்கே இந்த நூலில் சொருகி உள்ளேன். முழுமையான விளக்கம் பெற அவர் எழுதியுள்ள நூல்களைப் படியுங்கள்.

உபநிஷத்துக்களை வேதாந்தம் என்று சொல்வார்கள். உபநிஷத்துக்களின் சாரமாக, சத்தாக, இலக்கணமாக இருப்பதே பிரம்ம சூத்திரம். பரம் பொருளான இறைவனைப் பற்றியும், ஆன்மா, அதன் விடுதலை, முக்தி நிலை இவைகளைப் பற்றி மிகத் தெளிவாகவும், சுருக்கமாகவும், நுட்பமாகவும் எடுத்துரைக்கும் இந்த நூல் சமஸ்கிருதத்தில் திராவிடரான வேத வியாசரால் எழுதப்பட்டது. சரீரத்தில் வந்த பிரம்மனைப் பற்றி (இயேசு) சிலாகித்துச் சொல்வதால் இதை

'சாரீரக சூத்திரம்' என்றும் கூறுவார்கள். வேதாந்தத்திற்கு மூலமாக கருதப்படும் மூன்று நூல்களில் பிரம்ம சூத்திரமும் ஒன்று.

நானே பலியாயிருக்கிறேன்

இந்த உலகமும், பஞ்ச பூதங்களும், இந்தப் பேரண்டத்தில் உள்ள அனைத்து ஜீவராசிகளும் கடவுளாலேயே சிருஷ்டிக்கப்பட்டது என பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்ட கருத்தையே பிரம்ம சூத்திரமும் கூறுகிறது (பி. சூ.2:3, 2–12). வேதங்கள் எல்லாம் பலி கொடுக்கும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கும் போது வேதாந்தமோ (வேதம் + அந்தம் = வேதாந்தம். வேதத்தை அந்தப்படுத்தி, முடிவுபடுத்தி சத்தியத்தை கூறுவதே வேதாந்தம்) அதற்கு மாறுபட்ட 'பலி நிறைவேற்ற (நிறைவேறிய) கோட்பாட்டை' அதாவது கடவுள் (இயேசு கிறிஸ்து) மனிதனாகப் பிறந்து பலியாகி மீட்பு அளித்ததையும், இனி பலி ஏதும் கொடுக்கத் தேவை இல்லை என்பதையும் 'அத ஏவ அக்ரீந்த நாத்ய நபேஷா' என்று கூறி தெளிவுபடுத்துகிறது. இதை 'புருசா பலியாகயிருக்கிறார்' என சாந்தோக்கிய உபநிஷத் 3.16.1ம், 'பிரஜாபதி பலியாய் இருக்கிறார்' என சதபத பிரமாணம் 1.13.1.15ம் கூறுகிறது. கீதையில் 8:4ல் 'இனி ஈண்டு தேகத்திலுள்ள நானே பலியாகிறேன்' எனவும், பிருக தாரணியக உபநிஷத்தில் 'நானே பலியாயிருக்கிறேன்' என 1.5.17லும் சொல்லப்பட்டது எல்லாமே இயேசு கிறிஸ்து பலியாகியதையே குறிக்கிறது. வேறு எந்த தெய்வமும் பலியாகலையே. இந்து மத வேதங்கள் எதுவும் எந்த தெய்வம், யாருக்காக, எப்போது பலியாகியிருக்கிறது என்று சொல்லவில்லையே.

இந்த உலகத்திற்கு ஒளியாக

இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கே ஒளியாக வந்தார். இதை அவரே '***நான் இந்த உலகத்திற்கு ஒளியாக வந்தேன்***' என யோவான் 12;46ல் சொல்லியிருக்கிறார். யோவான் '***அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனிதருக்கு ஒளியாக இருந்தது***' என 1:4ல் சொல்கிறார். இதையே பிரம்ம சூத்திரம் பிரம்மன் (இயேசு) ஜோதியாக, ஒளியாக இருக்கிறார் என பி.சூ. 1.1.24லிலும், 1.3.40லிலும் சொல்கிறது. அஞ்ஞான இருளில், பாவ இருளில் வாழும் மக்களை வெளிச்சத்தைக் கண்டு கொள்ளும் படியாக இயேசு இந்த உலகத்திற்கு வந்தார் என்பதை பிரம்ம சூத்திரம் சுட்டிக் காட்டுகிறது.

சத்தியப் பிரம்மன் இயேசு

சத்தியத்திற்காக சத்தியமாக வாழ்ந்தவர் இயேசு கிறிஸ்து. அதனால் அவர் '*நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்*' என யோவான் 14;6லிலும், '***சத்தியத்தைக் குறித்து (மெய்யான கடவுளை) சாட்சி கொடுக்க நான் பிறந்தேன். இதற்காகவே இந்த உலகத்திற்கு வந்தேன்***' என யோவான் 18:37லிலும் இயேசு சொன்னதினாலேயே பிரம்மனை

(இயேசுவை) 'சத்தியப் பிரம்மன்' என உபநிஷத்துக்களும், 'எது ஹிருதயமோ (புத்தியோ) அது தான் பிரஜாபதி. அது தான் பிரம்மன். அது தான் எல்லாமே' எனவும், 'அந்த ஹ்ருதயப் பிரம்மன் சத்தியப் பிரம்மமாகவே இருந்தது' என பிருகதாரணியக உபநிஷத்து 5.3.1லிலும், 15.4.1லிலும் சொல்கிறது. பிரம்ம சூத்திரம் அவரை 'சத்யா' என்றும் (3.3.38), சாந்தோக்கிய உபநிஷத் அவரை 'சத்யஸ்ய சத்யமிதி' என்று 2.1.20லிலும் அழைத்துப் புகழ்கிறது. பிரம்ம சூத்திரம் இன்னும் நெத்தியடியாக 'இதுவே பிரம்மம். இந்த பிரம்மத்தின் பெயரே சத்தியம்' என 8.3.4ல் கூறி உயர்த்துகிறது. அப்படி சத்திய பிம்பமாக இருப்பவர் என்று சுட்டிக் காட்டுவது இயேசு கிறிஸ்து ஒருவரையே.

உள்ளத்தில் உறையும் உன்னத தேவன்

கடவுள் புற உலகை மட்டுமல்ல ஒவ்வொருத்தர் உள்ளத்திலும் அவர் வீற்றிருந்து நம்மை வழி நடத்தி ஆளுகை செய்கிறார் என்பதை 'அந்தர்யாமி யத்தை வாதிஷு' என 1.2.18லிலும், 'உள்ளே இருப்பவர் அவரே' என்ற 1.2.13லிலும் பிரம்ம சூத்திரம் அவரை சிலாகித்து நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது. நம் உள்ளத்தில் அவர் வாசம் பண்ணுகிறவர் ஆனபடியால் அவரை 'ஆகாய லிங்கம்', 'தகராகாசம்', 'சிற்றாகாசம்' என்றெல்லாம் துதித்து நாமாவளி செய்கின்றது. தகராகாசம் என்பது பிரம்மன் தங்கும் இடமாகிய உள்ளத் தாமரையைக் குறிக்கிறது. உன்னத தேவன் வாசம் செய்யும் இந்த சரீரத்தை 'பிரம்மாபுரம்' என்றும், உள்ளத்தை 'சிற்றம்பலம்' என்றும் சாந்தோக்கிய உபநிஷத்தும் 8.1.3.ல் கூறி இந்த உடலையும், உள்ளத்தையும் ஒரு கோயிலைப் போல புனிதமாக போற்றிப் பேணனும் என்று கூறுகிறது.

இறைவன் வாசம் செய்யும் இடம்

'உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் அவர் ஆண்டவராய் இருக்கிறபடியால் அவர் மனிதர்களின் கைகளினால் கட்டப்பட்ட கோயில்களில் வாசம் பண்ணுகிறதில்லை. அவர் குடியிருப்பது மனிதர்கள் கட்டிய கோயில்களில் அல்ல. அவர்கள் படைத்த விக்கிரஹங்களில் அல்ல. நமது உள்ளமாகிய கோவிலிலேயே அவர் வாசம் பண்ண விரும்புகிறார்' என அப்போஸ்தலர் 17:24ல் சொல்லப்பட்டுள்ளபடியே அவருக்கு 'வைசவானரா' என்னும் நாமத்தை பிரம்ம சூத்திரம் சூட்டுகிறது (1.2.24). சாதாரணமாக இப்பெயரை தீயை குறிப்பிடுவதற்குப் பயன்படுத்துவார்கள். ஆனால் இங்கு இது திரியேக தேவனாக இருக்கும் கடவுளை, பிரம்மனை, இயேசுவையே சுட்டிக் காட்டுகிறது.

நம்மில் வாசம் செய்யும் தூய ஆவியானவர்

நமக்குள்ளே பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுகிறார். ***'உங்களுக்குள்ளே வாசம் பண்ணும் ஆவியானவரை துக்கப்படுத்தாதிருங்கள்'***னு அதனாலேயே வேதாகமம் சொல்கிறது.

'அஹம் வைசவானரா' எனக் கண்ணன் கீதையில் சொல்வது நம் உள்ளத்தில் நெருப்பாக, அக்கினியாக இருக்கும் தூய ஆவியானவரையே. வேதாகமம் தூய ஆவியானவரை நெருப்பாகவே உருவகிக்கிறது. '***பெந்தகோஸ்தே நாளில் மேல் வீட்டு அறையில் இருந்த அனைவர் மேலும் நெருப்புப் போன்ற பிளவுண்ட நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்வதைக் கண்டார்கள்***' என அப்போஸ்தலர் 2:3ல் விளக்கப்பட்டுள்ளதே. ஆகவே 'வைசவானவரா' என குறிக்கப்படுகிறவர் நம் உள்ளத்தில் வாசம் பண்ணும் திரியேக தேவனில் ஒருவராகிய தூய ஆவியானவரையே!

தூய ஆவியானவர் நமக்குள்ளே வாசம் பண்ணுகிறார் என்பதை வேதாகமம் '***நீங்கள் தேவனுடைய ஆலயமாக இருக்கிறீர்கள் என்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாய் இருக்கிறார் என்றும் நீங்கள் அறியீர்களா?***' என 1கொரிந்தியர் 3:16ல் நம்மை நோக்கி கேட்கிறதே. இன்னும் அழுத்தம்திருத்தமாக '***உங்கள் சரீரமானது நீங்கள் தேவனிடமிருந்து பெற்றுக் கொண்டதும், பரிசுத்த ஆவியானவர் தங்கி இருக்கிற ஆலயமாக இருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்கள் அல்ல என்றும் அறியீர்களா?***' என்று 1 கொரிந்தியர் 6:19லிலும் நம்மை கேட்டு நம்மை திகைக்க வைக்கிறதே. இத்தனைக்கும் மேலாக ஒரு பெரிய போடாகப் போட்டு '***தேவனடைய ஆலயத்துக்கும் விக்கிரஹங்களுக்கும் சம்பந்தமேது? நீங்களே ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாக இருக்கிறீர்கள்***'னு II கொரிந்தியர் 6:16லிலும் சொல்லி, இருந்த கொஞ்ச நஞ்ச சந்தேகம், கேள்வி எல்லாத்தையும் துப்புரவா துடைச்சி எறிஞ்சுடுச்சே. பிரம்ம சூத்திரத்தை தொகுத்தும், வகுத்தும் அலசி ஆராய்ந்து பார்க்கும் போது அதில் சொல்லப்பட்டவைகள் அனைத்துமே பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாக இருக்கின்ற மூவொருமைத் தேவனாக இருக்கின்ற முழு முதற் கடவுளையும், அவரின் திரித்துவமாக விளங்கும் இயேசு கிறிஸ்துவையும், பரிசுத்த ஆவியானவரையும் குறித்ததே என்பதுவும் தெளிவாகும்.

மறுமையில் மகிமையின் சரீரம்

ஒருவர் இறந்த பிறகு அவருடைய பூத உடல் பஞ்ச பூதங்களோடு கலந்து விடுகிறது. ஆனால் மனிதனின் ஆத்துமா அழிவில்லாதது. அது மறுமைக்குரிய மகிமையான உடலைப் பெற்றுக் கொள்கிறது. அந்த ஆத்துமா மறுபடியும் பூமியில் பிறப்பது இல்லை. '***மனிதன் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத் தீர்ப்பு அடைவதுவும் மனிதர்க்கு விதிக்கப்பட்டு இருக்கிறது***' என எபிரேயர் 9:27ல் சொல்லப்பட்டு இருக்கிறது. '***அவர்கள் விண்ணகத் தூதர்களைப் போல இருப்பார்கள்***' என்று மத்தேயு 22:30ல் சொல்லப்பட்டதையும் '***இனி இவர்கள் சாக மாட்டார்கள் அவர்கள் வான தூதரைப் போல இருப்பார்கள்***' என லூக்கா 20:36ல் சொல்லப்பட்டுள்ளதையும் பிரம்ம சூத்திரம் 44:22ல் அப்படியே ஆமோதிக்கிறது.

இது சங்கரர், இராமானுஜர் போன்றவர்களின் பிறவிச் சுழற்சிக் கொள்கைகளையும், 'அஹம் பிரம்மாஸ்மி' அதாவது 'நானே கடவுள்' என்ற சங்கரரின் அத்துவைத கடவுள் மறுப்பு நாத்தீகக் கொள்கையையும் தூள் தூளாக தகர்த்தெறிகிறது. பிறவிச் சுழற்சிக் கொள்கையும், இந்த அத்துவைதக் கொள்கையும் ஜாதி ஏற்றத் தாழ்வுகளை நிலை நிறுத்தவும், வர்ணாஸ்மிருத மனுநீதி தர்மத்தை தொடர்ந்து கடைப்பிடித்து பிராமணன் பிறப்பால் உயர்ந்தவன், மற்றவர்கள் அனைவரும் தாழ்ந்தோர் என்ற ஜாதிக் கொள்கையை நிலைநாட்டிடவுமே அன்றி, வேறு எதற்காகவுமே இல்லை என வேத விற்பன்னர்கள் அனைவருமே ஒத்த கருத்துடையவர்களாகவே இருக்கின்றனர். கடவுள் தம்முடைய படைப்புக்குள்ளேயே இத்தனை பாகுபாடுகளை, உயர்வு தாழ்வுகளை, வேற்றுமைகளை உண்டாக்குவாரா? அப்படி செய்தவர்கள், செய்பவர்கள், செய்ய நினைப்பவர்கள் யாராக இருந்தாலும், அது அரசியல் நோக்கத்தோடு செய்யப்பட்டாலும், மதத்தின் பெயராலோ ஏதாவது அமைப்பின் பெயராலோ, இனத்தின் பெயராலோ, ஜாதியின் பெயராலோ செய்யப்பட்டாலும் அது தேவனுடைய படைப்பையே, சித்தத்தையே இழிவுபடுத்துவதாகவே இருக்கும்.

அனைவருக்கும் ஆன்மீக விடுதலை

இந்த உலகத்தில் பிறந்த எல்லாருமே ஆன்மீக விடுதலை பெறணும். ஒருத்தரும் கெட்டு நரகத்துக்கு போயிடக் கூடாதுங்கிற ஒரு உன்னதமான உயர்ந்த நோக்கத்தோடேயே இறைவனான இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில மனுஷனாப் பிறந்து நமது பாவங்களுக்காக, எந்தப் பாவமுமே செய்யாத அவர் பாவமாகி, பலியாகி நமக்கு ஒரு விடுதலையை வாங்கிக் கொடுத்தார். இதைத் தான் பரிசுத்த வேதாகமம் சொல்லுது. பரிசுத்த வேதாகமம் கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல. இந்த உலகத்தில பிறந்த, பிறக்கிற அனைத்து ஜாதி மக்களுக்குமே உரிய, சொந்தமான, கைக் கொள்ள வேண்டிய ஒரு பொதுவான அறநெறி நூல். மனிதர்களைப் படைத்த கடவுள் நாம எப்படி இருக்கணும், எதைச் செய்யலாம், எதைச் செய்யக் கூடாதுன்னு நாம வாழ வேண்டிய ஒரு வழியை தெள்ளத் தெளிவா காட்டுகிற, போதிக்கிற ஒரு நன்னூலே பரிசுத்த வேதாகமம்.

இந்தக் கொள்கைகளை உலகம் முழுக்க பரப்பி, மனுஷங்க உண்டாக்கின இந்த ஜாதி, மத, நிற பேதங்கள் எதுவும் இல்லாம எல்லாரையுமே மீட்டு பரலோக பிரஜைகளா மாத்தணுங்கிறதுக்காக முனைந்து நிற்பதே கிறிஸ்தவம். இது ஒரு மதமல்ல. வாழ வழிகாட்டும் ஒரு மார்க்கம் இது. நம்மைப் புடமிடும் ஒரு ஆன்மீகம். ஆன்மீகம் என்பது ஜாதி, சமய, தேச, மத, இன, மொழி, நிற எல்லைகள் எல்லாத்தையும் கடந்து மனுஷர்கள் எல்லாருக்கும் பொதுவாகத் திகழ்வது. இந்த உன்னதமான, உயர்ந்த ஆன்மீகக் கருத்துக்கைள 'மதம்'ங்கிற ஒரு குறுகிய கோட்டுக்குள்ளாற பாக்கும் போது அது அரசியலா மாறிடுது.

அரசியல் ஆன்மீகத்தில் கலக்கும் போது அதுல ஜாதி, மதம், சுயநலம், பொறாமை, ஏற்றத் தாழ்வுகள், வன்முறை, தீவிரவாதம், எதிர்ப்பு, மைனாரிட்டி, மெஜாரிட்டி போன்ற எல்லா தீவினை, பிரிவினை வாதங்கள் எழும்பி, சமூக, தேச, மனித நேய ஒற்றுமையை அடியோட குழி தோண்டி புதைச்சிடும். அது தான் இன்னிக்கு நம்மோட தேசத்திலேயும், மற்ற தேசங்களிலேயும் நடந்துக்கிட்டு இருக்குது.

வேதங்களை பிராமணர்கள் தவிர வேற எவரும் கத்துக்கிடக் கூடாது, காதாலேயே கேக்கக் கூட கூடாதுங்கிற இந்த வைதீகக் கோட்பாடுகள் எல்லாத்தையும் எல்லோரும் சரிசமம்கிற சம்மட்டி கொண்டு தகர்த்தெறிகிறது பிரம்ம சூத்திரமும், அனைத்து வேதாந்தங்களும். பிரம்ம ஞானம் பெற அத்தனை பேருமே தகுதியுடையவர்கள் தான்னு பிரம்ம சூத்திரம் 1.3.25–26 முழக்கமிடுகிறது. கிறிஸ்துவின் பண்புகளை, உபதேசங்களை இலக்கண நூலாக வகுத்து, நமது இந்தியப் பண்பாடு, மொழி, இனம் போன்றவற்றின் அடிப்படையில் பிரம்ம சூத்திரத்தை வேத வியாசர் இயற்றியுள்ளார். அதே நோக்கத்தோடு தான் சிவஞான போதத்தை மெய் கண்டாரும், திருக்குறளை வள்ளுவரும் மற்றும் கிறிஸ்தவ கடவுட் கொள்கையை ஏற்று சைவக் குரவர்களான நாயன்மார்களும், ஆழ்வார்களும், சித்தர்களும், சைவத்தையும், வைணவத்தையும் உருவாக்கினார்கள். அந்த பக்திப் பரவசத்திலேயே தேவாரம், திருவாசகம், நாலாயிரம் திவ்வியப் பிரபந்தம் போன்ற எண்ணிடலங்காத பக்தி பரவசமூட்டும் பாடல்களையும், வேதாந்த நூல்களையும் இயற்றினார்கள்.

நாம் அனைவருமே கடவுளின் பிள்ளைகள் தான்

இந்த உலகத்தில் பிறந்த எல்லா மனுஷருமே கடவுளோட பிள்ளைங்க தான். '***இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அவர்கள் அத்தனை பேரும் தமக்குப் பிள்ளைகள் ஆகும்படியாக பிதாவானவர் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்***'னு யோவான் 1:12 சொல்லுதே. '***அவரிடத்தில் யாதொரு மாறுதலும், வேற்றுமையின் நிழலும் இல்லை***'னு யாக்கோபு 1:17 அடிச்சு சொல்லுதே. வேதாந்தத்துக்கு இந்த ஜாதி, உயர்வு, தாழ்வுன்னு எதுவும் கிடையாது. இந்த உலகத்தையே ஒரு குடும்பம்னு சொல்வதற்காக அதை 'வசுதைய்வக் குடும்பகம்' என உபநிஷத்துக்கள் எல்லாம் கூறுகின்றன. கிறிஸ்துவை உண்மையா ஏற்றுக் கொண்டவனுக்கு ஜாதிகள் எதுவும் கிடையாது. '***கிரேக்கனென்றும், யூதனென்றும் இல்லை. அடிமை என்றும் சுயாதீனன் என்றும் இல்லை. ஆண் என்றும் பெண் என்றும் ஒன்றுமில்லை. நீங்கள் எல்லோருமே கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்***'னு கலாத்தியரில் 3:28ல சொன்னாப் பிறகும் நாம ஜாதி ஏற்றத் தாழ்வுகளை பாக்கலாமா? எங்க ஜாதி உயர்ந்த ஜாதி, உங்க ஜாதி தாழ்ந்த ஜாதிங்கிற எல்லா எழவுகளையும் விட்டுத் தொலைப்போமே.

நம்மையெல்லாம் பார்த்து இறைவனே திரும்பத் திரும்ப சொல்றாரு பாருங்க. '***நீங்கள் புத்திரராய் இருக்கிறபடியால், அப்பா பிதாவே என்று கூப்பிடத் தக்கதாக தேவன் தமது குமாரனுடைய (இயேசு) ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீங்கள் அடிமையாய் இராமல், புத்திரராய் இருக்கிறீர்கள்***'னு மேலும் வேதாகமம் நம் எல்லாருக்கும் ஒரு நல்ல ஆசீர்வாதமான, சந்தோஷமான, சமாதானமான வாழ்க்கையை, கடவுளோட புத்திரர்களாக ஆகும்படியான ஒரு சுவீகாரத்தை, நம் தகப்பனான சர்வ வல்ல தேவனின் சகல சம்பத்துக்களுக்கும், அனுக்கிரஹத்துக்கும் உரியவர்களாக, சொந்தக்காரர்களாக, வாரிசாக, சுதந்திரவாளிகளாக மாற்றுகிறதே (கலாத்தியர் 4:6,7).

இந்த கிறிஸ்தவத்தின் சம உரிமைச் செய்தி, பாவ விமோசன மீட்புச் செய்தி. பரலோக பிரஜைகளாக மாறுவதற்குரிய அழைப்புச் செய்தி, நம்மையெல்லாம் படைச்ச அந்த பரமேஸ்ரவனின் பிள்ளைகளாக மாறி அவரோட ஆதரவான அரவணைப்பில சதா காலமும் வாழ்றதுக்கு, நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்குரிய இந்த நற்செய்தியை இந்திய மக்கள் அனைவருக்கும் ஜாதி, மத, பேதமின்றி பிரம்ம சூத்திரம், சிவ ஞான போதம் மற்றும் சித்தர்களால் அறிவிக்கப்படுகிறது. இந்த அழைப்பை ஏற்றுக் கொள்வோமா? ஏற்றுக் கொண்டு ஆண்டவரோட பிள்ளைகளாக மாறுவோமா?

இதுவரை நாம் பார்த்தது என்ன?

இயேசு கிறிஸ்துவின் சகாப்தத்திற்குப் பின் கி.பி.49ல் அவரின் சீடரான புனித தோமா இந்தியாவுக்கு வந்து இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை பிரசிங்கித்த பிறகே சைவமும், வைணவமும் உருவாகியது என வரலாற்று ஆசிரியர்கள் வரையறுத்துக் கூறுகின்றனர். அதற்கு முன்பே நம் தேசத்தில் சமண மதமும், புத்த மதமும் இருந்த போதிலும், அவைகள் கடவுட் கொள்கையை மறுதலிக்கும் மதங்களாவே இருந்தன. எருசலேமில் இவ்வுலகில் முதன் முதலாக சாலமோனால் கி.மு.972ல் இறைவழிபாட்டிற்கென்று கற்கோவில் கட்டப்பட்டது. கடவுளே மோசேக்கு கி.மு.1461ல் சொன்ன அளவுகளின் படியே கற்களால் அந்தக் கோவில் கட்டப்பட்ட பின்பே, நமது தேசத்திலும் கோவில்கள் கட்டப்படலாகின. கோயில்களின் அமைப்பு, வழிபாட்டு முறைகள், பலி, பிரசாதம், விக்கிரஹங்களுக்கு அபிஷேகம், நைவேத்தியம் மற்றும் தெய்வம் ஒருவராகவே இருந்தாலும், சைவத்திலும் வைணவத்திலும் அவர் திரிமூர்த்தியாக அருள் பாலித்து ஒன்றாகவே இருக்கின்றார் எனவும் பார்த்தோம். மிருக வழிபாடு, பின் பலி நிறுத்தம், தீமை செய்த அரக்கர்களையும், அசுரர்களையும் ஹதம் செய்து வென்ற கோலங்களில் தெய்வங்கள், இப்படி பல விஷயங்களையும் நாம் பார்த்தோம். இவைகளை நீங்கள் ஒரே மூச்சிலும் படித்திருக்கலாம். விட்டு விட்டும் பல சிட்டிங்குகளிலும் படித்திருக்கலாம்.

அப்படிப் படித்த எல்லாவற்றையும் நன்கு புரிந்து கொள்ளவும், அலசி ஆராயவும் மீண்டுமாய் ஒரு விசை அவைகள் அனைத்தையும் மிகச் சுருக்கமாக அப்படியே ஸ்கேன் பண்ணிப் பார்க்கலாமா?

1. சைவ வைணவக் கோயில்களின் கட்டமைப்பு
2. கோயில்களில் வெண்கலத்தால் பணி முட்டுக்கள்
3. வழிபாட்டு முறைகள், பிரசாதம், எண்ணெய் விளக்கு ஏற்றுதல் போன்றவைகள்
4. கோயில் குருக்கள் கர்ப்பக்கிரஹத்துக்குள் மணி அடித்துக் கொண்டே போகுதல்
5. கோயில் குருக்கள் தலையில் பட்டயம் கட்டுதல்
6. விக்கிரஹத்துக்கு அபிஷேகம், தூப தீபம் காட்டும் முறை
7. பொன், வெள்ளி, இரத்தினம், வைரங்களால் அலங்காரம்
8. நினைவுக்கல் வழிபாட்டின் வழியே சிவலிங்கம்
9. இஸ்லாத்தில் கருப்புக்கல் வழிபாடு
10. ஸ்தல விருட்சம்
11. சுவாமிக்கு கன்றுக் குட்டி வாகனம்
12. சிவலிங்கத்திற்கு முன்பாக நந்தி
13. திரு நீறு, சந்தனம், குங்குமம் நெற்றியில் இடுதல்
14. நெற்றியில் அவைகளை இடுவதற்கு வேதாகம ஆதாரம்
15. வைணவர்கள் திருமண் நாமம் இடுதல் ஏன்?
16. திரு நீறு தயாரிக்கும் முறை
17. வீட்டு நிலைப்படிகளில் சந்தனம் குங்குமம் இடல் ஏன்?
18. பெண்களுக்கு ஏன் நீளக் கூந்தல்?
19. சாமிக்கு முடி காணிக்கை – விளக்கம்
20. மொட்டை போடுதலின் நோக்கம்
21. மாதப் பிறப்பு, அமாவாசை மற்றும் விசேஷ தினங்களின் ஆசரிப்பு
22. ஏழு நாள் கொண்ட வார சுழற்சி ஏன்?

23. மிருக பலி வழிபாடு ஏன், எதற்காக?
24. தேங்காய் ஏன் உடைக்கணும்?
25. கோயில்களில் இப்போது பலிகள் ஏன் கொடுக்கப்படுவதில்லை?
26. நடராஜனின் ஆனந்த நடனம்
27. சூலாயுதம் – விளக்கம்
28. சோமாஸ்கந்தர் – விளக்கம்
29. அரிஹரன் – விளக்கம்
30. அர்த்தநாரீஸ்வரர் – விளக்கம்
31. புத்த மதத்தில் திரிகாயா – ஏன்?
32. சைவ வைணவப் பாடல்களில் திரியேகம்
33. எல்லோரா குகைகளில் திரியேக ஓவியம், சிலைகள்
34. பிரம்ம சூத்திரத்தில் திரியேகம்
35. தேவ நாமத்தை குறிக்கும் சொற்கள்
36. பிரபஞ்சத்தை சிருஷ்டித்த ஓம் என்ற பிரணவ நாமம்
37. வினை தீர்க்கும் விநாயகர்
38. அழுக்குருண்டைப் பிள்ளையார்
39. மரித்து உயிர்த்தெழுந்த பிள்ளையார்
40. வேழ முகத்தோனாக மறு ரூபமாக்கப்பட்ட பிள்ளையார்
41. பிள்ளையாரைத் தண்ணீரில் கரைத்தல் – விளக்கம்
42. சைவம் வைணவத்தில் இயேசு நான்கு கோணங்களில்
43. சூரபத்மனை வென்ற குமரக் கடவுளாக குமாரன் இயேசு
44. (வள்ளியைத்) தேடி வந்த தெய்வம்
45. முருகனுக்கு ஏன் 12 கரங்கள்?
46. காவடி எடுத்து கர்த்தரை நினைவு கூறுதல்
47. சிருஷ்டிப்பின் தெய்வம் பிரம்மாவாக இயேசு
48. பிரம்ம சூத்திரத்தில் கிறிஸ்தவம்

இவைகளுக்கு ஆதாரம் எங்கே இருக்கிறது?

மேலே கூறப்பட்டுள்ள இவைகளில் இருந்து என்ன தெரிகிறது என்று பாரபட்சமற்ற விதத்தில் ஒரு விசை நீங்களே இவைகளை சீர் தூக்கிப் பாருங்கள். இவைகளுக்கான மூலம், ஆதாரம், விளக்கம் நம் இந்து மத நான்கு வேதங்களிலோ அல்லது வேறு எந்த வேதாந்தங்களிலோ, புராணங்களிலோ இருக்கிறதா? என்னைப் பொறுத்த வரை இல்லை என்றே சொல்லுவேன். இருந்தால் தயவு செய்து எனக்கு எழுதுங்கள். என் தவறுகளை ஆதாரத்தோடு சுட்டிக் காட்டுங்கள். நான் தெரிந்து கொள்வதற்கு, கற்றுக் கொள்வதற்கு, என்னை திருத்திக் கொள்வதற்கு விரும்புகிறேன்.

இந்த நூலை எழுதுவதின் நோக்கம் கிறிஸ்தவத்தை நம் தேசத்தில் பரப்ப வேண்டும், இதைப் படிப்பவர்களை மதமாற்றம் செய்ய வேண்டும் என்பது அல்ல. கிறிஸ்தவமும் என் சொந்த சொத்து அல்ல. அதைப் பரப்புவதினாலோ யாரையாவது கிறிஸ்தவர்களாக மாற்றுவதினாலேயோ யாரும் எனக்கு ஒரு பைசா கூட கொடுக்கப் போறதில்லை. எனக்கு யாரும் எந்த ஒரு கிரீடமும் கொடுக்கப் போறதில்லை. பிறகு எதுக்கு நான் இவைகளை எழுதுகிறேன்?

58 வயசுக்குப் பிறகு இந்த சத்தியங்களையும், இந்த சத்தியங்களை எனக்கு புரிய வைத்த சத்குருவான இயேசுவையும் தெரிந்து கொண்டேன். என் சிந்தனை சீர்பட்டது. என் பார்வை பண்பட்டது. என் வாழ்க்கை சீர் பொருந்தியது. என் எண்ணம், சொல், செயல், அவுட் லுக் எல்லாமே மாறியது. இது வரை அனுபவித்திராத ஒரு தெய்வீக சந்தோஷம், சமாதானம் எனக்குக் கிடைத்தது. என் பழைய பாவ வாழ்க்கைக்கு நான் மரித்து ஒரு புதிய ஜீவனைப் பெற்றுக் கொண்டேன். எனக்குள் ஒரு எழுச்சி, வேகம், துடிப்பு, அனல், அக்கினி, பெரு வெள்ளம், தாகம், வாஞ்சை பொங்கி எழுகிறது. இதை எல்லாருக்கும் தெரிவிக்கணுமே, எல்லாரும் அனுபவிக்கணுமே என்ற ஒரு ஆதங்கம், ஆத்துமபாரம் எனக்கு.

இந்துக்களின் பக்தி வைராக்கியத்துக்கு ஈடு இணை ஏது?

அதுக்காகத் தானே எல்லாருமே கோயில் கோயிலா குளம் குளமா போறாங்க. விரதம் இருந்து கொதிக்கிற வெயில்ல செருப்பு இல்லாம வெறுங்காலோட பாத யாத்திரை எல்லாம் போறாங்க. இருமுடி, காவடி எடுத்து அலகு எல்லாம் குத்திக்கிடுறாங்க. அழகான தலைமுடியையும், நீளமான கூந்தலையும் காணிக்கையா கொடுத்து மொட்டை போட்டுக்கிடுறாங்க. நெருப்புல நடக்குறாங்க. மண்டையில தேங்காயை உடைச்சுக்கிடுறாங்க. அங்கப் பிரதட்சணம் செய்யுறாங்களே.. ஓ... அவங்களுக்கு இருக்கிற அந்த பக்தி, வைராக்கியம், அர்ப்பணிப்பு என் கண்களை உண்மையிலேயே நனைக்கிறது. அந்த பக்திக்கு நான் தலை வணங்குகிறேன்.

கிறிஸ்தவ கொள்கைகளை ஏற்றுக் கொண்டு உருவானதே சைவமும் வைணமும். அதாவது சரியாகச் சொல்லணும்னா சைவமும் வைணமும்

இந்தியக் கிறிஸ்தவமே! அதனால் தான் அத்தனை சித்தர்களும், வேதாந்திகளும், வேத வியாசரும், இயேசு கிறிஸ்துவையும், அவர் மனித அவதாரம் எடுத்து வந்து நமக்காக, பலியானதையும் அப்படியே உருகி உருகி மெய் சிலிர்த்துப் பாடி இருக்கின்றனர். இந்து சகோதர சகோதரிகளுக்கு இருக்கின்ற அந்த பக்தி வைராக்கியம், விசேஷித்த நாட்களில் அவங்க வீட்ல எல்லாருமே அதிகாலமே கருக்கலிலேயே எழுந்து குளிச்சு முழுகி சமையல் அறை, பூஜை அறை, வீடு, வாசல், முற்றம் எல்லாத்தையும் பெருக்கி சுத்தப்படுத்தி, சாணியை கரைத்து தெளித்து, அதுல வண்ண வண்ண கோலமிட்டு, சாணியில பிள்ளையார் பிடிச்சு வச்சு அதுல பூக்களை சொருகி வச்சு அலங்காரம் பண்ணி, குத்து விளக்கு, தீர்த்தச் சொம்பு, ஊதுபத்தி ஸ்டாண்டு, தட்டு எல்லாத்தையும் நல்லா பளிச்சுன்னு துலக்கி, சுவாமி படங்களுக்கு அலங்காரம் பண்ணி வீடு முழுக்க சாம்பிராணிப் புகை போட்டு, விளக்கேற்றி, ஊதுபத்தி கொளுத்தி, பூக்களை அர்ச்சித்து மந்திர உச்சாடணம் பண்ணி, தெய்வப் படங்களுக்கு முன்பாக பவ்யமா, நெடுஞ்சாங்கடையா விழுந்து, கண்ணீர் மல்க கும்பிட்டு, விபூதி, குங்குமம், சந்தனத்தை நெற்றிக்கு இடுதல் போன்ற இன்ன பிற சகல விதமான பக்திக்குரிய செயல்களையும் பார்க்கும் போது பரம்பரைக் கிறிஸ்தவர்களோ அல்லது அபிஷேகம் பெற்ற கிறிஸ்தவர்களோ கூட இந்துக்களின் பக்திக்கு முன்பாக நிக்க கூட முடியாது. திருப்பதி தேவஸ்தானத்தில ஒரு சில வினாடிகளே தெய்வ தரிசனம் பெறுவதற்காக பல மணி நேரங்கள் காத்திருக்கும் பொறுமை அவர்களுக்கு இருக்கிறது. அர்த்த ஜாம பூஜைக்கு முதல் நாள் மாலையிலிருந்தே காத்துக் கிடக்கின்றனர். இவையெல்லாம் மனசார பாராட்டப்பட வேண்டிய விஷயங்களே.

இத்தனை செய்தும் ஏன் ஆசீர்வாதம் இல்லை?

ஆனா இவைகள் எல்லாத்தையும் ஆத்மார்த்தமாக, பக்தி பூர்வமாக, சிரத்தை எடுத்து சரீர சிரமங்களைப் பாராம சகிச்சுக்கிட்டு, ஊண் உருக நெக்குருகி செய்த போதிலும், உண்மையிலேயே அவர்களுக்கு அவர்கள் எதிர்பார்க்கின்ற ஆசீர்வாதங்கள், நன்மைகள் கிடைக்குதா? நோய் நொடி, பலவீனங்கள், கெட்ட பாவப் பழக்கவழக்கங்கள், பிசாசின் கட்டுக்கள், கடன் தொல்லைகள் இவைகளில் இருந்து ஒரு பரிபூரண விடுதலை கிடைக்குதா? இல்லையே. ஏன் கிடைக்க மாட்டேங்குது? தேவாரம், திருவாசகம், ஆழ்வார்களின் திருப்பதிகங்கள் என இறைவனைப் போற்றிப் புகழும் அனைத்து பக்தி நூல்களுமே கடவுளைக் கருணை உள்ளவர், இரக்கமுள்ளவர், ஒரு பெற்ற தாயைப் போல நம்மை அள்ளி எடுத்து அரவணைத்து அன்பு செலுத்துபவர், ஒரு தந்தையைப் போல குருவாக நின்று நம்மை கரம் பிடித்து வழி நடத்துகின்றவர் என்றெல்லாம் கூறி மகிமைப்படுத்துகின்றன. ஆனாலும் விடுதலை இல்லையே ஏன்? இத்தனை ஆச்சார அனுஷ்டானங்கள், பக்தி வழிபாடுகள் செய்தும் ஏன் அவர்கள் எதிர்பார்க்கின்ற ஒரு அற்புதம் நடக்கவில்லை?

நிழல் நிஜமாகாதே.

ஏனென்றால் நாம் செய்கின்ற இத்தனை பூஜை புனஸ்காரங்களும், ஆசரிப்புக்களும் அனுசரிக்கின்ற ஆகமங்களும் உண்மையான இறைவனுக்காக, யாரை நினைத்து, யாருக்கு இந்த பக்தியை அர்ப்பணம் செய்பணுமோ அவரை நோக்கிச் செய்யாமல், அவரின் நிழலாட்டமாக உள்ள நிழலுக்கே, உருவகத்துக்கே, டூப்ளிகேட்டுக்கே, புராக்சிக்கிற்கே செய்கிறோம். நாம நம்மோட கலாச்சாரம், பண்பாடு, விருப்பத்துக்கேற்ப கிறிஸ்தவ கடவுட் கொள்கைகளை, கருத்துக்களை, உபதேசங்களை ஏற்றுக் கொண்டுள்ளோம். ஆனா உண்மையான பரப்பிரம்மமாக இந்த பிரபஞ்சத்தைப் படைத்து நம்மைக் காத்து இரட்சிக்கின்ற இறைவனை (பிதாவாகிய கடவுள், குமாரனாகிய இயேசு கிறிஸ்து, சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழி நடத்தும் பரிசுத்த ஆவியை) கும்பிடாமல், அவர்களை நாம் உருவகப்படுத்தி, அவர்களின் நிழலாக அவரை சிம்பாலிக்காக நாம் உருவாக்கிய, உண்டு பண்ணின உருவங்களைத் தானே கும்பிடுகிறோம்? ஒரு நல்ல, உயர்ந்த, உன்னதமான நோக்கத்தோடே தான் நம் முன்னோர்கள் இதை எல்லாம் உருவகப்படுத்தினார்கள். உண்மையான கடவுளை இழிவு படுத்தணும்கிற நோக்கத்தில அல்ல. கொஞ்ச காலம் இந்த உருவகங்களை தியானித்து, பின்பு நிழலை விட்டு விட்டு நிஜத்தைப் பிடித்துக் கொள்வதற்காக இதைச் செய்தார்கள். ஆனா நாம அதை உணராம, யாருக்கு அந்த பக்தியை செலுத்தணுமோ, அவர்களுக்கு அதைச் செலுத்தாமல், ஒரிஜினலை விட்டு விட்டு டூப்ளிகேட்டுக்கே, உருவகப்படுத்திய ஒரு நிழலுக்கே தொடர்ந்து செஞ்சுக்கிட்டு வருகிறோமே. அவலை நினைச்சுக்கிட்டு வெறும் உரலை இடிச்ச கதையாத் தானே இது இருக்கு.

கில்ட் கில்ட்டுத் தான்

டூப்ளிகேட் எப்பவுமே ஒரிஜினல் ஆக முடியாது. நிழல் நிஜமாக முடியாது!. உருவகம் உண்மையாக முடியாது. பொன் முலாம் பூசிய கில்ட்டு நகை 24 கேரட் சுத்த பசும் பொன் நகையாக மாறவே முடியாது. கில்ட்டு கில்ட்டுத் தான். ஒரிஜினல் ஒரிஜினல் தான். சுத்தத் தங்கத்தை ஆபரணமாக செய்வதற்காக (பரம் பொருளை தியானிப்பதற்காக) கொஞ்சம் பித்தளையையும், செம்பையும் (சில உருவகங்களை, சடங்காச்சாரங்களை) பொன்னில சிலர் கலக்கத் தான் செய்வார்கள். ஆனா அது ஒரு அளவில, ஆன்மீகத்தில, ஆவிக்குரிய ஜீவியத்தில, பக்தியில வளர்ந்தாப் பிறகு நிழலை விட்டுட்டு நிஜத்தைப் பற்றிப் பிடிச்சுக்கிடணும். வாழ்நாள் முழுக்க LKGயிலேயே உட்கார்ந்துக்கிட்டு இருக்கக் கூடாதே. மேல மேலே ஏறி முன்னேறி போய்க்கிட்டே மெய்யான சத்தை, சத்தியத்தை பிடிச்சுக்கிடணுமே.

பக்தியில் வளரணும்

Pre KG, LKG குழந்தைகளுக்கு நாலும் நாலும் எட்டுன்னு கூட்டுறதுக்கு சொல்லிக் கொடுக்க, முதல்ல இந்த கையில நாலு விரலை நீட்டு, அந்தக்

கையில நாலு விரலை நீட்டு. இப்போ ஒண்ணு ஒண்ணா மடக்குன்னு சொல்லி கத்துக் கொடுப்போம். அதையே பெரிய பையனா ஆனாப் பிறகும், ஹையர் கிளாஸ்களுக்குப் போனாப் பிறகும் செஞ்சுக்கிட்டு இருந்தா நல்லாவா இருக்கு? அதே போல பக்தியிலேயும், தியானத்திலேயும், ஆவிலேயும், ஆன்மீகத்திலேயும் நாம வளர வளர சத்தியங்களை புரிஞ்சுக்கிட்டு நிழலை, உருவகத்தை, விக்கிரஹத்தை விட்டு விலகி நிஜத்தைப் பிடிச்சுக்கிடணும்.

சத்தியம் எது?

நிஜம் எது? கிறிஸ்தவத்தில் சொல்லப்பட்டுள்ள சத்தியம், கடவுட் கொள்கையே நிஜம். சத்தியம் என்ன? கடவுள் ஒருவரே. அவர் பிதா (சர்வ வல்ல தேவன்), குமாரன் இயேசு (வார்த்தையாக இந்த பிரபஞ்சத்தைப் படைத்து, மனுக் குலத்தின் பாவங்களுக்காக பலியாகி பாவ விமோசனம் தருபவர்), பரிசுத்த ஆவியாக (நம்மைப் பலப்படுத்தி, நம்மை நடக்க வேண்டிய வழிகளில் நடத்துபவராக, நம்மைக் காப்பவராக) இருக்கிறார். இந்த மூவரும் ஒருவராக , திரியேக தேவனாக, திரிமூர்த்தியாக இருக்கின்றனர். அவர் மூலமாக மட்டுமே நாம பரலோகம் (மோட்சம், சொர்க்கம், கைலாசம், வைகுண்டம்) போக முடியும். நம்மோட பாவங்கள் கழுவப்படாம, நம்மோட ஜென்ம பாவங்கள், கரும வினைகள் போக்கப்படாமல் பரலோகம் போகவே முடியாது. அது மகா மகா பரிசுத்த ஸ்தலம். இந்த பாவங்களை நாம எத்தனை கோயிலுக்குப் போனாலும், லட்சார்ச்சனை பண்ணினாலும், கலச விளக்கு வேள்வி பூஜைகள், யாகங்கள் பண்ணினாலும், விரதம் இருந்து இருமுடி எடுத்துக்கிட்டுப் போனாலும், பாத பூஜை, அன்னதானம் செஞ்சாலும், எத்தனை குண்டலினி யோகா, ராஜ யோகம், வெட்டவெளி தியானம் பழகினாலும், காய கல்ப பயிற்சி எடுத்தாலும் சரி இந்த பாவங்களை யாராலும் போக்கவே முடியாது.

இரத்தம் சிந்தாமல் பாவ மன்னிப்பு இல்லை

சாய்பாபா, சங்கராச்சாரியார், பங்காரு அடிகளார் மற்றும் அனேக சத்குருக்கள் இவர்கள் எல்லோருமே தெய்வ அனுபூதி பெற்றவர்கள் தான். இவர்களையெல்லாம் நான் பெரிதும் மதிக்கிறேன். கடவுள் தான் இவர்களையும் ஒரு நோக்கத்தோடு படைத்திருக்கிறார். இந்த லோகத்துக்கு இவர்கள் எல்லாருமே ரொம்ப ரொம்பத் தேவையே. இவர்களின் உபதேசத்தின் படி வாழ ஒருத்தரால முடியும்னா அவனால நிச்சயமா பாவம் செய்ய முடியாது தான். இனிமே பாவம் செய்யாம இருக்க முடியும். ஆனா ஏற்கனவே செஞ்ச பாவத்தை, ஜென்ம பாவத்தை, இவங்களாலே போக்க முடியாதே. ஏன்னா, 'இரத்தப் ப்ரதோஷணம் பாவ விநாசம்'னு சம்பூர்ண மஹா பாரதமே சொல்லுதே. 'பிரஜாபதி'யாகவே (கடவுளாகவே) இருந்தாலும் அவர் தம்மையே யக்ஞமாக (பலி) கொடுத்தால் தான் பாவ விமோசனம் கொடுக்க முடியும்னு தாண்டீய மஹா ப்ரமாணம் சொல்லுதே. இப்படி எத்தனையோ இந்து மத வேதங்களும்

வேதாந்தங்களும், புராணங்களும் சொல்லுதே. இந்த புராணங்களில் உருவகப்படுத்தப்பட்டிருக்கும் எந்த தெய்வமும் நமக்காக மரிக்கலையே. யாருமே நமக்காக இரத்தத்தை சிந்தலையே. அப்படி சிந்தாததுனாலே நம்மோட பாவங்களையும் அவர்களால கழுவ முடியாதே. இது தான் தடையாக, ஹிச்சாக, அப்பஸ்டக்கில்லாக இருக்குது.

பாவப் பரிகாரி யார்?

உண்மையிலேயே யார் நமக்காக இரத்தம் சிந்தி பாவப் பரிகாரியாக, பலியாக யக்ஞம் செய்திருக்கிறார்? இயேசு கிறிஸ்து மாத்திரந்தானே நமக்காக இரத்தம் சிந்தியிருக்கிறார். ஏன்னா அவர் தாம் நம்மை எல்லாரையுமே படைச்சாரு. அதுனால தான் அவருக்கு அந்த அக்கறை. நம்மைப் படைச்ச அவருக்கு நாம கெட்டு நரகத்துக்குப் போறது இஷ்டமில்லை. அதுனால தான் எந்த பாவமுமே செய்யாத அவர் நமக்காக, நமக்கு வர வேண்டிய பாவத்துக்குரிய தண்டனையான மரணத்தை தானே ஏற்றுக் கொண்டார். இதைத் தான் சிவஞான போதமும், பிரம்ம சூத்திரமும் சொல்லுது. இதைத் தான் நாலாயிரம் திவ்ய பிரபந்தம், நம்மாழ்வார் திருவிருத்தம், திருமங்கை ஆழ்வார் பாசுரம், தேவாரம், திருவாசகம், போற்றிப் பஃறொடை போன்ற பல பாடல்களும், திருவள்ளுவர், திருவுந்தியார், சிவஞான சித்தியார், ஔவையார் மற்றும் அகஸ்திய முனிவர் போன்ற நிறைய சித்தர்களும் அழுத்தம் திருத்தமாக சொல்லியிருக்கிறாங்க – விக்கிரஹங்களில் தெய்வம் இல்லை என்று. இதே கருத்தை உத்திரகீதை கூறுகிறது, மஹா நிர்வாணம், சாதாதப வசனம். ஸ்கந்த புராணத்தில ஞான யோக காண்டத்தில நாடி சாக்யாகிரஹம் எல்லாமே சொல்கிறது.

ஆவியான தேவனுக்கு உருவமில்லையே

வானம் சிங்காசனமும், பூமி பாதப் படியுமாக இருக்கின்ற அந்த சர்வ வல்ல, சர்வ வியாபியான தெய்வத்தை ஒரு விக்கிரஹத்தில, மனிதனின் கைவண்ணமான ஒரு கற்சிலையிலோ அல்லது ஒரு உலோகச் சிலையிலேயோ கொண்டு வர முடியுமா? கடவுள் நம்மைப் படைத்தாரா? இல்லை மனுஷன் கடவுளைப் படைத்தானா? மனுஷன் கடவுளைப் படைக்க முடியுமா? அது சாத்தியமான்னு என்னிக்காவது படிச்ச, பகுத்தறிவு உடைய ஆறறிவு உள்ள மனுஷர்களாகிய நாம யோசிச்சு பாத்திருக்கோமா? இல்லையே. அப்படி யோசிச்சு பாத்து இருந்தா, இந்த விக்கிரஹ ஆராதனையை விட்டு என்னிக்கோ நாம வெளியிலே வந்திருப்போமே.

விக்கிரஹத்தினால் ஆசீர்வாதமா? சாபமா?

மனுஷங்க படைச்ச சிலைகளினால நம்மை ஆசீர்வதிக்க முடியுமா? இப்படி அந்த சிலைகளுக்கு நாம பூஜை புனஷ்காரம் செய்யுறோம்கிறதைப் பாத்துட்டு அந்த ஏரியாவுல இருக்கிற சில அசுத்த கெட்ட ஆவிகள், குட்டி சாத்தான்கள் அதில

வந்து உக்கார்ந்துக்கிட்டு நமக்கு சாபங்களையும், தவறான சுபாவங்களையும், பாவ எண்ணங்களையுமே கொடுக்கும். இது தான் உண்மையிலேயே இங்கெல்லாம் நடக்குது. இதை நான் நமது திருக்கோயில்களையும் அங்குள்ள தெய்வங்களையும் இழிவுபடத்தனும்கிற எந்த எண்ணத்திலேயும் சொல்லலை. திருக்கோயில்கள் புனிதமான இடம். அங்கே எப்படி பாலியல் உணர்வுகளைத் தூண்டும் படியான பல சிலைகள் வந்தன? தெய்வங்களின் பிறப்பு வளர்ப்பு நடக்கைகள் பற்றி அசிங்கமான, ஆபாசமான கதைகள் எவ்வளவு இருக்கின்றன நமது புனிதமான புராணங்களில்? இவையெல்லாம் எப்படி வந்தது? இவைகள் எல்லாமே இந்த அசுத்த ஆவிகளின் கிரியைகளினாலேயே தான். என்ன பக்தி செஞ்சாலும் நம்மோட உள்ளம் பரிசுத்தம் ஆயிடக் கூடாது, மோட்ச பிரஜைகளா நாம மாறிடக் கூடாதுங்கிறதுக்காகவே அவைகள் கங்கணம் கட்டிக்கிட்டு நம்மையே சுத்துதுங்க. அவைகள் நம்மை அழிக்கவும், கொல்லவும், திருடவுமே கர்ச்சிக்கின்ற சிங்கம் போல சுற்றி சுற்றி வருகின்றன என்று வேதம் சொல்லுதே.

'அசுமேவ யக்ஞம்' என்று பிரம்ம சூத்திரம் 2.3–43மும், 'நானே பலியாக இருக்கிறேன்' என கீதையில் கண்ணனும் கூறுகின்றனர். 'மற்றவருக்காக கடவுள் தாமே இறப்பைத் தெரிந்து கொண்டார்' எனவும் 'உலகத்தைப் படைக்கும் போதே பிரஜாபதி பலியிடப்பட்டார். பலியாகும்படி விசுவகர்மா தம்மையே கையளித்தார்' எனவும் உபநிடதங்கள் கூறுகிறது என திரு. மஹாதேவன் தம்முடைய ஆராய்ச்சி நூலான 'கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருள் இயல் வரலாறு' என்ற நூலில் பக் 79லும், 96லிலும் கூறுகிறார். 'புருசா பலியாயிருக்கிறார்' என சாந்தோக்கிய உபதேசம் 3.16.1ம், 'பிரஜாபதி பலியாயிருக்கிறார்' என சதபத பிரமாணம் 1.13.1.15ம், 'இனி ஈண்டு தேகத்திலுள்ள நானே பலியாகிறேன்' என பகவத் கீதை 84ம் கூறுகிறது. சத்திய பிரம்மனைப் பற்றி எழுதும் சங்கரர் பிரம்மனுக்கு 'அஹர்' என்ற பெயரும் உள்ளது எனக் கூறுகிறார். 'அஹர்' என்னும் பெயர் பலியோடு தொடர்புடையது என சங்கரரின் பிரம்ம சூத்திரம் கூறுவதாக சுவாமி அத்துவைத ஆஸ்ரமம் வெளியிட்ட நூலில் (பக் 332–3)ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடவுள் பலியாகி இருக்கிறார்னு மேலே சொன்ன வேதங்கள் எல்லாமே எந்தக் கடவுளை சொல்கிறது? சிவனையா? விஷ்ணுவையா? பிரம்மாவையா? கண்ணனையா? எந்தக் கடவுள் பலியாகி இருக்கிறார்? பலியானவர் இயேசு கிறிஸ்து ஒருத்தர் மாத்திரந்தானே. 'நானே பலியாகிறேன்' என்று சொன்ன கண்ணன் பலியாகி இருக்கிறாரா? இல்லையே. யார் எப்படி செத்தார்கள் என்று மகாகவி பாரதியார் பாடி இருப்பதைப் பாருங்க.

'சிலுவையில் அறையுண்டு யேசு செத்தான்
தீயதொரு கணையாலே கண்ணன் மாண்டான்
பலர் புகழும் ராமனுமே ஆற்றில் வீழ்ந்தான்'

– பாரதி அனுபதி 6:12

கண்ணனுக்கும் இராமனுக்கும் நடந்ததை சுட்டிக் காட்டிய பாரதியார் மேலும் என்ன பாடி இருக்கிறார்னு பாருங்க.

'ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்
எழுந்து உயிர்த்தனன் நாளொரு மூன்றில்
நேச மாமரியா மகதலேனா நேரிலே
இந்தச் செய்தியைக் கண்டாள்'

– பாரதி வேதாந்தப் பாடல்கள் 9:1

சத்யமேவ ஜெயதே

வேதங்களும், புராணங்களும் ஆயிரம் பாட்டு பாடியிருக்கலாம். ஆனா அந்தப் பாட்டின் நாயகன், மூலவர், கருப்பொருள் யாரு? உருவகம் பண்ணப்பட்ட, நிழலாக கொள்ளப்பட்ட தெய்வங்கள் ஏதேனும் பலியாகி இருக்கா? இல்லையே. நிழலை பிடிச்சுக்கிட்டு பரலோகம் போக முடியாதே. உண்மையை, சத்தியத்தை, அந்த சத்தியத்திற்குரிய தேவனை பிடிச்சுக்கிட்டா மாத்திரந்தான் கைலாசம், சொர்க்கம் போக முடியும். ***'சத்தியத்தை அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலை ஆக்கும்'னு விவிலியம்*** சொல்கிறது. முப்பத்திமுக்கோடி தேவர்களை கதாபாத்திரங்களாக நாம புராணங்களிலே உருவாக்கிடலாம். அவைகளை இப்போ நாம தெய்வங்களாகவும் கொண்டாடலாம். ஆனா இப்படி புனையப்பட்ட உருவகங்கள், கதாபாத்திரங்கள் எல்லாமே வெறும் நிழல்கள் தானே. இந்த நிழலைப் பார்த்து நாம நிஜத்தைப் பிடிச்சுக்கிடணும்கிறதுக்காவே நமது முன்னோர்கள், ஞானிகள், பக்த சிரோமணிகள் இந்த உருவகங்களை உண்டாக்கினார்கள். நம்மை கரை சேர்க்கணுமேங்கிறதுக்காக சில கதைகளையும் கட்டி விட்டாங்க. ஆனா கடைசி வரைக்கும் இந்த நிழலையே சதா காலமும் சதம்னு நாம குரங்குப் பிடியா பிடிச்சுண்டு இருப்போம்னு நிச்சயமா அவங்க நினைச்சே பார்த்து இருக்க மாட்டாங்களே.

பக்தி நம்மை பண்படுத்தணும்

பக்தி நம்மைப் பண்படுத்தணும், நம்மை பக்குவப்படுத்தணும், நம்மை பரிசுத்தப்படுத்தணும். நம்மை வழி நடத்துகிற தெய்வம் நமக்கு முன் மாதிரியா நாம நடக்க வேண்டிய வழிகளை குருவாக இருந்து நமக்கு போதிக்கணும். சந்தோஷத்தை, சமாதானத்தை, நம்பிக்கையை, ஆசீர்வாதங்களைக் கொடுக்கணும். அன்பு, அடக்கம், அமைதி, பொறுமை, சகிப்புத்தன்மை, மற்றவர்கள் குற்றங்களை மன்னித்தல், வம்பு, வீம்பு, வைராக்கியம் பாராட்டாமை, புறங்கூறாமை, பிறன் மனை நாடாமை, நம் ஆவி ஆத்துமா சரீரம் அனைத்திலும் பரிசுத்தம், நம்மோட தனிப்பட்ட வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, தாம்பத்ய வாழ்க்கை, ஆன்மீக வாழ்க்கை, சமூக வாழ்க்கை, அலுவலக வாழ்க்கை அனைத்திலும் நம்மை கறையற்றவர்களாக, பிழை இல்லாதவர்களாக, அனைத்து தரப்பு மக்களோடேயும் சமாதானத்தோடே வாழும்படி நம்மைப்

பண்படுத்தி புடமிடுகின்ற ஒரு தெய்வத்தை நாம் இருதயத்தில் தியானித்து வழிபடணும். அப்படி நம்மைப் பண்படுத்துகிற தெய்வமாகவே இயேசு கிறிஸ்துவை சைவமும் வைணவமும் நிழலாக நமக்கு காட்டுகின்றன. சைவ வைணவக் கடவுள்களாக சித்தரிக்கப்படுகின்றவர்கள் அனைவருமே கிறிஸ்துவின் நிழல் உருவகத்தையே தவிர வேறு ஒருவரை அல்ல. இது தான் சத்தியம், உண்மை, நிஜம்.

நம்மை மாற்ற வல்ல தேவன் யார்?

நாம் சைவர்களாக, வைணவர்களாக இருந்து கொண்டே நம் சைவக் குறவர்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும், சித்தர்களும், வேதங்களும், வேதாந்தங்களும், புராணங்களும் தெள்ளத் தெளிவாக சுட்டிக் காட்டும் அந்த பரிசுத்த தெய்வமாகிய இயேசு கிறிஸ்துவையே பற்றிப் பிடித்துக் கொள்ளலாமே? அவர் ஒருவராலேயே நமக்கு முக்தியை, இரட்சிப்பை, இப்பிறவிப் பெருங்கடலை நீந்தித் தாண்டி நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும் தகுதியைத் தர முடியும். அந்த வல்லமை அவர் ஒருவருக்கு மாத்திரமே இருக்கிறது.

நம்மை மாற்றவல்ல தேவன் யார்?

கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்குப் பின் என்று அவர் உலக சரித்திரத்தை மாத்திரம் மாற்றவில்லை. இந்த உலகத்திலுள்ள அனைத்து மதங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தியவர். வழிபாட்டு முறைகளை மாற்றி அமைத்தவர். பக்தி மார்க்கத்தில் ஒரு பெரிய வெளிச்சத்தை, மறுமலர்ச்சியை, எழுப்புதலை செல்ல வேண்டிய வழிகளை தெளிவாக போதித்தவர் அவர். அவரை ஏற்றுக் கொண்டவர்களின் வாழ்க்கையை எல்லாம் மாற்றியவர். அவர் நம் வாழ்க்கையையும் மாற்றுவார். எண்ணி மாளாத அற்புதங்களைச் செய்வார். அவர் பேசும் தெய்வம். நம்மோடு முகமுகமாகப் பேசுவார். தீராத நோய்களையும் தீர்த்து வைப்பார். நம் துக்கங்களையெல்லாம் சந்தோஷமாக மாற்றுவார். நம் கவலை கண்ணீர் எல்லாவற்றையும் களிப்பாக மாற்றவார். உலகப் பிரகாரமான சமாதானம் அல்ல. அவருடைய தெய்வீக சமாதானத்தையே நமக்குத் தருவார். இன்னும் என்ன வேண்டும் நமக்கு? அனைத்தையும் தர அவர் சித்தமுள்ளவராகவே இருக்கிறாரே.

செய்ய வேண்டியது எல்லாம் என்ன?

இதற்கு நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்று தான். முதலில் அவரை மனதார நம்புங்கள். இது மத மாற்றம் அல்ல, வெறும் மனமாற்றம் மட்டுமே. பாவ வாழ்க்கை, பாவ சிந்தனையிலிருந்து ஒரு மனமாற்றம். அவ்வளவே. கிறிஸ்தவம் ஒரு மதமே அல்ல. அது ஒரு மார்க்கம் மாத்திரமே. நம்மைப் படைத்த இறைவனிடம் நம்மை நெருங்கிச் சேர்ந்து உறவாட வழிகாட்டும் ஒரு மார்க்கமே அது. கடவுள் மூவொருமை தேவனாக், திரியேக திரிமூர்த்தியாக இருக்கிறார். அவரே இயேசு கிறிஸ்துவாக இந்த

உலகத்தையும் நம்மையும் சகல ஜீவராசிகளையும் படைத்தவர். அவரே மனிதனாக அவதரித்து நமது பாவங்களுக்காக பலியானார். அவர் மூலமாக மாத்திரமே நமக்கு மீட்பு உண்டு என்று முழு இருதயத்தோடும் விசுவாசித்து இப்போது மண்டியிடுங்கள். மனம் உருகி கண்ணீரோடு சொல்லுங்கள். 'வானத்தையும் பூமியையும் படைத்த பரமேஸ்வரனே, எங்கள் பரலோக பிதாவே! நான் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களை எல்லாம் மன்னியுங்கள் தகப்பனே! இயேசு கிறிஸ்துவினுடைய பரிசுத்தமான இரத்தத்தினால் என்னைக் கழுவி சுத்திகரீயுங்கள். ஆண்டவரே. என்னை உம்முடைய மகனாக, மகளாக ஏற்றுக் கொள்ளுங்கப்பா. என்னை இரட்சியும். என் முழுக் குடும்பத்தையும் இரட்சியும். உம்மை அறிகின்ற அறிவில் அனுதினமும் வளர, உமது கிருபையில் வளர எனக்கு உதவி செய்யும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் எங்கள் பரலோக பிதாவே. ஆமேன்'.

செய்த பாவங்களை அறிக்கை இடு

முழங்காலில் நின்ற வண்ணமாகவே செய்த பாவங்கள் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் அவர் பாதத்தில் கொட்டி அழுங்கள். நாம செஞ்சது எல்லாமே அவருக்குத் தெரியும். எதையும் மறைக்காம அதை அறிக்கை இடுங்க. நீங்க எந்த மனுஷன் கிட்டேயும் இதைச் சொல்லலை. உங்க பெட்ரூம் அல்லது தனி ரூம்மை பூட்டிக்கிட்டு நம்மை படைச்ச ஆண்டவர் கிட்ட சொல்றீங்க. அதுனால எந்த தயக்கமும் வேண்டாம். எல்லாப் பாவங்களையும் சொல்லுங்க. சொன்ன பொய், அடுத்தவங்க மனசு புண்படும்படியா பேசினது, குற்றப்படுத்தி சொன்னது, வம்பு, வீம்பு, வைராக்கியம், கோபம், சண்டை, பொண்ணுங்களை சைட் அடிச்சது, செய்த வேசித்தனம், விபச்சாரம், திருட்டு, மனைவியை கை நீட்டி அடிச்சது, திட்டினது, மாமியார், மாமனாரைப் பத்தி தப்பா பேசினது, வீட்டுக்கு வந்த மருமகளை கொடுமைப்படுத்தினது என எல்லாத்தையும் ஒண்ணு விடாம கொட்டிடுங்க. நீங்க எப்பேர்ப்பட்ட கொடிய பாவத்தை செய்திருந்தாலும் ஆண்டவர் அதை மன்னிச்சுடுவார். இனிமே நான் எந்தப் பாவமும் செய்யாதபடிக்கு என்னை வழி நடத்துங்கப்பான்னு கண்ணீரோட கேளுங்க. இனி மேற்கொண்டு எந்த தப்புமே பண்ணாம இருக்க தினமும் அவரோட பரிசுத்த வேதாகமத்தை பக்தியோட படிங்க. அதன்படி நடங்க.

கிறிஸ்துவில், அவரின் கிருபையில் வளருங்கள்

ஞாயிற்றுக்கிழமை காலையில ஒரு இரண்டு மணி நேரம் உங்க வீட்டுக்கு பக்கத்தில இருக்கக் கூடிய ஒரு கிறிஸ்தவ தேவாலயத்துக்கு தவறாம தொடர்ந்து போங்க. அங்கே இருக்கிற மனுஷங்களைப் பாக்காதீங்க. ஆண்டவரை மாத்திரம் பாருங்க. அங்கே சொல்லக் கூடிய செய்திகளைக் கேளுங்க. அங்கே வருகின்றவர்களோட பழகுங்க. இயேசு கிறிஸ்துவைப் பத்தியும் அவரின் உபதேசங்களைப் பற்றியும் அதிகம் தெரிஞ்சுக்கோங்க.

அதன்படி பயபக்தியோட நடங்க. பாவங்களை அறிக்கையிட்டு பாவத்துக்கு மரித்து நீதிக்குப் பிழைக்க அங்கு முழுகி ஞானஸ்நானம் எடுங்க. ஞானஸ்நானம் எடுப்பது உங்களை மதமாற்றம் செய்யவோ, கிறிஸ்தவர்களாகவோ மாற்ற அல்ல. பாவ விமோசனம் பெறவும், பரிசுத்தமாகவும், ஆண்டவரோட பிள்ளையாக மாறவுமே. அப்படி செய்யும் போது உங்கள் வாழ்க்கை மாறும். நீங்களும் நீங்கள் உயிருக்குயிராய் நேசிக்கின்ற உங்கள் தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள், உடன்பிறந்தோர் அனைவருமே பரலோக பிரஜைகளாக, சொர்க்கவாசிகளாக மாறுவது நிச்சயம்.

ஆன்மீக அறிவை விரிவாக்கும் அருமையான NILT

நம் இந்து மத வேதங்கள், வேதாந்தங்கள், உபநிஷத்துக்கள், புராணங்களில் எல்லாம் இயேசு கிறிஸ்துவைப் பற்றி இன்னும் என்ன சொல்லப்பட்டு இருக்குன்னு தெரிஞ்சுக்கிடணும்னு ஆசையா? கடைசி பக்கத்தில கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை நூல்களை வாங்கிப் படியுங்க. தெளிவு கிடைக்கும். அதையும் விட ஒரு லேசான வழி. National Institute of Leadership Training (NILT)ன்னு ஒரு அருமையான பயிற்சி நிறுவனம் (508, 22nd sweet, TNHB Colocny, Korattur, Chennai 600 080) இருக்கு. இந்து மத வேதங்கள், புராணங்களையெல்லாம் அப்படியே சும்மா கரைச்சுக் குடிச்சவங்க அங்கே வருஷத்துக்கு இரண்டு மூணு தடவை மூணு நாளைக்கு ஒரு செமினார் நடத்துறாங்க. காலையிலேந்து சாயங்காலம் வரைக்கும் கிளாஸ். சாப்பாடு, ஸ்டடி புக்ஸ் எல்லாத்துக்கும் சேர்த்து ஒரு ஆளுக்கு ரூ.200 மாத்திரம் தான் ஃபீஸ். அங்கேயும் நீங்க கலந்துக்கிடலாம். இல்லேன்னா நீங்க போகிற சர்ச்சுலேயும் இந்த மூன்று நாள் செமினாரை ஏற்பாடு செய்யலாம். மூணு நாள் கலந்துக்கிட்டீங்கன்னா அப்படியே அசந்து போயிடுவீங்க. ஒரு பக்கம் அடச்சே, இவ்வளவு நாளும் நாம எவ்வளவு விஷயங்களை தெரிஞ்சக்காமலே இருந்திருக்கிறோம்னு அப்படியே நொந்து போவீங்க. இன்னொரு பக்கம் இது உங்களுடைய கண்களை மாத்திரமில்லை, உங்கள் இனத்தார், ஜனத்தார், உற்றார் உறவினர்கள், நண்பர்கள், கூட வேலை பாக்குறவங்க, உங்க ஏரியாவில இருக்கிறவங்கன்னு பல பேருடைய கண்களும் திறக்கப்பட உதவியாக இருக்கும்.

உங்களால பரலோகமே களி கூறும்

அவர்களும் உங்கள் மூலமாக சத்தியத்தை அறிந்து கொள்வார்கள். அவர்களும் பாவ வாழ்க்கையிலிருந்து மனம் திரும்புவார்கள். *'மனம் திரும்புகின்ற ஒரே ஒரு பாவியின் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்குமே'.* யாராவது ஒருத்தர் மனம் திருந்தினா, அவனுடைய பாவ வாழ்க்கை, குடிப்பழக்கம், சிகரெட் பழக்கம், போதைப்பழக்கம், சூதாட்டம், வேசித்தனம், விபச்சாரத்திலிருந்து மனம் மாறி திருந்தினான்னா,

அவன் மனைவி, குழந்தை குட்டிகள், அப்பா, அம்மா, கூடப்பிறந்தவங்க மாத்திரமல்ல, பரலோகமே மகிழ்ந்து களி கூறுமாம். பரலோகமே மகிழ்ந்து களி கூறுவதற்கு நீங்க காரணமா இருக்கப் போறீங்கன்னா, பரலோகத்திலே உங்க பங்கு எவ்வளவு அதிகமா இருக்கும்னு நெனைச்சுப் பாருங்க. 'கால் மிதிக்கும் இடமெல்லாம் கர்த்தருக்கு சொந்தமாகணும்'னு வெறும் *பாட்டு மட்டும் பாடிக்கிட்டு இருக்கிறோம். என்னிக்கு சொந்தமாகிறது?* ***'எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறியவும் அவர் சித்தமுள்ளவராக இருக்கிறார்'***னு 1 தீமோத்தேயு 2:4ல வேதம் சொல்லுது. ஒருத்தரும் கெட்டு நரகத்துக்கு போகக் கூடாதுங்கிறது தான் தேவ சித்தம். இதை எப்படிச் செய்யுறது? பைபிள்ல என்ன சொல்லப்பட்டு இருக்குன்னு நீங்க சொன்னா யாராவது ஏத்துப்பாங்களா? உங்களோட இந்து மத வேதங்கள், புராணங்கள் என்ன சொல்லுது பாருங்கன்னு அவங்க வேதத்திலிருந்தே எடுத்துச் சொன்னீங்கன்னா, அட நாம எவ்வளவு பயித்தியக்காரத்தனமா இவ்வளவு நாளும் வெறும் நிழலை கும்பிட்டுக்கிட்டு இருந்தோம்னு தெளிவடைஞ்சு சத்தியத்தை புடிச்சுப்பாங்க. அந்த உன்னதமான பணியை நீங்களும் செய்யணும், ஒருத்தருமே கெட்டுப் போயிடக் கூடாதுங்கிற கடவுளோட சித்தத்தை நீங்களும் நிறைவேத்தணும்கிறதுக்காவே NILT இது போன்ற செமினார்களை அவங்க இருக்கிற இடத்திலேயும், நீங்க ஏற்பாடு செய்கின்ற இடத்திலும் வந்து நடத்திக் கொடுப்பாங்க. **NILT**யில இருக்கிறவங்க எல்லாருமே இந்து மத வேதங்களை எல்லாம் பல வருஷங்கள் அலசி ஆராய்ந்து அதில கரைகண்டு டாக்டரேட் பட்டம் வாங்கினவங்க, பல ஆராய்ச்சி நூல்களை எழுதினவங்க. இந்த செமினார் உங்களுக்கு மிகவும் பிரயோஜனமா இருக்கும்.

ஒருவனை மரணத்திலிருந்து இரட்சிக்கிறீர்கள்

இந்த செமினார் பற்றி இன்னும் தெரிஞ்சுக்க விரும்பினா அந்த ஸ்தாபனத்தின் தலைவர் திரு. S.J.பாண்டித்துரை அவர்களை **044–26871563/ 26871777** என்ற தொலைபேசியில காண்டாக்ட் பண்ணுங்க. அவங்களோட வெப் சைட்டையும் பாருங்க. www.niltindia.org (email : niltindia@gmail.com). எப்பேர்ப்பட்ட ஒரு உன்னதமான பணிக்கு இவங்க உங்களை தயார்படுத்துறாங்க தெரியுமா? ***'உங்களில் ஒருவன் சத்தியத்தை விட்டு விலகி மோசம் போகும் போது நீங்கள் அவனைத் திருப்பினால், தப்பிப் போன மார்க்கத்திலிருந்து ஒரு பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்திலிருந்து இரட்சித்து, திரளான பாவங்களை மூடுகிறான் என்று அறியக் கடவன்'*** என்று வேதம் யாக்கோபு 5:19,20ல கூறுகிறதே.

பரலோக பிரஜைகள் ஆவோம் வாருங்கள்

வாருங்கள் எனது அன்பான சகோதர சகோதரிகளே. ஆத்துமாக்களை மரணத்திலிருந்து இரட்சித்து பரலோக பிரஜைகளாக மாற்றுவோம். நமது

தேசத்தையே சொர்க்க பூமியாக மாற்றுவோம். நம் தேசத்திலுள்ள அனைத்து ஜாதி மக்களையும் ஆண்டவருடைய பிள்ளைகளாக மாற்ற இயேசுவை அவர்களுக்கு அறிவித்து இன்று ஜாதியின் பெயரால், மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால், நதிகளின் பெயரால் நடக்கும் எல்லா வன்முறை தீவிரவாதங்களையும் மாற்றுவோம். ஒரு தாய் வயிற்று மக்களாக, இயேசு கிறிஸ்துவின் பிள்ளைகளாக, பரலோக பிரஜைகளாக நாம் அனைவரும் மாறுவோம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களை ஆசீர்வதிப்பாராக.

BIBLIOGRAPHY

1. History of Christianity in India. Source materials - M.K.Kuriakose
2. An Introduction to Church History - F.Hrangkhuma
3. Church History - John Foster
4. Pentecost and after - M.R.Dehaan/ M.D
5. Highlights of Church History - Howard F.Vos
6. After the Apostles - John Foster
7. From Jerusalem to New Delhi - M.F.Gibbs
8. Beginning from Jerusalem - John Foster
9. The Development of Civilization and Religion in India and its Influence on the World Society - Dr. Alexander Harris.
10. Christianity in Hinduism - Dr.M.Deivanayagam, M.A.Ph.D., Dr.D.Devakala M.A.Ph.D
11. Comparative Religion - Kedar Nath Tiwari
12. Asian Religions - Geoffrey Painder
13. Bharatheeya Matha Samgraham - R.Krishnan Kutty
14. சிவஞான போதம் உரை – டாக்டர் மு.தெய்வநாயகம்
15. திருக்குறள் புத்தாய்வு – டாக்டர் இரா.அருளப்பா
16. திருநீறா? சிலுவையா? – டாக்டர் மு.தெய்வநாயகம்
17. புத்த சமயம் – எம்.ஏ. இரத்தின ராஜா
18. சிந்துவெளி தொல் தமிழ் நாகரீகம் – பி. இராமநாதன்
19. விவிலியம் திருக்குறள் சைவ சித்தாந்தம் ஒப்பாய்வு – டாக்டர் மு. தெய்வநாயகம்
20. கிறித்துவமும் தமிழும் – மயிலை சீனி வேங்கடசாமி
21. இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு – M. சுந்தர் யேசுவடியான்
22. இந்து நாகரீகமா – நயவஞ்சகமா? – அம்பேத்கார்

23. மொஹஞ்செதாரோ அல்லது சிந்துவெளி நாகரீகம்
– டாக்டர் திரு.மா.இராசமாணிக்கனார்
24. தமிழர் சமயம், தமிழர் வேதம், தமிழகத்து கோயில்கள்
– யு. சுப்ரமணியன், ஐ.ஏ.எஸ்
25. தோமா வழி ஆதி இந்தியக் கிறிஸ்தவம் – முனைவர் யா.தா.பாசுகரதாசு
26. சிந்துஸ்தான் டைம்ஸ் – M. சுந்தர் யேசுவடியான்
27. Dravidian Lineages A Social study - Dr.M. Immanuel
28. Christian Hindu Interaction in Tamil Sangam Literature - Pr.T.Sam
29. Thirukkural and its Central thousaht - Most Rev.Dr.R. Arulappa
30. History of the Christian Church - Henry C. Sheldon
31. தமிழ் பக்தி இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் – டாக்டர் தெ. தேவகலா
32. Hinduism - Nirael C. Choudhury, Oxford University Press
33. Dravidian India T.S - Sesha Iyengar, Asian Educational Services, New Delhi.
34. Mohanjadaro & Harappa Civilization - John Marshall, London
35. The System of Vendata - Paul Deussen
36. Introduction to Vedanta - Narasimha Iyengar, Madras
37. History of Tamils (From earliest times to 600 AD) - Srinivas Iyengar, Asian Educational Services, New Delhi.
38. Vaishnavism and Christianity - Dr.J.D. Baskara Doss
39. அவதாரமும் கிறிஸ்தவமும் – டாக்டர் J.D. பாஸ்கர தாஸ்
40. Sat Guru Aradhana - Ebe Sunder Raj
41. உலகப் பெரு மதங்களில் ஒரு புதையுண்ட வரலாறு – இந்தியாவின் ஆதி கிறிஸ்தவம் – M.கிறிஸ்டோபர்.
42. வேதாந்தமும் கிறிஸ்தவமும் – டாக்டர் J.D. பாஸ்கரதாஸ்
43. திராவிடமும், திராவிட இந்தியாவும் – எஸ். எல். சாகர் வெளியீடு. எம். சுந்தர் யேசுவடியான்
44. ஒரு அன்புக் கடவுளின் உண்மைக் கதை – டாக்டர் கா. சண்முக நாதன்

எஸ். தாயப்பன் எழுதிய இதர நூல்கள். இவைகள் எதைப் பற்றி?

1. என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (தமிழ், ஆங்கிலம், கன்னடம், மலையாளம், தெலுங்கு, VCD(தமிழ், ஹிந்தி, கன்னடம்)

58 வயசு வரைக்கும் தீவிர வைராக்கியமுள்ள இந்துவாக, விக்கிரஹ ஆராதனைக்காரனாக, இயேசு எதிர்ப்பாளனாக இருந்த சகோ. தாயப்பனையும், அவரின் மனைவி, மகன் கார்த்திக், சக்தி, மகள் காயத்ரி அனைவரையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எப்படித் தொட்டார், 18 ஆபரேஷன்கள் செய்து கோமா நிலைக்குப் போயி அமெரிக்கன் டாக்டர்களே கை விட்டு, கருணைக் கொலை செய்து விடுங்கள் என்று சொல்லப்பட்ட நிலையிலே இயேசு கிறிஸ்து கார்த்திக்கை எப்படி அற்புதமாக காப்பாற்றினார் என எழுதப்பட்டுள்ள சாட்சி நூல். இது படிக்கின்ற எவருடைய உள்ளத்தையும் உலுக்கி எடுக்கும். தமிழில் 2 லட்சத்திற்கும் அதிகமாக விற்கப்பட்ட ஒரே நூல்.

2. சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள் (தமிழ்).

இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வம். தெய்வம் என்ற சொல்லப்படுகின்ற மற்ற எதுவும் தெய்வம் இல்லை. விக்கிரஹங்களில் தெய்வம் இல்லை என அழுத்தம் திருத்தமாக ஆதாரத்தோடு அகத்திய முனிவர், அழுகுனிச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், கோரக்க முனிவர், பட்டிணத்து அடிகள், திருமூலர், சிவவாக்கியர், போகர், களாய்ச் சித்தர், வால்மீகர் போன்ற பல சித்தர்களின் பாடல்களின் விளக்கத்தோடு எழுதப்பட்ட நூல். 75000 பிரதிகளுக்கு மேல் விற்பனையில்.

3. பாவத்தின் சம்பளம் நரகம் (தமிழ், ஆங்கிலம்)

திருடினாத் தான் பாவம், கொலை, கொள்ளை, ஒரு பெண்ணை கற்பழித்தல் போன்றவைகள் தான் பாவம் என்று இல்லை. ஆண்டவரின் பார்வையில் எதெல்லாம் பாவமாக இருக்கிறது, கிறிஸ்தவர்களாக இருந்து கொண்டே, கோயில், மசூதிக்கு போய்க் கொண்டே எத்தனை பாவங்களை அன்றாடம் நாம் செய்து கொண்டு இருக்கிறோம் என்றும், நியாயத் தீர்ப்பு, பரலோகம், நரகம் எப்படி இருக்கும் எனவும் பல சாட்சிகளோடு எழுதப்பட்ட ஒரு நூல் இது. படிப்பவர் எவரையும் பாவம் செய்ய தயங்க வைக்கும் என்பது திண்ணம். 70,000 பிரதிகள் விற்பனையில்.

4. இயேசு கிறிஸ்து உன்னோடு பேசுகிறார் (தமிழ்)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மோடு பேசினால் என்ன பேசுவார்? நாம் எப்படி இருக்கணும்னு அவர் விரும்புகிறார்? அவருடைய வருகைக்கு நாம

ஆயத்தமா இருக்கிறோமா? மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துகிறோமா? என நம்மை நாமே ஒருமுறை அலசி ஆராய்ந்து பார்த்து ஆவியில் நம்மை அனலாக மாற்றும் என்பது உறுதி. ஒவ்வொரு கிறிஸ்தவர் கையிலும் இருக்க வேண்டிய ஒரு நூல். 30000 பிரதிகள் விற்பனையில்.

5. இந்தியாவுக்கு இயேசு கிறிஸ்து தேவை ஏன்? (தமிழ்)

இயேசு கிறிஸ்து கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல, இந்தியர்களுக்கு மாத்திரமல்ல, இந்த உலகத்தில் பிறந்த அனைவருக்குமே அவர் தேவை என்பதை பல ஆதாரங்களோடு, சாட்சிகளோடு, மறுக்க முடியாத பல உண்மை நிகழ்வுகளோடு எழுதப்பட்டுள்ள நூல். திருக்குறள் ஒரு கிறிஸ்துவ நூல். விவேகானந்தர் இயேசுவைப் பற்றி என்ன சொல்லி இருக்கிறார், கர்னாடகாவிலும், ஒரிசாவிலும் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடந்த பல வன்முறைச் சம்பவங்களை கண்ட பிறகும், கிறிஸ்தவர்கள் ஏன் தற்கொலைப் படையாக மாறி பழிக்குப் பழி வாங்கவில்லை என்பதை அற்புதமாக விளக்கும் ஒரு நூல் இது. 20,000 பிரதிகள் விற்பனையில்.

6. என் ஊழியக்காரனே...!? (தமிழ்)

ஆண்டவருக்கு ஊழியம் செய்கின்ற ஊழியக்காரர்கள், எப்படி இருக்க வேண்டும், சபைகள் ஏன் நிரம்பி வழியவில்லை, சுவிசேஷம் ஏன் பரவவில்லை, இந்தியா கர்த்தருக்கு சொந்தமாக என்ன செய்ய வேண்டும் என பல அரிய அறிவுரைகளைத் தரும் நூல் இது. ஒவ்வொரு ஊழியக்காரரையும் தம்மையும், ஊழியத்தையும் தற்பரிசோதனை செய்து கொள்ளத் தூண்டும் ஒரு நூல் இது. 10,000 பிரதிகள் விற்பனையில்.

7. கிறிஸ்தவர்களின் 100 சந்தேகங்களுக்கு பதில் (தமிழ்)

முழுக்கு ஞானஸ்நானம் அவசியமா? அந்நிய பாஷை பேசினால் தான் அபிஷேகம் இருக்குன்னு அர்த்தமா? அபிஷேகம் இல்லாம பரலோகம் போக முடியாதா? மேரி, பவுல், அந்தோணியாருக்கு நம் பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் இருக்கா? கிறிஸ்தவர்கள் காதலிக்கலாமா? ஊழியம் செய்ய விசேஷித்த அழைப்பு, அபிஷேகம் தேவையா? போன்ற 100 எடக்கு மடக்கான கேள்விகளுக்கு பதில் தரும் நூல். கிறிஸ்தவர்களின் பல சந்தேகங்களை தீர்க்கும் நூல் இது. 10,000 பிரதிகள் விற்பனையில்.

8. சைவமும், வைணவமும் கிறிஸ்தவமே (தமிழ்)

ஆச்சரியமாக இருக்கிறதா? கி.பி 49ல் இந்தியாவிற்கு வந்த புனித தோமாவின் நற்செய்தியினால் உண்டானதே சைவமும், வைணமும் என ஆதாரங்களோடு, சரித்திர வரலாறுகளோடு படிப்பவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் நூல் இது. சைவர்களும், வைணவர்களும் பின்பற்றுவது தோமாவின் ஆதி இந்திய

கிறிஸ்தவக் கொள்கைகளையே என கிறிஸ்தவர்களும் புரிந்து கொண்டு அதை இந்துக்களுக்கும் புரிய வைத்து 'நீங்க கிறிஸ்தவ கொள்கைகளை உங்கள் பாணியில் ஏற்றுக் கொண்டாலும், நீங்கள் ஆராதிப்பது ஒரு நிழலை மட்டுமே. ஒரு டூப்ளிகேட்டையே ஆராதிக்கிறீர்கள். ஒரிஜினல் இங்கே இருக்கிறது. இயேசுவின் மூலமே பூரண இரட்சிப்பு, நித்திய வாழ்க்கை, பாவ மன்னிப்பு, பரலோகம் கிடைக்கும்' என அவர்களுக்கு எளிதாக புரிய வைத்து அவர்களையும் இரட்சிப்பின் பாதையில் வழி நடத்த உதவும் ஒரு உன்னத நூல் இது.

9. எழுந்து கட்டுவோம் (VCD தமிழ்)

இயேசு கிறிஸ்துவால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனுமே ஆண்டவருக்கு ஊழியம் செய்யணும், சுவிசேஷத்தை அறிவிக்கணும், கர்த்தர் செய்த நன்மைகளை சாட்சிகளாக புற ஜாதிகளிடம் கூற வேண்டும். சுவிசேஷம் பரவ, தேசம் சந்திக்கப்பட நாம் ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டும் என வேதம் கூறுகிறது என்பதை மிகத் தெளிவாக சகோ.தாயப்பன் இந்த VCDயில் கூறியுள்ளார். கேட்கும் எவரையும் தட்டி எழுப்பும். அனல் மூட்டும். வாங்கி நீங்களும் பாருங்கள். மற்ற சபை மக்களுக்கும் கொடுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

உங்கள் இனத்தார், ஜனத்தார், நண்பர்கள்
நரகத்துக்கு போகக் கூடாதா?

மேலே குறிப்பிட்டுள்ள புத்தகங்கள், VCDயில் வரிசை எண் 4,6,7,9 தவிர மற்ற புத்தகங்கள் எத்தனை வாங்க முடியுமோ வாங்கி ஜெபத்தோடு அவர்களுக்கு கொடுங்கள். அவர்கள் இரட்சிக்கப்படுவது உறுதி. எல்லா நூல்களும், VCDகளும் ஒவ்வொன்றும் ரூபாய் பத்து மட்டுமே. இந்த நூல்கள் கிடைக்கும் இடம் – எஸ். தாயப்பன், 12, ஜி.டி. நாயுடு தெரு, பாலாஜி அவென்யு – 1, சிட்லபாக்கம் மெயின் ரோடு, சேலையூர் போஸ்ட், சென்னை–600073. நேரிலும், D.D, M.O. அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியர் குறித்து...

துடிப்பும், வேகமும், விவேகமும், நாவன்மையும் உள்ள இவரைப் பார்த்தால் யாருமே இவருக்கு 68 வயது என்று நம்பமாட்டார்கள். இந்திய விமானப்படையில் 26 ஆண்டுகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் பணியாற்றிய பின்பு, பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் ஒரு தொண்டு நிறுவனத்தில் 6 ஆண்டுகள் நிர்வாக அதிகாரியாகவும், பின்னர் ஃபென்னர் இந்தியா கம்பெனியின் டெக்ஸ்டைல் டிவிசனுக்கு பெர்சனல் மேனேஜராகவும் 6 ஆண்டுகள் பணியாற்றியவர். நாடகம், கதாகாலட்சேபம், பல்கலை நிகழ்ச்சிகள், பாட்டு, டிவி சீரியல்கள் என கலைத் துறையில் வெற்றிக் கொடி நாட்டியவர். சினிமா நடிகர் டெல்லி கணேசை முதன் முதலாக டெல்லியில் நாடக மேடையில் அறிமுகப்படுத்தியவர். பியர்லெஸ்ஸில் தன்னுடைய மார்க்கெட்டிங் திறமையால் இன்ஸ்பெக்டர் பதவி வரை உயர்ந்தவர். இப்படி சகலகலா வல்லவரான இவர் ஒரு தீவிர, பக்தி வைராக்கியமுள்ள இந்துவாகவும், இயேசு எதிர்ப்பாளராகவும் இருந்தார். தேவன் இவர்களை தெரிந்துக்கொண்ட விதம், மற்றும் இவரின் தனிப்பட்ட, குடும்ப வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து செய்த எண்ணிமாளாத அற்புதங்களையும், நன்மைகளையும் சாட்சியாக பல பொதுக் கூட்டங்களிலும், 700க்கும் மேற்பட்ட திருச்சபைகளிலும் கூறிவருகிறார். இவரின் சாட்சியும், செய்தியும், இவர் எழுதிய சாட்சி புத்தகமும், மற்ற நூல்களும் எப்பேர்ப்பட்ட கடின இருதயத்தையும் உடைப்பதாக, உயிர்ப்பிப்பதாக, அனல் மூட்டுவதாக, சபைகளை பலப்படுத்துவதாக, சபையோரை ஆத்தும ஆதாயம் செய்பவர்களாக மாற்றுகின்றது என்றால் அது மிகையல்ல. கர்த்தர் தமது நாம மகிமைக்கென்று இவரையும், இவரது குடும்பத்தாரையும் விசேஷமாக தெரிந்து கொண்டுள்ளார்.

Cossmic Printers, Cell: 98400 79872